20.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 24

# உதயன்

சுடர் 27
கதிர் 164

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை (08/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# கைதான இளைஞர்கள் விரைவில் விடுதலை

## பிள்ளையார் கோயிலும் உடைக்கப்படமாட்டாது சம்பந்தனிடம் கோத்தபாய நேற்று உறுதியளிப்பு



கொழும்பு, மே 8
சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்களெனவும், திருகோணமலை பொது வைத்தியசாலை வளவிலுள்ள பிள்ளையார் கோவில் உடைப்பு விடயத்தில் நீதியான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமெனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்று பாதுகாப்புச் செயலாளரை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

திருகோணமலையில் கடந்தவாரம் திடீரென தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டமை

04

## சர்வதேசத்திடம் மக்களை பணயம் வைத்துள்ளது அரசு

கொழும்பு, மே 8
உலக சந்தையின் விலைக்கு அப்பால் சென்று அரசு நாட்டின் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரித்து, சர்வதேசத்திடம் நாட்டுமக்களைப் பணயம் வைத்துள்ளது எனக் குற்றஞ் சாட்டிய ஐ.தே.கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க, அரசு மீது தொடுக்கப்படும் எந்தவொரு கேள்விக்கும் அவர்களிடம் உண்மையானதும், நம்பகமானதுமான பதில் இல்லையெனவும் கூறியுள்ளார்.

அரசிடம் உண்மைத் தன்மையும், திட்டமிட்ட செயற்பாடுகளும் இல்லாமையால் தற்போது அதில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. அமைச்சர்கள் தமக்குள் பிளவுபட்டிருந்தாலும், நாட்டில் அரசால் அரங்கேற்றப்பட்டுவருகின்ற அராஜக செயல்களுக்கு அமைச்சர்களே பொறுப்புக்கூற வேண்டும். அரசின் அராஜகச் செயல்களை எதிர்த்து நாம் தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருப்போம் எனவும் அவர் மேலும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தி

04

## இந்தியர்கள் இருவர் கைது

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து அனுமதியின்றி புடைவை விற்பனையில் ஈடுபட்ட இந்திய பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கனுவாஞ்சிக்குடி முகாம் படையினர் காத்தான்குடி - கிரான்குளம் பகுதியில் வைத்து இவர்களை கைது செய்துள்ளனர். சந்தேகநபர்கள் விற்பனை செய்து வந்த புடைவை வகைகளையும் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். அதன் பெறுமதி 85000 ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி விபத்தில் இரு இளைஞர்கள் சாவு

பஸ்ஸுடன் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். அஹுங்கல்ல பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. உரம் ஏற்றிச் சென்ற லொறியொன்று, பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட போது அவ்விரு வாகனங்களுக்கிடையில் மோட்டார் சைக்கிள் சிக்கியது. மோட்டார் சைக்கிளின் பின்னால் லொறி மோதியது. அதன்பின் பஸ்ஸின் பின்புறத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இரு இளைஞர்களும் பலபிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். எனினும் அவர்கள் இறந்துவிட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

## ஐ.நாவில் வெசாக்

வருடாந்த சர்வதேச வெசாக் பூரணை தினத்தை இலங்கை நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்வில் கொண்டாடியது. இந்த நிகழ்வில் பல தூதுவர்கள், ஐக்கிய நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். தற்போது வெளிநாட்டு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கி மூன் நேற்று நடைபெற்ற வெசாக் பூரணை தினத்துக்கான தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

## மறுத்தார் மன்னார் அரச அதிபர்

திருக்கேதீஸ்வரத்தில் பௌத்த பாடசாலை ஒன்றும், மன்னாரில் அரச அதிபர் தலைமையில் பௌத்த சங்கம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகளை மன்னார் அரச அதிபர் சரத் ரவீந்திரா மறுத்துள்ளார் என்று அகில இலங்கை இந்து மா மன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

## ஹெரோயினுடன் இரு சிறுவர் கைது

அநுராதபுரம் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 17 வயதான இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 20 கிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். அநுராதபுரம் பிராந்திய விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## நவநீதம்பிள்ளைக்கு எதிராக அரசு மீண்டும் போர்க்கொடி



கொழும்பு, மே 08
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக இலங்கை மீண்டும் போர்க்கொடி தூக்கியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வருவதில் நவநீதம்பிள்ளையும் அவரது செயலக அதிகாரிகளும் பங்காற்றியுள்ளதா

04

## களவாக வெளிநாடு சென்ற 225 பேர் ஆபிரிக்க நாடுகளில் அந்தரிப்பு

### முகவரை நம்பி ஏமாந்தோர் என்கிறார் ஐ.ஓ.எம். அதிகாரி



யாழ்ப்பாணம், மே 8
இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்ல முயன்றவர்களில் 225க்கும் மேற்பட்டோர் உரிய நாடுகளுக்குச் செல்ல முடியாமல் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கைவிடப்பட்ட நிலையில் அந்தரிப்பதாக புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் (ஐ.ஓ.எம்.) இலங்கைக்கான தலைமை அதிகாரி ரிச்சட் டன்சிகன் தெரிவித்தார்.

நேற்று உதயனுக்கு அவர் இதனைக் கூறினார்.

04

## பெண் அதிகாரியை சுட்டுக்கொன்று தன்னையும் மாய்த்தார் சிப்பாய்

திருமலை, மே 8
திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நேற்றுப் பிற்பகல் பெண் அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் மாய்த்துக் கொண்டார் கடற்படைச் சிப்பாய் ஒருவர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் டொக்யார்ட் கடற்படைத் தளத்தில் பணியாற்றும் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர். கடற்படையின் பெண் அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றார்.

அதையடுத்து அந்த கடற் படைச்

04

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை

## ஹெல உறுமயவின் நிலைப்பாடு இன்று

கொழும்பு,மே 8
நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாடு இன்று வெளியிடப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

ஆணைக்குழு இறுதி அறிக்கை மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இன்று செவ்வாய்க்கிழமை அரசிடம் ஒப்படைக்கப்படும்

04

## தமிழர் பிரதேசம் எங்கும் விகாரை மத ரீதியாக மூண்டுள்ளது போர்

### இந்து மதத் தலைவர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 8
போர்க் காலத்தில் அழிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்கு நட்டஈடு வழங்காமல் பாரபட்சம் காட்டும் அரசு, தமிழர்களின் பாரம்பரிய இடங்களில் பௌத்த விகாரைகள் அமைப்பதைத் துரிதப்படுத்தியுள்ளது. இது நாட்டில் மத ரீதியாக மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட வழியேற்படுத்தியுள்ளது.

அகில இலங்கை இந்து மா மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கோயில் வீதியில் உள்ள அதன் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்து மதத் தலைவர்கள் இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு நாணயங்களை கொள்ளையிட்டோர் மறியலில்

கொழும்பு, மே 8

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக 35,795,400 இலங்கை ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 12 சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

வெளிநாட்டு நாணயத்தைக் கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்களைக் கைது செய்த பொலிஸார், பின்னர் புலிகளுக்கு நிதி வழங்கவே இந்தக் கொள்ளையை நடத்தினர் என நீதிமன்றில் தவறான தகவல் வழங்கி சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கச் செய்துள்ளனர் என்று இந்த வழக்கு முன்பு விசாரிக்கப்பட்ட போது 12 சந்தேக நபர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணி கூறினார்.

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட தடுப்புக் கட்டளையின்படி, முதலில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இந்த கட்டளை தற்போது காலாவதி ஆகிவிட்டபடியாலும் புதிய தடுப்புக் கட்டளையைப் பாதுகாப்பு அமைச்சு பிறப்பிக்காத படியாலும் சந்தேக நபர்களைத் தடுத்து வைக்க முடியாது என சட்டத்தரணி வாதிட்டார்.

ஆயினும் கடந்த வியாழக்கிழமை தடுப்புக்காவல் கட்டளையைச் சமர்ப்பிப்பதாகக் கூறி, சந்தேக நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு குற்றவியல் பிரிவினர் கோரினர்.

ஆனால், வியாழக்கிழமை கொழும்பு குற்றவியல் பிரிவினர் தடுப்புக் காவல் கட்டளையைச் சமர்ப்பிக்கத் தவறியதால் பொலிஸார் சந்தேக நபர்களைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்குமாறு கேட்க முடியாது எனக் கூறி அவர்களை விடுதலை செய்யுமாறு அவர்களின் சட்டத்தரணி கேட்டுக் கொண்டார். எனினும் சந்தேகநபர்களைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டார். (த)



ஜனாதிபதி அலுவலகமும் ஹுனுப்பிட்டிய கங்கராம விகாரையும் இணைந்து வருடாந்தம் நடத்தும் 'புத்த ரஷ்மி' தேசிய வெசாக் வலயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (த)

## இஸ்ரேல் தூதரகம் அமைவதை எதிர்த்து ஐ.தே.க. போராட்டம்

இலங்கைக்கான இஸ்ரேல் தூதரகம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பில் ஏனைய முஸ்லிம் அமைப்புகளுடனும் பேசவுள்ளது.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இஸ்ரேலியத் தூதரகம் மீண்டும் அமைக்கப்படுகின்ற செய்தி இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் கவலையடையச் செய்துள்ளது.

இஸ்ரேலின் முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளை நன்கு தெரிந்துகொண்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இஸ்ரேலிய தூதுவரை இந்நாட்டில் நுழைய அனுமதித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி இஸ்ரேலியத் தூதுவரை வெளியேற்றுவதற்கான மக்கள் போராட்டத்தைத் தொடங்கும். அந்த வகையில் நாம் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம் - என்றார். (த)

# இலங்கை - ஜோர்தான் பேச்சு திடீரென ரத்து

கொழும்பு, மே 8

இலங்கை மற்றும் ஜோர்தான் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கு இடையில் இந்த வாரம் இடம்பெறவிருந்த இரு தரப்புப் பேச்சுக்களைத் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜோர்தான் பிரதமர் அவ்ன் கசாவ்னே திடீர் பதவி விலகியதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக குறித்த பேச்சு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்னவின் இணைப்புச் செயலாளர் சிசிர விஜேசிங்க வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

**மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகள் காரணமாகவே பேச்சுகள் ரத்து செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.**

ஜோர்தானின் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான அவ்ன் கசாவ்னே, ஜோர்தானின் வர்த்தகத்துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், பெருந்தோட்ட ஒத்துழைப்பு அமைச்சர், பொது வேலை மற்றும் வீட்டு வசதிகள் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் நேற்று முதல் 10 ஆம் திகதி வரை இலங்கைக்குப் பயணம் செய்ய திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில் அரசியல் நெருக்கடிகளால் ஜோர்தான் பிரதமர் பதவி விலகியதை அடுத்து குறித்த பயணம் முற்றாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கைப் பணியாளர்கள் அதிகம் பணிபுரியும் நாடாக ஜோர்தான் விளங்குவதோடு, தற்போது அங்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பல துறைகளில் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

### உணவு ஒவ்வாமை 40 பேருக்கு சுகவீனம்

கொழும்பு, மே 8

மஹியங்கனை 18 வளைவு வீதி திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக சுமார் 40 பேர் திடீர் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு ஒவ்வாமை காரணமாக இவர்களுக்கு வாந்தி, வயிற்றோட்டம், தலைவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டதாக உடதும்பர பொது சுகாதார வைத்திய அதிகாரி ஏ.அபேசேகர தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 30 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வின்போது கலந்து கொண்டவர்களுக்கு ஒப்பந்தக்காரர் ஒருவரால் பகல்வேளை உணவு விநியோகிக்கப்பட்டதாக உடதும்பர பொது சுகாதார வைத்திய அதிகாரி ஏ.அபேசேகர தெரிவித்தார். (த)

## யாழ். மே தினத்தில் பங்கேற்காத உறுப்பினர்களிடம் விளக்கம்

### கோருகிறார் ரணில்

கொழும்பு, மே 8

எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் அதில் பங்கேற்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக்கட்சி இந்த முறை மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியது. இதன்போது சஜித் பிரேமதாஸ, அவருடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸவின் சிரார்த்த நிகழ்வின் நிமித்தம் யாழ்ப்பாணத்துக்குச் செல்லவில்லை.

திலிப் வன்னியாராய்ச்சியும் இதன் காரணமாகவே யாழ்ப்பாணம் செல்லவில்லை. எனினும், கரு ஜெயசூரிய, தயாசிறி ஜயசேகர, புத்திக பத்திரண, ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரளை, அசோக் அபேசிங்க ஆகியோர் காரணங்கள் இன்றியே யாழ்ப்பாணம் செல்லவில்லை.

ரோஸி சேனாநாயக்க, சுஜீவ சேரசிங்க ஆகியோர் வெளிநாடு சென்றமையால் யாழ்ப்பாணம் செல்லவில்லை.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் பல மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களும் யாழ்ப்பாண மே தினத்துக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மே தினக் கூட்டத்துக்கு வராமைக்கான காரணங்களை மதிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்குப் பணித்துள்ளார். (த)

## சமரசிங்க தலைமையில் ஆஸ்திரேலியாவுக்கு குழு



கொழும்பு, மே 8

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான அமைச்சின் முக்கிய அதிகாரிகளை கொண்ட குழுவினர் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு ஆஸ்திரேலியாவுக்குக் கடந்த வாரம் பயணமாகியுள்ளனர்.

இலங்கைத் தேயிலையை ஆஸ்திரேலிய மக்கள் கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் நோக்கிலேயே அமைச்சர் தலைமையிலான குழுவின் இந்தப் பயணம் அமைந்துள்ளதாகப் பெருந்தோட்டத்துறை கைத்தொழில் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு வாரகாலம் ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் அமைச்சர் தலைமையிலான குழு ஆஸ்திரேலியாவில் இலங்கைத் தேயிலையை [illegible] பிரபல்யப் படுத்தும் பல்வேறு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அதிகளவிலான தேயிலையை அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமெனவும் இந்தப் பயணத்தின் ஊடாகச் சிறந்த பயன் கிடைக்குமெனவும் நாங்கள் நம்புகின்றோம் என்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். (த)

### சீனாவை பழிவாங்க பகடைக்காயாக இலங்கை

அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து சீனாவைப் பழிவாங்கும் வகையில் இலங்கை விடயத்தில் தலையிடுகின்றன என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸ், பாரிஸை தலைமையகமாகக் கொண்ட ஜனநாயக மற்றும் ஒத்துழைப்புக்கான கற்கை நிலையத்தின் பணிப்பாளர் ஜோன் லால் லேன்ட் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இந்த இரண்டு நாடுகளும் இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதாகக் கருத்தரங்கு ஒன்றின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்கள் குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## 4 மாதங்களில் 10 வெளிநாட்டு இராஜதந்திரிகள்

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரையில், 10 வெளிநாட்டு ராஜதந்திரக் குழுக்கள் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளன.

அந்தக் குழுக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள்குடியேற்றம், மீளமைப்பு நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் குறித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

கடந்த ஜனவரி மாத ஆரம்பத்தில், [illegible]ரின் மன்னர் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டதுடன், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் பயணம் மேற் கொண்டிருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கை வந்ததுடன், பலஸ்தீன ஜனாதிபதி, இஸ்ரேலின் வெளியுறவுத் திணைக்களப் பிரதிநிதி உள்ளிட்ட பலரும் இலங்கைக்கு வந்திருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டதன் பின்னர், இந்த நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்குமுறையைத் தடுக்க தொழிலாளர் ஒத்துழைப்பில்லை

## வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் விசனம்

*வவுனியா, மே 8*

*முதலாளிகள் மற்றும் நிர்வாகத்தினரால் தாம் பல்வேறு வகையிலும் பாதிப்படைகின்றனர் என்று தெரிவிக்கும் தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் தாம் சார்ந்த நிறுவனங்களின் சரியான விபரங்களை வழங்காமையால் அவற்றிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் திருமதி லீலாவதி ஆனந்தநடராஜா தெரிவித்துள்ளார்.*

வவுனியா மாவட்டத்திலுள்ள தனியார் வர்த்தக நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பல ஊழியர்கள் தமக்குத் தகுந்த வேதனம் வழங்கப்படுவதில்லை, குறிப்பிட்ட நேரத்துக்கு மேலதிகமாக பணிபுரிகின்றபோதும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை, விடுமுறை நாள்களில் வேலை வாங்கப்படுகின்றது என்று முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தாம் பாதிக்கப்படுவதாகவும் பலர் தொலைபேசி மூலமாகவும், கடிதம் வாயிலாகவும் தொழிற்திணைக்களத்தில் முறைப்பாடு செய்கின்றனர். அவ்வாறு முறைப்பாடு செய்யும்போது தாம் சார்ந்த நிறுவனங்களின் சரியான அமைவிடத்தையும், அவை தொடர்பான தகவல்களையும் வழங்குவதில்லை.

இவர்களின் முறைப்பாடு தொடர்பாக எமது அலுவலர்கள் நேரடியாக விசாரணைகளுக்குச் செல்லும் போது முறைப்பாடு செய்தவர்கள் தொழில் வழங்கியோருக்குப் பயந்து உண்மையான தகவல்களை வழங்க மறுத்து வருகின்றனர். இதனால் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது.

### நேரடியாக வந்து முறையிடலாம்

எனவே முறைப்பாடு செய்வதற்கு விரும்புவோர் அலுவலக நேரங்களில் நேரடியாக வந்து சரியான தகவல்களை வழங்கவேண்டும். அப்போது அவர்களின் நலன் பாதிக்காத வகையில் விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் - என்றார்.

மேலும் தனியார் துறை ஊழியர்களின் நன்மை கருதி வாராந்தம் 1½ நாள்கள் கட்டாயம் விடுமுறை வழங்க வேண்டும். அத்தினங்கள் வார நாள்களாகவோ, வார இறுதி நாள்களாகவோ இருக்கலாம். நிறுவனத் தலைவர்கள் தமது நிறுவனப் பணிகள் பாதிக்காத வகையில் ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சுழற்சி முறையில் இதனை மேற்கொள்ள வேண்டும்.

இதேநேரம் குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு மேலாக வேலை பெறுவதாக இருந்தால் அவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

ஆனால் வவுனியா மாவட்டத்திலுள்ள பல நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட இரு சட்ட நடவடிக்கைகளையும் கடைப்பிடிப்பதில்லை என்றும் இதனால் தொழிலாளர்கள் நலன் பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை வவுனியா மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ஜி.எஸ். அப்துல்லா, வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக நிறுவனங்கள் ஊழியர் நலன் சார்ந்து செயற்பட வேண்டும் என்றும், ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுவனங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்றும் ஊழியர்களுக்கான மேலதிக நேர பணிக்கொடுப்பனவை வழங்க வேண்டும் என்றும் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த மே தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம்

கிளிநொச்சி, மே 8

பரந்தன் கோரக்கன் கட்டு நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளையதினம் இடம்பெறவுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி இந்த ஆலயத்தின் உற்சவம் ஆரம்பமானது. தற்போது தினமும் விசேட பூசைகள் நடைபெறுவதுடன் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

உற்சவத்தின் 10 ஆம் நாளான நாளை இறுதிநாள் நிகழ்வுகளாக விசேட பூசைகள், பொங்கல் நிகழ்வுகள், அன்னதான நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

அத்துடன் பக்தர்கள் பறவைக் காவடிகள், ஆட்டக் காவடிகள், பாற்செம்பு ஆகியவற்றைத் தாங்கிய வண்ணம் தமது நேர்த்திக் கடனை நிறைவு செய்வர். சிலர் தீ மிதிப்பிலும் ஈடுபடுவர். கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெறவிருக்கின்றன.

மேலும் பூசைக்குரிய பொருள்களை உரிய காலத்தில் வழங்கி உதவுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-426)

# ரூபா 16 கோடி 90 லட்சம் சுயமுயற்சிக் கடன் வவுனியா சமுர்த்தி வங்கி வழங்கியது

வவுனியா, மே 8

வவுனியா மாவட்டம் சமுர்த்தி வங்கியினால் 16 கோடியே 90 லட்சத்து 83 ஆயிரம் ரூபா சுயமுயற்சிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**3 ஆயிரத்து 410 குடும்பங்களுக்கே அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.**

வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சுமார் 3 ஆயிரத்து 410 குடும்பங்களுக்கே அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் கிராம சேவகர் பிரிவில் ஆயிரத்து 485 குடும்பங்களுக்கு 2கோடியே 72 லட்சத்து 89 ஆயிரம் ரூபாவும் சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 2 ஆயிரத்து 205 குடும்பங்களுக்கு 4 கோடியே 24 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவும், ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த 127 பயனாளிகளுக்கு 19 லட்சத்து ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் செட்டிகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 787 குடும்பங்களுக்கு 1 கோடியே 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், பாவற்குளம் பகுதியிலே 634 பயனாளிகளுக்கு 3 கோடியே 47 லட்சத்து 32 ஆயிரம் ரூபாவும்-

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்து 634 குடும்பங்களுக்கு 3கோடியே 47 லட்சத்து 32 ஆயிரம் ரூபாவும், மாமடு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 538 குடும்பங்களுக்கு 2 கோடியே 80 லட்சத்து 87 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தப் பகுதியிலுள்ள மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அதில் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட செட்டிகுளம் கிராம சேவையாளர் பகுதியில் 30 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், பாவற்குளம் பகுதியிலுள்ள 13 பயனாளிகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும்-

வவுனியா தெற்கில் மாமடு கிராம சேவகர் பிரிவில் 18 குடும்பங்களுக்கு 1 லட்சம் ரூபாவும், பெரிய குளம் பகுதியில் 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டதாக வவுனியா மாவட்ட சமுர்த்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.சபாலிங்கம் தெரிவித்தார். (க-400)



*மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த வெசாக் அலங்காரங்களின் எழில் மிகு தோற்றம். (12)*

# வவுனியா இ.போ.ச. பணியாளர்களுக்கு பணிக்கொடைக் கொடுப்பனவு

வவுனியா, மே 8

வவுனியாவில் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

நாடு முழுவதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பல்வேறு தரங்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ற வகையில் பணிக்கொடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாகக் கடந்த மே தினத்தன்று 250 பணியாளர்களுக்கு இந்தப் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

அதன் அடிப்படையில் வவுனியாவில் நீண்டகாலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த பணிக்கொடைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

வவுனியா இ.போ.ச. வில் பல்வேறு தரங்களில் பணியாற்றிய சுமார் 38 பணியாளர்களுக்கு 47 லட்சத்து 92 ஆயிரம் ரூபா பணிக்கொடையாக வழங்கப்படவுள்ளது.

இதற்கான காசோலைகள் தலைமையகத்தினால் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக உரியவர்களிடம் [illegible] கப்படும் என்று வவுனியா தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க-400)

# தாழ்வுபாட்டில் வீடுகள் கையளிப்பு

மன்னார், மே 8

மன்னார் தாழ்வுபாட்டில் பொலிஸார் நிலைகொண்டிருந்த சில வீடுகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தாழ்வுபாடு பிரதான வீதியில் வைத்தியசாலைக்குப் பின்புறமாகப் பொலிஸார் கடந்த பல வருடங்களாக நிலைகொண்டிருந்தனர். "கமுதா பொயின்ற்" என அழைக்கப்பட்ட இந்தப் பகுதி கடந்த காலங்களில் அச்சத்தைத் தருவதாக அமைந்திருந்தது.

**"கமுதா பொயின்ற்" என அழைக்கப்பட்ட இந்தப் பகுதி கடந்த காலங்களில் அச்சத்தைத் தருவதாக அமைந்திருந்தது.**

இங்கு நூற்றுக் கணக்கான பொலிஸாரும் பொலிஸ் புலனாய்வுத் துறையினரும் தங்கியிருந்தனர். பலர் விசாரணைக்கென அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தற்போது பல வருடங்களுக்குப் பின்னர் பொலிஸார் நிலைகொண்டிருந்த இந்த வீடுகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகளை புனரமைக்கும் பணிகளில் அவற்றின் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

குறித்த வீடுகளின் வளவுகளில் ஆயுதங்கள் எவையும் இருக்குமோ என்று அச்சம் இவர்களிடையே நிலவுவதையும் அவதானிக்க முடிகிறது. (க-12)

## விபத்தில் சிக்கியது மல்லாவி அம்புலன்ஸ்

மல்லாவி வைத்தியசாலையின் அம்புலன்ஸ் தடம் புரண்ட விபத்துச் சம்பவத்தில் அதில் பயணித்த மருத்துவர் கையில் காயமடைந்தார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியவில் ஒட்டறுத்த குளத்தில் இடம் பெற்றது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையிலிருந்து நோயாளரை ஏற்றிக்கொண்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்ற அம்புலன்ஸ் மீண்டும் மல்லாவிக்கு வந்து கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மல்லாவியிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஒட்டறுத்த குளத்தை அம்புலன்ஸ் கடந்து கொண்டிருந்த போது திடீரென்று மோட்டார் சைக்கிளொன்று வீதிக்கு குறுக்கே வந்துள்ளது.

இதனைக் கண்ட அம்புலன்ஸ் சாரதி சடுதியாக பிரேக் போட்டார். இதனால் நிலைதடுமாறிய அம்புலன்ஸ் தடம் புரண்டது. இதில் பயணித்துக்கொண்டிருந்த மல்லாவி வைத்திய சாலையைச் சேர்ந்த மருத்துவரான தினேஸ் அபேசிங்க கையில் காயமடைந்தார். சாரதிக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. சிறு சேதங்களுக்கு அம்புலன்ஸ் உள்ளாகியுள்ளது. (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் மீது கம்பிகளால் தாக்குதல்

## எழுதுமட்டுவாழில் சம்பவம்

தென்மராட்சி, மே 8

விடுமுறை தினத்திலும் மக்கள் பணியில் ஈடுபட்ட கிராம அலுவலரை ஹெல்மட் அணிந்த நிலையில் வந்த நால்வர் கம்பிகளால் தாக்கிக் காயப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் எழுதுமட்டுவாழ் வடக்குப் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நேற்று விடுமுறை தினமாக இருந்த போதிலும் பதில் கடமையாற்றும் எழுதுமட்டுவாழ் வடக்குப் பிரிவு அலுவலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர், அலுவலகத்தில் நின்ற உதவியாளர்கள், பொதுமக்கள் முன்னிலையில் வெளியே வருமாறு அழைத்து வெளியே வந்த போது அவர்கள் முன்னிலையில் இரும்புக் கம்பிகளால் தாக்கி உள்ளனர்.

இதனால் கிராம அலுவலருக்கு கை, கால் போன்றவை முறிந்திருக்கலாமென சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கிராம அலுவலரைத் தாக்கிவிட்டு அவர்கள் மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றுள்ளனர்.

கிராம அலுவலரான கே.ஞானேஸ்வரன் (வயது-46) என்பவரே தாக்குதலுக்கு உள்ளானவராவார்.

இவர் உடனடியாக வாகனத்தில் ஏற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (த-9)

# சர்வதேசத்திடம் மக்களை பணயம் வைத்துள்ளது அரசு

01↘ யோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வெசாக் பண்டிகையை மக்கள் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக காஸ் (சமையல் எரிவாயு) 350 ரூபாவாலும், பால்மா ஒரு கிலோ 163 ரூபாவாலும், சிமெந்து 70 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற அரசின் மேதின நிகழ்வுக்கு வந்த மக்களை அரசு வெறுங்கையுடன் வீட்டுக்கு அனுப்பினாலும், வெசாக் தினத்திற்கு அத்தியாவசிப் பொருள்களின் விலையை அதிகரித்து அவர்களுக்குப் பெரும் பரிசை வழங்கியுள்ளது.

அரசு தனது அராஜக செயல்களை அரங்கேற்ற சர்வ தேசத்திடம் பெருந்தொகையான கடனைப் பெற்றுக் கொண்டு தற்போது தலைதூக்க முடியாமல் உள்ளது. இதற்காகத்தான் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரித்து சர்வதேசத்திடம் நாட்டு மக்களைப் பணயம் வைத்துள்ளது.

அரசின் சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை முறியடிப்பதற்காக சில விஷமிகள் அரசினுள்ளே இருந்து செயற்பட்டு வருகின்றன எனக் கொழும்பில் இடம்பெற்ற ஆளுங் கட்சியின் மேதின நிகழ்வில் அமைச்சரொருவர் உரையாற்றும் போது கூறினார்.

இதன்போது அந்த மேடையில் அமர்ந்திருந்த சில அமைச்சர்கள் முகம் சுழித்ததைத் நாம் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதுமட்டுமல்லாது, அவர்களின் செயற்பாடுகள் மூலம் அரச தரப்பினருள்ளே பிளவு ஏற்பட்டுள்ளதென்பதையும் நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. எது எவ்வாறிருப்பினும், நாட்டில் அரசால் அரங்கேற்றப்பட்டு வருகின்ற அராஜக செயல்களுக்கு அமைச்சர்களே பொறுப்புக்கூற வேண்டும் - என்றார் கயந்த கருணாதிலக்க எம்.பி.

# களவாக வெளிநாடு சென்ற 225 பேர் ஆபிரிக்க நாடுகளில் அந்தரிப்பு

01↘ அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலமாக இலங்கை போன்ற நாடுகளில் இருந்து தொழில் வாய்ப்புத் தேடி ஐரோப்பிய நாடுகள் நோக்கிச் சட்டவிரோதமாகப் பயணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. சில குறிப்பிட்டளவிலான டொலர் செலவில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பலாம் என்று போலி முகவர்களை நம்பி இலட்சக்கணக்கான பணத்தை அவர்களிடம் கொடுக்கின்றனர். அவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு தொழில் வாய்ப்புத் தேடிப் புலம்பெயர்பவர்களை மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கைவிட்டு விடுகின்றனர்.

கானா, மாலி போன்ற வறுமைக்குள்ளான நாடுகளில் அநாதரவாக கைவிடப்படும் இவர்கள் ஏந்தவித அடிப்படை வசதியுமற்று தவிக்கின்றனர். இந்த வருடத்தில் மட்டும் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களில் 400 இக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கைவிடப்பட்டிருக்கின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட 175 பேரை எமது நிறுவனமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து இலங்கைக்கு மீள அழைத்து வந்துள்ளது. அத்தோடு அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளையும், ஆலோசனைகளையும் நாம் வழங்குகின்றோம்.

இவ்வாறு சட்டவிரோத புலம்பெயர்வுகளுக்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு போதும் இடமளிப்பதில்லை. அவர்களை நாடுகடத்தவே ஐரோப்பிய நாட்டுச் சட்டங்கள் இடமளிக்கின்றன. வேலைவாய்ப்பு நோக்கோடு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முனைபவர்கள் முதலில் அந்தந்த நாட்டுத் தூதரக சட்ட நடைமுறைகளை அறிந்துகொள்ள வேண்டும். அதற்கான இணையத்தளங்கள் உண்டு. அத்தோடு இலங்கை அரசின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடனான ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளல் அவசியமானதாகும்.- என்றார்.

### பெண் அதிகாரியை சுட்டுக்கொன்று தன்னையும் மாய்த்தார் சிப்பாய்

01↘ சிப்பாய் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கடற்படையும், பொலிஸும் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இதுபோன்ற உள்மோதல்கள் படையினர் மத்தியில் அதிகரித்து வருகின்றது. கடந்தமாதம் சாவகச்சேரியில் இராணுவச் சிப்பாய்கள் மூவரும், கடந்த வாரம் யாழ்.நகரில் இராணுவச் சிப்பாய்கள் இருவரும் இவ்வாறான உள்முரண்பாட்டினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# கைதான இளைஞர்கள் விரைவில் விடுதலை

01↘ மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது என இங்கு குறிப்பிட்டிருக்கும் சம்பந்தன், கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அதேசமயம், திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலின் ஒரு பகுதி உடைக்கப்படுவது குறித்தும் பாதுகாப்புச் செயலரின் கவனத்துக்குக் கொண்டுவந்த சம்பந்தன், அதற்கும் நீதியான தீர்வு கிடைக்கப்பெறவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் திருமலையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னணியில் இவ்வாறான கைதுகள் இடம்பெற்றுள்ளன எனவும், புலிகள் இயக்கத்தில் இருந்து விலகிய முன்னாள் உறுப்பினர்கள் புனர்வாழ்வு அழிக்கப்படாமல் இருந்தால் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருவதால் கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்படுவார்களென்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இதன்போது சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார்.

பிள்ளையார் கோவிலின் ஒரு பகுதி உடைக்கப்படும் விவகாரம் குறித்து இங்கு கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலர், இந்தப் பிரச்சினைக்கு ஏதுவாக இருக்கும் பாதைக்குரிய காணி வைத்தியசாலைக்கே ஒப்படைக்கப்படுமென்று உறுதியளித்துள்ளார். இதனால் குறிப்பிட்ட பாதை சம்பந்தமான விதிகள் குறித்தான பிரச்சினை எழாதபடி இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாமெனவும் பாதுகாப்புச் செயலர் இங்கு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் எம்மிடம் கருத்து வெளியிட்ட சம்பந்தன், இந்த விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பு தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டிருக்குமெனத் தெரிவித்தார்.

## நவநீதம் பிள்ளைக்கு எதிராக அரசு மீண்டும் போர்க்கொடி

01↘ கக் குற்றம்சாட்டி, அவருக்கு அதிகாரபூர்வமான எதிர்ப்பைத் தெரிவிக்க இலங்கை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான பணிகளை ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஐ.நா சாசனம் மற்றும் ஐ.நா பொதுச்சபை வழங்கியுள்ள ஆணையை மீறும் வகையில் நவநீதம் பிள்ளை செயற்பட்டுள்ளதாக இலங்கை அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதையடுத்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு முறைப்படியான எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில், இலங்கை அரசினால் கடிதம் ஒன்று அனுப்பப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தக் கடிதத்தை வரையும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

# ஹெல உறுமயவின் நிலைப்பாடு இன்று

01↘ என கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம் மன்பில தெரிவித்துள்ளார்.

785 பக்க அறிக்கையை முழுமையாக ஆராய வேண்டியதன் காரணமாக அரசு விதித்த காலக்கெடுவுக்குள், தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பான தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு அரசு கோரியிருந்தது.

ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை தொடர்பான விரிவான கருத்துக்களை வெளியிட கால தாமதம் ஆகக்கூடும் என கம்மன்பில தெரிவித்துள்ளார்.எனினும், பொதுவான நிலைப்பாட்டை இன்று வெளியிடமுடியும் எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (த)

# தமிழர் பிரதேசம் எங்கும் விகாரை; மத ரீதியாக மூண்டுள்ளது போர்

01↘ ஆராய்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்துமதத் தலைவர் வி.கைலாசபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை உள்ளிட்ட இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது மேலும் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் புத்தர் சிலையோ, விகாரையோ வைப்பதற்கு அனுமதிக்க முடியாது. அங்கு புத்தர் சிலை அமைக்கப்படுவதானது உலகெங்கும் வாழும் இந்துக்களின் மனதைப் புண்படுத்தியுள்ளது. உடனடியாக இந்தச் சிலை அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேபோலத்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்களுக்கு அருகில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்குக் கிழக்குப் பகுதியில் கடந்த போர்க் காலத்தில் ஏராளமான கோயில்கள் அழிக்கப்பட்டன. அவை எந்தவிதமான புனரமைப்பும் இன்றி பூஜை வழிபாடுகள் மேற்கொள்ள முடியாத நிலையில் சிதைந்து கிடக்கின்றன. இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்கு நட்டஈடு வழங்கப்படவில்லை. ஆனால் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவுவதற்கு அரசு முனைப்புக் காட்டி வருகிறது. இது நாட்டில் மத ரீதியான யுத்தத்துக்கே வழிவகுக்கிறது.

இந்து கலாசார அமைச்சு [illegible] போது இல்லை. இதுவும் இந்து மத அழிப்புக்கான நடவடிக்கையாகவே உள்ளது.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் அரச உடைமை ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆலயம் தனியாருக்குச் சொந்தமானது. அந்த ஆலயம் மூலம் கிடைக்கும் நிதி எங்கே செல்கிறது? அதற்கான பதிலை அரசு தர வேண்டும். இயற்கையுடன் சேர்ந்த ஆலயச் சூழல் தற்போது மாற்றமடைந்து வருகிறது. இது ஆலயத்தின் புனிதத்துக்கு உகந்ததன்று.

திருக்கேதீஸ்வரம் உள்ளிட்ட இந்து ஆலயங்களைச் சார்ந்து புத்தர் சிலைகளை வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இராஜதந்திர ரீதியாக நடவடிக்கை எடுத்துத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ள வேண்டும்.

பௌத்தமதம் மட்டுமன்றி ஏனைய மதங்களும் இந்து மதத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன. மக்களின் வறுமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் பணம் கொடுத்து மக்களை வாங்கி மதமாற்றத்துக்கு உட்படுத்துகின்றனர். இதனால் ஒரே குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

திட்டமிட்ட முறையில் இந்து மக்களின் வரலாற்றை, சின்னங்களை அழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

(த-3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜெனிவாத் தீர்மானத்தின் தீதும் நன்றும் பிறர் தந்தவையல்ல

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை ஏற்றுக்கொண்டு, வாக்கெடுப்பு நடத்தியதன் மூலம்-

ஐ.நா. சாசனத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட ஆணையை பேரவையின் தலைவர் நவநீதம்பிள்ளை மீறிவிட்டார் என்று இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக ஆட்சேபம் தெரிவிக்க உள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அதன் மூலம் அவர் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தையும் மீறிச் செயற்பட்டுள்ளார் என்றும், ஆணையாளர் மீது இலங்கை அரசு குற்றஞ் சுமத்த உள்ளதெனவும் தகவல்கள் கசிந்து வருகின்றன.

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு, தனது ஆட்சேபத்தை இலங்கை அரசு விரைவில் அனுப்பி வைக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

இலங்கையின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் பிரேரணை ஒன்றை, பேரவையின் தீர்மானமாக நிறைவேற்றுவதற்கு, அதன் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உடந்தையாகச் செயற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டுகிறது இந்த நாட்டு அரசு.

இந்த வருடம் மார்ச் மாதம் 23 ஆம் திகதி, அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டு, இந்தியா உட்பட 24 நாடுகளின் ஆதரவோடு இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டதா என்பது குறித்து அடுத்த கூட்டத் தொடரில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அறிக்கை வடிவத்தில் விவரிக்க வேண்டும்.

அதற்கு முன்னதாக அந்தப் பதவியில் இருந்து அவரை நீக்கிவிடும் முயற்சியாகவே இலங்கை அரசு, நவநீதம்பிள்ளை மீது குற்றம் காண்பதற்கு துடியாய்த் துடிக்கிறது. அதனூடு, அமெரிக்காவால் பிரேரிக்கப்பட்டு பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செல்லுபடியற்றதாக்கலாம் என்று இலங்கை அரசு நினைக்கக்கூடும்.

ஆயினும், ஜெனிவாத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருப்பது போன்று, இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் செயற்படுத்துவதற்குப் பொருத்தமானவை எவை என்பதனைக் கண்டறிவதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்கா தலைமையில் அதிகார பூர்வமான குழு ஒன்றை நியமிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ள, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது தொடர்பான இரகசிய செயற்றிட்ட அறிக்கையும் லலித் வீரதுங்கா குழுவின் பரிந்துரைகளில் உள்ளடக்கப்படும் என நம்பப்படுகிறது.

இதற்கிடையில், அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நியூயோர்க் புறப்படுவதற்கு முன்னர், அவர் அங்கு கையளிக்க இருக்கும் செயற்றிட்ட அறிக்கையை, இந்த நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது. ஆயினும் அது அமெரிக்க அரசின் கோரிக்கையே அன்றி, நிபந்தனை அல்ல என்று அரச தரப்பால் சுட்டிக் காட்டப்படுகிறது. அது எந்த வடிவத்தினதாயினும், இலங்கை அரசு கருதுவது போன்று அற்ப விடயமல்ல என்பது மட்டும் வெளிப்படை.

இவற்றின் மத்தியில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது அரசின் தவிர்க்க முடியாத கடமை என்று அரசாங்கத்தின் பங்காளர்களாகவுள்ள இடதுசாரித் தலைவர்கள் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளனர். அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, டியூ. குணசேகரா, திஸ்ஸ விதாரண ஆகியோர் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற தமது அழுத்தத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசு அசமந்தமாக இருந்தால், வெறும் வேடம் தரிக்கும் தந்திரங்களைக் கையாண்டால், இந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் அதற்காகப் பதிலளிக்க நேரிடும் என்றும் -

இது விடயத்தில், உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெறுவதற்கு இலங்கை தவறும் பட்சத்தில், அனைத்துலக விசாரணைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் - ராஜதந்திரிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

மொத்தத்தில் -

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அடங்கியுள்ள அம்சங்களுக்கு, விடயங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்குப் பின்னடிப்பதோ, வேண்டிய அக்கறை காட்டாது தட்டிக் கழிக்க முனைவதோ,சர்வதேசத்தை ஏய்க்காட்டலாம் என்று எண்ணுவதோ, நாட்டுக்குப் பெரும் பாதகமான விளைவுகளைத் தரும்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா - என்ற தமிழ்ப் புலவன் கனியன் பூங்குன்றனாரின் வாக்கு அறநெறி சார்ந்த, நிறைந்த, நிதர்சனமான அர்த்தங்களை குறுகிய வடிவத்தில் தந்துள்ளது. இது தனி மனித வாழ்வுக்கு மட்டுமன்றி இலங்கை ஆட்சியாளருக்கும் மகா பொருத்தம்.

# 17 தாதிய மாணவர்கள் நேற்று தம்மை அர்ப்பணித்தனர் சேவைக்கு

யாழ்ப்பாணம், மே 8

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 2009 'ஏ' அணி தாதிய மாணவர்களைச் சேவைக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தாதிய மாணவர்களின் மூன்று வருட பயிற்சிக் காலத்தில் முதலாவது வருட நிறைவுக்குப் பின்னர் நடத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைச் சேவைக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு இதுவாகும்.

இந்த அணியில் உள்ள 17 தாதிய மாணவர்களும் இதில் சித்தியடைந்துள்ளனர். அவர்கள் சீருடை அணிந்து தொப்பி அணிந்து கையில் விளக்கு ஏந்தி சத்திய வாக்கு எடுத்துக் கொண்டனர். கல்லூரி அதிபர் மற்றும் கல்லூரி விரிவுரையாளர்கள், தாதிய மாணவர்களுக்கு தொப்பி அணிவித்து விளக்கேற்றி வைத்தனர்.



இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கைத் தாதிய கல்லூரிப் பணிப்பாளர் திருமதி எஸ். ஸ்ரீவர்த்தனவும், கௌரவ விருந்தினராக கல்லூரிப் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுனில் டீ அல்விஸும் கலந்துகொண்டார்.

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி ரஜூலாதேவி வல்லிபுரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்லூரி விரிவுரையாளர்கள், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-4)

# தகவல் அறியும் சட்டமூலம் குறித்துச் சபாநாயகருடன் பேச்சு

கொழும்பு,மே 08

அரச தகவல்களைத் தெரிந்து கொள்ளும் சட்ட மூலத்தை மீண்டும் நாடாளு மன்றில் சமர்ப்பிப்பது குறித்து இன்று சபாநாயகருடன் பேச்சு நடத்தவுள்ளத்ாக எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரி வித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான தேவை, அவசியம் நிலவுவதாக ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அரசு இது குறித்து யோசனை ஒன்று முன்வைக்கப்படும் என அறிவித்தபோதும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறுவதாகத் தெரியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகவல் பெற்றுக் கொள்ளும் உரிமை குறித்து கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய இரண்டு முறை தகவல் அறிந்து கொள்ளும் உரிமை சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்தபோதும் அது தோல்வியடைந்தது.

இந்த நிலையில் குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் பணி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் ஜோன் அமரதுங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாதென ஜோன் அமரதுங்க தெரிவித்தார். (த)

## 78 தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம்

கொழும்பு,மே 08

விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் தேசிய பாடசாலைகள் 78 இல் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2011 டிசம்பர் 2ஆம் திகதி தேசிய பத்திரிகைகளில் வெளியான விளம்பரத்தில் 78 தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

கல்வி நிர்வாக சேவையில் முதல் தரத்தில் 7 அதிபர்களுக்கும் 2ஆம் நிலையில் உள்ள 16 அதிபர்களுக்கும் 3ஆம் நிலையில் உள்ள 11 அதிபர்களுக்கும் ஏனையவற்றுக்கு இலங்கை அதிபர் சேவை முதல் தர தகுதியுடையோரும் விண்ணப்பிக்க முடியும் என அதில் கூறப்பட்டிருந்தது.

எனினும் விண்ணப்பித்தவர்களுக்குத் தகுதி அடிப்படையில் நியமனம் வழங்காது 78 தேசிய பாடசாலைகளில் பதில் அதிபர்களைக் கொண்டு கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன.

நாட்டின் பிரதான பாடசாலைகள் சில இவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றமை கவலையளிக்கிறது. அரசியல்வாதிகள் பதில் அதிபர்களை தக்கவைத்துக்கொள்வதற்காகப் புதிய நியமனங்களை வழங்காதுள்ளனர்.

இந்த நிலையில் விரைவில் நேர்முகப்பரீட்சை நடத்தி யாப்பு அடிப்படையில் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தம்புள்ள விவகாரம் சுமுகமாக தீர்க்கப்படும்

தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைய்யை, சுமுகமான ரீதியாக தீர்ப்பதற்கு இலங்கை அரசு முயற்சித்து வருகின்றது என சவூதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின் இஸ்லாமிய அறிஞரான அஷ் ஷெய்க் றிஸ்வி முப்தி தெரிவித்தார்.

குறித்த விவகாரம் தொடர்பில் அரசின் முயற்சியினால் ஒரு திருப்தியான தீர்வினை விரைவில் பெற முடியும் என நம்புவதாக அகில இலங்கை ஜம்இய்துல் உலமா சபையின் தலைவர் அஷ் ஷெய்க் றிஸ்வி முப்தி குறிப்பிட்டார்.

உலக முஸ்லிம்களில் அதிக செல்வாக்கு மிக்க முதல் 500 பேர்களில் ஒருவராக தெரிவான றிஸ்வி முப்தி, கடந்த வெள்ளிக்கிழமை றியாத் நகரில் இலங்கை முஸ்லிம் சமூக உறுப்பினர்களுடன் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் அப்துல் காதர் அல் மஷூர் மௌலானாவும் கலந்து கொண்டார். (த)

## சிவப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்படுகிறது இலங்கை

கொழும்பு,மே 08

இந்தோனேஷியாவின் குடிவரவு சிவப்புப் பட்டியலில் இருந்து இலங்கையையும் பங்களாதேஷையும் மே மாத இறுதியில் நீக்குவதற்கு இந்தோனேஷியச் சட்ட மற்றும் மனித உரிமைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது. முன்னர் திட்டமிடப்பட்டதைவிட நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே மேற்படி பட்டியலில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, பங்களாதேஷ் நாடுகள் இப்பட்டியலில் இருந்து விரைவில் நீக்கப்படும். இந்த நாடுகளின் பொருளாதார, பாதுகாப்பு விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் இலங்கை, பங்களாதேஷ் பிரஜைகள் இந்தோனேஷியாவுக்கு வருவதற்கான விஸா கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என மேற்படி அமைச்சின் பயண ஆவணத்துறைத் தலைவரான பதி சத்ரியா விபாவா கூறியுள்ளார்.

பங்களாதேஷ் பிரஜைகள் தெளிவான நோக்கமின்றி இங்கு வருவதற்குப் பதிலாக இந்தோனேஷியாவுக்கு நன்மைகளைக் கொண்டுவருவார்கள் என நம்பப்படுகிறது எனவும் விபாவா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகள் இப்பட்டியலில் தொடர்ந்தும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் 'கோலோச்சும்' பெரும்பான்மை இனத்தவர்கள்

## ஆனால் அதே மாவட்டத்து மீனவர்கள் பெரும் ஏமாற்றம்



மன்னார், மே 8

மன்னாரில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் சிங்கள மீனவர்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நீர் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான சிங்கள மீனவர்கள் குடும்பம் குடும்பமாக மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் கடற்படையினரது பாதுகாப்புடன் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் கடற்கரையோரத்தில் தற்காலிக வீடுகளை அமைத்துக் குடும்பம் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஆழ் கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

அதியுயர் வலு கொண்ட வெளி இணைப்பு இயந்திரங்களைக் கொண்டு கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் பிடிக்கின்ற மீன்களை இவர்கள் தென் பகுதிக்கு அனுப்பி விடுகின்றனர்.

இவர்களுக்கு பாஸ் நடைமுறை எவையும் இல்லை. மேலும் கடற்படையினர் பாதுகாப்பை வழங்கி வருகின்றனர். கடற்படையினரின் காவலரணைத் தாண்டியே இவர்களுடைய இடத்துக்குள் செல்ல முடியும்.

இந்த நிலையில் தற்போது காற்றுக்காலம் ஆரம்பித்துள்ளமையினால் குறித்த சிங்கள மீனவர்கள் தமது சொந்த இடத்தை நோக்கிச் செல்லுகின்றனர்.

மீண்டும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குப் பின்னர் திரும்பி வருவார்கள். இவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கும், பயணம் செய்வதற்கும் பல லட்சம் ரூபா செலவில் வீதி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அரச அதிபராக பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்ட நிலையில் தற்போது மன்னாரில் தொழில் செய்யும் சிங்கள மீனவர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளார்.

**பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச அதிபரான இவர் குறித்த பாஸ் நடைமுறையை இரத்துச் செய்வார் என மீனவர்கள் நம்பி உள்ள போதும் இதுவரை ஏமாற்றமே கிடைத்துள்ளது.**

ஆனால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பாஸ் நடைமுறையினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச அதிபரான இவர் குறித்த பாஸ் நடைமுறையை இரத்துச் செய்வார் என மீனவர்கள் நம்பி உள்ள போதும் இதுவரை ஏமாற்றமே கிடைத்துள்ளது.

(க-12)

## சிறுவர்களுக்கு சிகரெட் விற்றவர்கள் நீதிமன்றில் செலுத்தினர் தண்டம்

வவுனியா, மே 8

வயது குறைந்தவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்த 12 வர்த்தகர்கள் 12 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்தினர்.

21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு புகைப் பொருள்களை விற்பனை செய்த குருமன்காடு பட்டாணிச்சூர், வேப்பங்குளம் மற்றும் கருப்பங்காடு ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த 12 வர்த்தகர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றில் வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி சி.ரகுநாதன் தலைமையில் கடந்த 2 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை ஆராய்ந்த வவுனியா மாவட்ட நீதிபதி அலக்ஸ்ராஜா பன்னிரண்டு வர்த்தகர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா தண்டமாக விதித்தார்.

இதேவேளை சட்ட விரோதமாகச் சாராயம் விற்றவருக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (க-400)

## இளைஞர் சேவை மன்றங்கள்

முல்லைத்தீவு,மே 8

முல்லைத்தீவில் 170 தேசிய இளைஞர் சேவை மன்றங்கள் இயங்கி வருவதாக இதன் உதவிப் பணிப்பாளர் சிசிர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற குழுத் தெரிவின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 20 வருடங்களாக செயற் படாதிருந்த தேசிய இளைஞர் சேவை மன்றங்கள் தற்போது வெலிஓயா, ஒட்டுசுட்டான், கரைதுறைப் பற்று, மாந்தை கிழக்கு, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன என்றும் இவை 2010 ஆம் ஆண்டிலிருந்து நடப்பு ஆண்டுவரை அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-500)

## மன்னாருக்கு படையெடுப்பு



மன்னார்,மே 8

பல ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் கடந்த சில தினங்களில் மன்னாருக்கு வந்துள்ளனர்.

வெசாக் பௌர்ணமியை ஒட்டியே இவர்கள் இங்கு வந்துள்ளனர். இவர்கள் மன்னாரிலுள்ள முக்கிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை வெசாக் தினத்தையொட்டிக் கடந்த சனிக்கிழமையும் அடுத்த நாளும் மன்னார் தள்ளாடி இராணுவத்தினர் பெரியளவிலான அன்னதான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இதிலும் சிங்கள மக்களே அதிளவில் கலந்து கொண்டனர்.

மன்னாரைச் சேர்ந்தவர்கள் சொற்ப அளவிலேயே இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

## வவுனியா பாடசாலைகளில் சேகரித்த நிதி அபிவிருத்திப் பணிகளுக்காக மீளளிப்பு

வவுனியா,மே 8

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்டக் கிளையால் கடந்த ஆண்டு வவுனியா மாவட்ட பாடசாலைகளால் சேகரித்த நிதி மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிதி மீளளிப்புச் செய்யும் நிகழ்வில் அரச அதிபர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந்த நிதியை மீளளிப்புச் செய்தார்.

பாடசாலைகள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியே அவர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விபுலானந்தாக் கல்லூரிக்கு ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 745 ரூபாவும், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கு ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 225 ரூபாவும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 675 ரூபாவும், நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 225 ரூபாவும், புதுக்குளம் மகா வித்தியாலயத்துக்கு 86 ஆயிரத்து 975 ரூபாவும், சைவ பிரகாச மகளிர் கல்லூரிக்கு 85 ஆயிரத்து 875 ரூபாவும், இலங்கை கிறிஸ்தவ தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 63 ஆயிரத்து 485 ரூபாவும், வவுனியா இந்துக் கல்லூரிக்கு 43 ஆயிரத்து 700 ரூபாவும், முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு 38 ஆயிரத்து 500 ரூபாவும், பூந்தோட்டம் மகா வித்தியாலயத்துக்கு 33 ஆயிரத்து 510 ரூபாவும், மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலைக்கு 34 ஆயிரத்து 560 ரூபாவும், கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலைக்கு 28 ஆயிரத்து 50 ரூபாவும், சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்துக்கு 21 ஆயிரத்து 750 ரூபாவும், பிரமண்டு வித்தியாலயத்துக்கு 18 ஆயிரத்து 350 ரூபாவும், பெரிய கோமரசன் மகா வித்தியாலயத்துக்கு 15 ஆயிரத்து 210 ரூபாவும் ஏனைய பாடசாலைகளான பூவரசன் குளம் மகாவித்தியாலயம், வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், நொச்சிமோட்டை க.உ.வித்தியாலயம், வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர பாடசாலை, கந்தபுரம் வாணி வித்தியாலயம், பாவற்குளம் கணேஸ்வரா ம.வி., சமளங்குளம் அ.த.க. ஆகியவற்றுக்குப் 10 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகைகளும் வழங்கப்பட்டன. (க-402)

**பாடசாலைகள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியே அவர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது.**

தேவை

அலுவலகச் செய்தியாளர்கள்

★ முல்லைத்தீவு ★ கிளிநொச்சி ★ மன்னார்

பிரதேச செய்தியாளர்கள்

★ பளை ★ தலை மன்னார்
★ பூநகரி ★ சிலாவத்துறை
★ புதுக்குடியிருப்பு ★ கனகராயன்குளம்
★ மடு ★ மருதோடை
★ மாங்குளம் ★ கெருடாமடு
★ அலம்பில் ★ தண்ணீரூற்று
★ நாகர்கோயில் ★ வட்டக்கச்சி
★ கொக்கிளாய் ★ முருகண்டி
★ வெள்ளாங்குளம் ★ மூன்றுமுறிப்பு
★ முழங்காவில் ★ பல்லவராயன்கட்டு

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு அலுவலகச் செய்தியாளர்களாக, பிரதேச செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் தமது சுய விவரங்களை editor @ uthayan.com என்ற - மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

★ வயதெல்லை - 25 முதல் 35 வரை

உதயன் வெளியீட்டகம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறந்த வரி செலுத்துனர்களுக்கான கௌரவிப்பு விழாவின்போது வவுனியாவைச் சேர்ந்த பிரபல [illegible] தேசமான்ய பி.பழனிவேலுக்கு உள்நாட்டிறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் மல்லிகா சமரசேகர, பிரதி ஆணையாளர் திருமதி விஜயக்கோன் ஆகியோர் இணைந்து விருது வழங்குகின்றனர். (402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் மசாஜ் நிலையம் திறக்கத் தடை விதிப்பு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணத்தில் மசாஜ் நிலையத்தைத் திறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் ஒன்று யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நிலையில் அதற்கு யாழ். மாநகர சபையிடம் அனுமதி பெறாமை குறித்தும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நிலையத்தை திறப்பதற்கு யாழ். பிரதேச செயலர் அனுமதி வழங்கியுள்ளார் என்றும் யாழ். மாநகர சபைப் பிரதி முதல்வர் எம். ரமீஸ் தெரிவித்துள்ளார்.

இது யாழ்ப்பாண கலாசாரத்துக்கு முரணானது. உடல் வலுப்படுத்தல் நிலையம் அமைக்கத் தடை முற்றாகத் விதிக்க வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சபையில் பிரேரணை ஒன்றையும் அவர் சமர்ப்பித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக எதிரணி உறுப்பினர் ஆ.பரஞ்சோதி, குறிப்பிட்ட நிலையத்தை அமைக்க அனுமதி வழங்க யாழ். பிரதேச செயலருக்கு அதிகாரம் உள்ளது. எனவே பிரதேச செயலருக்கு என்ற பதத்தை நீக்கிப் பிரேரணை சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். இதனையடுத்துத் திருத்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆளும், எதிரணி உறுப்பினர்களின் சம்மதத்துடன் மசாஜ் நிலையம் அமைப்பதற்குத் தடை விதிக்கும் பிரேரணை நிறைவேறியது. மசாஜ் நிலையம் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு எதிரானது எனவும் சமூகச் சீர்கேடுகள் ஏற்பட வழியமைக்கும் எனவும் குறிப்பிடப்பட்டது.

மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ இது குறித்துத் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் தடை செய்யப்பட்ட நிலையம் ஒன்றை அமைக்க பிரதேச செயலர் அனுமதி வழங்கவில்லை. மசாஜ் நிலையம் அமைக்கக் கூடாது என்று எந்தச் சட்டத்திலும் இல்லை.

குடியிருப்புப் பகுதியில் இது போன்ற நிலையங்களை அமைப்பதால் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறலாம் என்பதால் அதைத் தடைசெய்ய முடியுமே தவிர வேறு காரணங்களைக் கூறுவது சாத்தியப்படாது என்று தெரிவித்தார்.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. (ம-7)

## செவிப்புலன் இழந்தோர் வழிகாட்டி நூல்

யாழ்ப்பாணம், மே 8

செவிப்புலனிழந்தவர்கள் தமது தொடர்பாடல் பிரச்சினை காரணமாக வைத்தியத்துறையினருடன் நோய்கள் தொடர்பாக இலகுவாக்கும் உரையாட வசதியாக யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் வழிகாட்டி நூல் ஒன்றை இன்று செவ்வாய்க்கிழமை வெளியிடவுள்ளது.

அடிப்படை நோய்களை வெளிப்படுத்தும் சைகை குறிப்புகளுடனான முறைகள் உள்ளடக்கப்பட்டதாக இந்த நூல் வெளியீடு செய்யப்படவுள்ளது.

சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா தலைமையில் மாலை 4 மணிக்கு யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நூலின் ஆய்வுரையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா, யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன், யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி ஆர்.வல்லிபுரநாதன், யாழ். சோஆ நிறுவன திட்ட இணைப்பாளர் வை.சிவயோகராஜன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ம-14)

## வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கம் ஐந்து மில்லியன் செலவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 7

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஐந்து மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

என்றிப் திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இந்தச் சங்கத்தின் கட்டடம் கடந்த மாதம் இறுதியில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் சந்திரசிறி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு கூட்டாகத் திறந்து வைத்தனர்.

இந்தத் திறப்பு விழாவில் என்றிப் திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் சுதர்சன், மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திருலிங்கநாதன், பனை அபிவிருத்திச் சபை தலைவர் ப.சீவரத்தினம், மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பாலச்சந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-17)

## பயனுள்ள மரங்கள் விசமிகளால் தறிப்பு

### வலி. வடக்கு மக்கள் விசனம்

வலி.வடக்கு, மே 7

வலி. வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பயனுள்ள மரங்கள் விசமிகளால் தறிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களாக மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் இந்தப் பகுதியில் வேப்ப மரங்கள், மா மரங்கள், புளிய மரங்கள் என பல மரங்களும் பெரும் எண்ணிக்கையில் வளர்ந்து பெரு விருட்சமாகியுள்ளன.

இந்த நிலையில் விசமிகள் இவற்றை வெட்டிச் செல்வதில் குறியாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் பல காணிகளின் உரிமையாளர்கள் வேறு இடங்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருவதால் இந்தக் காணிகள் துப்புரவு செய்யப்படாமலும் உரிமை கோரப்படாமலும் காணப்படுகின்றன.

இத்தகைய காணிகளில் உள்ள பயன்தரு மரங்களே இவ்வாறு பகலில் வெட்டப்பட்டு இரவோடு இரவாக கொண்டு செல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பகுதிகளில் மரம் தறிக்கப்படுவதை இப்பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் ஏன் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-86)

## தொண்டை அடைப்பானுக்கு மாடுகளுக்குத் தடுப்பூசி

வடமராட்சி, மே 8

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலும் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலும் மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான், கால்வாய் நோய்களுக்குத் தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்படவுள்ளன என்று பருத்தித்துறை அரசினர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களக் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் நாளை புதன்கிழமை முதல் துன்னாலை வடக்கு, வல்லிபுரம், புலோலி தெற்கு, புலோலி கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கள்கிழமை தொடக்கம் தொண்டைமானாறு தெற்கு, கெருடாவில் வடக்கு, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் முள்ளியான் மருதங்கேணி, செம்பியன் பற்று ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாகர் கோயில், அம்மன் குடத்தனை கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## வலுவிழந்தோர் விவரம் திரட்டல்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாற்று ஆற்றலுடையவர்களின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் இன்று தொடக்கம் இடம்பெறவுள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக நலனோம்பு அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்கும் செயற்பாடுகள் குறிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை ஜே/129 தொடக்கம் ஜே/136 வரையான கிராம சேவகர் பிரிவுகளிலும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/137 தொடக்கம் ஜே/144 வரையான கிராம சேவகர் பிரிவுகளிலும், எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஜே/147 தொடக்கம் 149 வரையான கிராம சேவகர் பிரிகளிலும், எதிர்வரும் 15 ஆம் திகதி ஜே/ 150 தொடக்கம் ஜே/155 வரையான கிராம சேவகர் பிரிவுகளிலும் அடையாள அட்டைக்கான படங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் இடம்பெறும். நடமாட முடியாத நோயாளர்களது வீடுகளுக்குச் சென்று புகைப்படம் எடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.(ம-14)

## கொட்டடியில் இருந்து பண்ணைக்கு உள்ள வாய்க்கால் இடியும் நிலையில்



கொட்டடி மீன் சந்தையில் இருந்து பண்ணை வரைக்கும் அமைக்கப்பட்ட கழிவுநீர் வாய்க்கால் தூர்ந்து இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. கடந்த வருட இறுதியில் பெய்த மழையால் இந்தப் பகுதியில் தேங்கி நின்ற வெள்ளத்தை அகற்றுவதற்காக இந்த வாய்க்கால் வெட்டப்பட்டது.

தற்காலிகமாக வெட்டப்பட்ட இந்த வெள்ள வாய்க்கால் உரிய முறையில் அமைக்கப்படாமையால் தூர்ந்த நிலையில் உள்ளது.

கடந்த வருட இறுதியில் பெய்த பெரு மழையால் யாழ். பிரதம தபால் நிலைய சுற்று வட்டச் சந்தி மற்றும் கொட்டடி மீன் சந்தை போன்ற பகுதியில் தேங்கி நின்ற வெள்ளம் இந்த வாய்க்கால் ஊடாகவே அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த வாய்க்கால் கவனிப்பார் இன்றித் தூர்ந்துவிடும் நிலையில் உள்ளது. (ம-17)

## நெடுந்தீவில் கட்டப் பணிகள் செய்து முடிப்பதில் தாமத நிலை

யாழ்ப்பாணம், மே 7

நெடுந்தீவில் கட்டட வேலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர்கள் குறிப்பிட்ட வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

குறிகாட்டுவான் மார்க்கமாக கட்டடப் பொருள்களை எடுத்து வருவதில் பல தாமதங்கள் ஏற்படுகின்றமையே இதற்குக் காரணம் என்று அவர்கள் கூறிவருகின்றனர்.

சிமெந்து, கற்கள், கம்பிகள் என கட்டட வேலைகளுக்குத் தேவையான பொருள்களை யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவானுக்குக் கொண்டு சென்று படகுகள் மூலம் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலையே உள்ளது.

இந்த நிலையில் குறிப்பிட்ட பொருள்களை ஏற்றிவரும் பார ஊர்திகளை துறைமுகப் பாலத்துக்குள் செல்ல அனுமதிப்பதில் தாமரங்கள் ஏற்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டடப் பொருள்களுடன் வந்த லொறி ஒன்று ஏழு நாட்களாக பொருள்களை படகில் இறக்க அனுமதிக்கப்படாத நிலையில் அதற்காகக் காத்து நிற்பதாகவும் ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவித்தார்.

இதனால் படகுகளும் நீண்ட நேரம் துறைமுகத்தில் வீணாகத் தரித்து நிற்க வேண்டியுள்ளது என்றும் இதனால் விண் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.(ம-7)

## மலேரியா தினத்தை முன்னிட்டு நடை பவனி

வலி.தென்மேற்கு, மே 8

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலிருந்து யாழ்.இந்துக் கல்லூரிவரை மாபெரும் நடைபவனியும் அதைத் தொடர்ந்து கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

சேவாலங்கா, சர்வோதயம் ஆகிய பொது நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்.பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். நடைபவனி ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி ஊடாக யாழ்.இந்துக் கல்லூரியைச் சென்றடையும். அதைத் தொடர்ந்து 10.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் மலேரியா நோய்த்தடுப்பு சம்பந்தமான கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-115)

## கழிவுகள் கொண்டு செல்லும் போது துர்நாற்றம் வீசுவதால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாநகரப் பகுதியில் கொல் கலன்கள் மூலம் அகற்றப்படும் கழிவுப் பொருள்கள் இரவு வேளைகளில் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படும்போது பெரும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திறந்த கழிவகற்றும் வாகனங்கள் மூலம் கொண்டு செல்லப்படும் இந்தக் கழிவுகளாலேயே துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அதிக நேரத் [illegible] யுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கடும் காற்றால் திறந்த வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்படும் கழிவுப் பொருள்களில் [illegible] வீசும் துர்நாற்ற வாடை அதிக தூரத்துக்கு வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மக்கள் நெருக்கமாக நடமாடும்பகுதிகளில் கழிவுகளை அகற்றும் போது மூடிய வாகனங்களில் அகற்றுமாறு மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்

## தா.பாண்டியன் கருத்து

சென்னை, மே 8

இலங்கையில் தமிழர் பகுதிகளில் இடம்பெற்று வரும் சிங்களக்குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் தியாகிகளின் நினைவு தினப் பொதுக்கூட்டம் பட்டுக்கோட்டை தலைமை அஞ்சலகம் அருகில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில், தா.பாண்டியன் கலந்துகொண்டு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று ஆண்டுகளாக முள்வேலி முகாம்களில் இருக்கும் தமிழர்களை சொந்த இடங்களுக்குஅனுப்ப இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய அரசு, இலங்கை அரசை தமது நட்புக்குரிய நாடா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஈழத்தில் எத்தகைய ஆட்சி வேண்டும் என்பதை ஈழ மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.



இந்திய அரசு, இலங்கை அரசை நட்புக்குரிய நாடா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஈழத்தில் எத்தகைய ஆட்சி வேண்டும் என்பதை ஈழ மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை இடைத்தேர்தலில் போட்டியிடுவது இல்லை என்று கட்சி முடிவு செய்திருக்கிறது. அ.தி.மு.கவில் இலவச ஆடு கொடுப்போம், மாடு கொடுப்போம் என்று சொல்லி வாக்குக் கேட்கிறார்கள். அதுபோல் எங்களால் வாக்குக் கேட்க முடியுமா? பயம் கருதி தேர்தலைப் புறக்கணிக்கவில்லை. அவமதிப்புக்கு ஆளாகக் கூடாது என்று கருதித்தான் புறக்கணிக்கிறோம். தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும்-என்றார் அவர். (வ)



அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மூன்றுநாள் சுற்றுப்பயணமாக நேற்று முன்தினம் இந்தியா சென்றார். கொல்கத்தாவில் மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜியைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

## மாநிலங்களை தாக்க தீவிரவாதிகள் சதி: முக்கிய இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு

இந்தியாவில் 4 மாநிலங்களில், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக, ஏற்கனவே மத்திய அரசு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்தநிலையில் தலைநகர் டில்லி மற்றும் பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களிலும் மத்திய துணைப் படை பொலிஸார் சோதனைச் சாவடிகளை அமைத்து தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பஞ்சாபில் சங்ரூர், ஜலந்தர் ஆகிய இடங்களில் எண்ணெய் கிடங்குகள் உள்ளன. மேலும் பதிண்டாப் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு, புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய்க் கிடங்குகள் அனைத்திலும் மாநில பொலிஸாரும், மத்திய துணைப் பொலிஸாரும், எல்லைப் பாதுகாப்பு படையினரும் 24 மணிநேர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வி)

## 10 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுறா பல் கண்டுபிடிப்பு

மத்திய பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள நர்மதா பள்ளத்தாக்கில் 10 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுறாவின் பல் ஆய்வாளர்கள் குழுவால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தூரிலிருந்து 125 கிலோ மீற்றர் தொலைவில் தார் மாவட்டத்தில் அமைந்துள்ள நர்மதா பள்ளத்தாக்கில் ஆய்வு நடத்தியபோது இந்தப் பல் கண்டறியப்பட்டுள்ளதாக மங்கள் பன்சயத்தான் பரிசத் எனும் ஆய்வு குழுவின் தலைவர் விஷால் வர்மா தெரிவித்தார்.

ஆய்வில் பூமியின் மூன்று அடுக்கு பகுதிகளில் இருந்து மூன்று வெவ்வேறு கால கட்டத்தைச் சேர்ந்த விலங்குகளின் புதை படிவங்களை கண்டறிந்துள்ளதாகவும், அவை 6.5 முதல் 10 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்களின் புதை படிவங்கள் என்று



வர்மா தெரிவித்தார். கண்டறியப்பட்ட 'சுறா' பல் 14 சென்ரி மீற்றர் அளவுக்கு தற்போதைய 'புலி' பல்லை போன்று இருப்பதாகத் தெரிவித்தார். மேலும் இந்தப்பகுதியில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் டைனோசர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களும் இருப்பதாக தெரிவித்தார். (வ)

## போதைப்பொருள் கடத்த முயன்றோர் கைது

சிங்கப்பூருக்கு போதை பொருள் கடத்த முயன்ற மூன்று பேர் திருச்சி சர்வதேச விமானநிலையத்தில் கைது செய்யப் பட்டனர்.

ராஜபாளையத்தைச் சேர்ந்த வீரசின்னம்மாள், அழகேந்திரன், மற்றும் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் ஆகியோர் தனியார் விமானம் மூலம் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் செல்ல முயன்றனர். அப்போது மேற்கண்ட மூவரும் போதைப் பொருள் கடத்துவதாக சுங்கத்துறையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதனைதொடர்ந்து அவர்களிடம் நடத்தப்பட்ட சோதனையில் ஒரு கிலோ எடை கொண்ட எபிடின் போதைப்பொருள் இருப்பதைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். இவற்றின் சர்வதேச மதிப்பு ஒரு கோடியாகும். தொடர்ந்து அவர்களை கைது செய்த விமான நிலைய பொலிஸார் விசாரணை நடத்தினர்.

## ஸ்டாலினை கட்சித்தலைவராக்க இளைஞரணி கோரிக்கை

சென்னை, மே 8

தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலினை கட்சியின் தலைவராக்க வேண்டும் என்று இளைஞர் அணி வலியுறுத்தியுள்ளது.

தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப் பாளர்கள் கூட்டம்சென்னைதேனாம் பேட்டையில் உள்ள அன்பகத்தில் நடை பெற்றது. கூட்டத்தைத் ஆரம்பித்து வைத்து ஸ்டாலின் பேசியதாவது:-

சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் தி.மு.க. கட்டுப்பணத் தொகையை இழந்து விட்டது. இருப்பினும் மிகுந்த எழுச்சியோடு இருக்கிறது. இளைஞர் அணியில் ஒன்றிய அளவில் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு வருகின் றனர். இந்தப் பணிகள் இன்னும் ஐந்தாறு மாதங்களில் முடிவடைந்துவிடும் - என்றார்.

இதைத்தொடர்ந்துமாவட்ட அமைப்பாளர்கள், ஸ்டாலினை கட்சியின் தலைவராக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். கருணாநிதிக்குப் பின்னர் ஸ்டாலின் தான் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



மேலும், இளைஞர் அணியில் இருப்பதற்கான வயது வரம்பு இப்போது ஒன்றிய அளவில் 30 வயதுக்குள்ளும், மாவட்ட அளவில் 40இற்குள்ளும் இருந்து வருகிறது. இதில் மாவட்ட அளவிலான வயது வரம்புக்கு நிர்வாகிகள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், வரம்பை 45 வயதாக அதிகரிக்க வேண்டும் என்றும் கோரினர்.

மாவட்ட நிர்வாகிகள் வயது வரம்பை 45 வரை உயர்த்த வேண்டும் என்பதை கருணாநிதியோடு ஆலோசித்து சொல்வதாக ஸ்டாலின் பதிலளித்தார். (வ)

## பி.எஸ்.எப் ஹெலிகொப்டர்கள் பழுது

### பாதுகாப்பு அமைச்சகத்துக்கு நாடாளுமன்றக் குழு கண்டனம்

டில்லி, மே 8

எல்லை பாதுகாப்புப் படையின் (பிஎஸ்எப்) ஹெலிகொப்டர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்காததால், பாதுகாப்பு அமைச்சகத்துக்கு நாடாளுமன்ற நிலைக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

எல்லைப் பாதுகாப்பு படையில் ஆறு, எம்.ஐ,17 ரக ஹெலிகொப்டர்கள் உள்ளன. மத்தியப் படையின் நக்சல் வேட்டை, வீரர்களின் போக்குவரத்துக்கு இந்த ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஹெலிகொப்டர்களில் இரண்டு பழுதடைந்த நிலையில் இயங்காமல் உள்ளன. எல்லை பாதுகாப்பு படை ஹெலிகொப்டர்களுக்குத் தேவையான உதவிகள், பழுது பார்த்தல், உதிரிப்பாகங்கள் வழங்குதல், விமானி பற்றாக்குறையின் போது விமானிகளை அனுப்புதல் போன்றவற்றை விமானப்படை செய்ய வேண்டும் என்று உள்துறை அமைச்சகமும், பாதுகாப்பு அமைச்சகமும் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ளன.

ஆனால் அதன்படி எந்த உதவியும், எல்லை பாதுகாப்புப் படை ஹெலிகொப்டர் பிரிவுக்குச் செய்யப்படவில்லை. இதனால் இரண்டு ஹெலிகொப்டர்கள் பழுதாகி உபயோகப்படுத்தாமல் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், நக்சல் வேட்டையில் பாதிப்பு ஏற்படுகிறது.

இது உள்துறை அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக்குழு கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. ஒப்பந்தத்தை மதிக்காததற்காக கண்டனம் தெரிவித்த நாடாளுமன்ற நிலைக் குழு, எல்லைப் பாதுகாப்புப் படையின் ஹெலிகொப்டர் பிரிவு முழுவதுமாக செயற்படுவதற்குத் தேவையான உதவிகளையும் செய்யுமாறு விமானப்படையையும், பாதுகாப்பு அமைச்சகத்தையும் கேட்டுக் கொண்டுள்ளது.

ஹெலிகொப்டர்கள் பழுதாகி உபயோகப்படுத்தாமல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், நக்சல் வேட்டையில் பாதிப்பு ஏற்படுகிறது.(வ)

## போதைப்பொருளுடன் கர்நாடகாவில் நைஜீரியர் கைது

கர்நாடக மாநிலம் பெங்களூரில் நைஜீரியரிடமிருந்து ரூ.11.5 லட்சம் மதிப்புள்ள கோகைன் வகை போதைப் பொருளை அந்த மாநிலப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் தெரிவித்ததாவது:-

நைஜீரிய நாட்டை சேர்ந்த இடியானி பால்(வயது36) என்பவர் போதைப் பொருள்களைக் கடத்துவதாக ரகசிய தகவல் வந்தது. அவரிடம் நடந்த விசாரணையில், கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் விசா காலாவதியான பின்பும் இந்தியாவில் தொடர்ந்து தங்கியிருப்பது தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸுக்கு புதிய ஜனாதிபதி



பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலாஸ் சர்கோஸியின் பதவிக்காலம் முடிவடைவதையொட்டி, கடந்த மாதம் 22ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

பரிஸ், மே 8

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி சர்கோஸி தோல்வியடைந்தார். இதனையடுத்து புதிய ஜனாதிபதியாக ஹோலன்ட் பதவியேற்க உள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலாஸ் சர்கோஸியின் பதவிக்காலம் முடிவடைவதையொட்டி, கடந்த மாதம் 22ஆம் திகதி, அதிபர் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில், சர்கோஸி இரண்டாவது முறையாகப் போட்டியிட்டார். இவரை எதிர்த்து, சோஷலிஸ்ட் கட்சி சார்பில், பிராங்காய்ஸ் ஹோலன்ட் போட்டியிட்டார். முதல் கட்டத் தேர்தலில் வேட்பாளராகப் 10 பேர் களத்தில் இருந்தனர். இதில் 50 வீத வாக்குகள் யாருக்கும் கிடைக்காத நிலையில், நேற்று முன்தினம் இரண்டாவது கட்டத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் சர்கோஸியும், பிராங்காய்ஸ் ஹோலன்டும் களத்தில் இருந்தனர். பொருளாதார மந்த நிலை, வேலை வாய்ப்பின்மை, வரி விதிப்பு, ஓய்வூதியம் குறைப்பு மற்றும் மறுப்பு உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி, இந்தத் தேர்தலில் ஹோலன்ட் பிரசாரம் செய்தார்.

பிரெஞ்ச் காலனி ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரி உள்ளிட்ட பல பகுதிகளிலும் இந்தத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் ஹோலன்ட் 52 வீத வாக்குகள் பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஹோலன்ட் வெற்றியை அவரது ஆதரவாளர்கள் பல இடங்களில் கொண்டாடினர். கடந்த 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் சோசலிஸ்ட் கட்சி சார்பில் முதல் அதிபர் என்றபெருமையை ஹோலன்ட் பெற்றார். சர்கோஸியின் தோல்வி, ஐரோப்பிய அரசியலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.

## 309 இராணுவத்தினருக்குச் சிறை



டக்கா, மே 8

பங்களாதேஷில் இராணுவத்தினரிடையே ஏற்பட்ட கலவரம் தொடர்பான வழக்கில் 309 இராணுத்தினருக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பங்களாதேஷில் கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 25,26ஆம் திகதிகளில் இராணுவத்தினரிடையே மோதல் ஏற்பட்டுக் கலவரமாக வெடித்தது. இதில் இராணுவ மேஜர் ஜெனரல் உட்பட 74 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக 3 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு நான்கு நீதிபதிகள் கொண்ட பங்களாதேஷ் சிறப்பு பாதுகாப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் இராணுவ விதிகளை மீறியது, ஒழுங்கு நடவடிக்கையை மீறியது உள்ளிட்ட பிரிவுகளில் குற்றம்சாட்டப்பட்ட 309 இராணுவச் சிப்பாய்களுக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.


## வழுக்கைத் தலை ஆராய்ச்சிக்கு உதவிய எலிக்கு முடி

வழுக்கைத் தலையில் முடி முளைக்க வைப்பது தொடர்பாக ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஸ்டெம் செல் ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்துள்ளது. அந்த ஆராய்ச்சிக்கு உதவிய வழுக்கை எலிக்கு முடி முளைக்க ஆரம்பித்திருக்கிறது.

உலகம் முழுவதும் சராசரியாக 25 சதவீத ஆண்கள் 30 வயதுக்குள் வழுக்கை ஆகின்றனர். மற்றவர்கள் 60 வயதுக்குள் ஆகின்றனர். வயது மட்டுமின்றி பரம்பரை, அதிக வேலைச்சுமை, மன அழுத்தம், சுற்றுச்சூழல் எனப் பல காரணங்கள் இருக்கின்றன.

இந்த நிலையில், ஸ்டெம் செல் உதவியுடன் வழுக்கைத்தலையில் முடி முளைக்க வைப்பது தொடர்பான ஆராய்ச்சியில் ஜப்பானின் டோக்கியோப் பல்கலையில் உள்ள சுஜி அறிவியல், தொழில்நுட்ப ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். எலிகளை வைத்து இந்த ஆராய்ச்சி நடந்தது. ஸ்டெம்செல்லில் இருந்து முடி வளர்ச்சிக்குத் தேவையான போலிக்கிள் எனப்படும் பகுதிப் பொருள் மட்டும் எடுக்கப்பட்டு, வழுக்கை எலியின் தலையில் பொருத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. எலியின் தலையில் வழக்கம்போல் முடி முளைப்பதாக ஆராய்ச்சிக் குழுத் தலைவர் டகாஷி சுஜி கூறியுள்ளார்.

## வரவேற்கும் கமராக்கள்..



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த வாரம் இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு ஆப்கானிஸ்தான் சென்றிருந்தார். அதன்போது அவரை வரவேற்கக் காத்திருந்த அமெரிக்க மற்றும் நேட்டோ இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளை மறந்து கமராக்களை ஏந்தியிருந்தனர்.

### அமெரிக்க இறைச்சிக்கு இந்தோனேஷியாவில் தடை

அமெரிக்காவில் இருந்து மாட்டு இறைச்சியை இறக்குமதி செய்யஇந்தோனேஷியா நேற்று முன்தினம் முதல் தடை விதித்தது.

அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இந்தோனே ஷியாவுக்கு மாட்டு இறைச்சி இறக்குமதி செய்யப்படுகிறது. இதில் அமெரிக்காவில் இருந்து மட்டும் ரூ.85 கோடி கிலோ அளவுக்கு இறக்குமதியாகின்றது.

இந்த இறைச்சியால் இந்தோனேசிஷியாவில் நோய் பரவுவதாக கூறப்படுகிறது. இந்தத்தகவலை விவசாயத் துணை அமைச்சர் ருஷ்மான் உறுதிப்படுத்தியுள்ளார். இதனையடுத்து தடை விதிக்கப்பட்டது.

## இப்படியும் தில்லுமுல்லு சிக்கினார் இளம் யுவதி



மார்பகங்களைப் பெரிதாக்கிக்கொள்ளும் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக, தனக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்று பொய் கூறி நிதி திரட்டிய பெண்ணொருவர் மோசடி மற்றும் திருட்டுக் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜெமி லியென் டொலர் என்னும் 27 வயதுடைய மேற்படி பெண், தான் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சத்திரசிகிச்சையின் மூலம் இரு மார்பகங்களையும் அகற்ற வேண்டுமென்றும் தான் பணியாற்றிய நிறுவன உயர் அதிகாரியிடம் கூறியுள்ளார். இதே விடயத்தைத் தனது தாத்தா பாட்டியிடமும் கூறியுள்ளார் என்று பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணுக்கு உதவுவதற்காக நலநிதிய அமைப்பொன்று 8000 இற்கும் மேற்பட்ட டொலர்களைத் திரட்டிக் கடந்த டிசெம்பர் மாதம் அவரிடம் கையளித்துள்ளது. ஆனால், அவருக்கு மார்பகப் புற்றுநோய் இல்லையென்றும் அவர் மார்பகத்தைப் பெரிதாக்குவதற்கான சத்திரசிகிச்சை செய்துகொண்டுள்ளார் என்றும் பொலிஸாரினால் பெறப்பட்ட மருத்துவ அறிக்கையில் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெண்ணுக்கு இலவசமாக மார்பகப் புற்றுநோய்க்கான சிகிச்சையைச் செய்வதற்கு மருத்துவர் ஒருவர் முன்வந்தார். ஆனால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்த அந்தப்பெண் மறுத்ததையடுத்தே அவரது உண்மையான கதை வெளிவரத் தொடங்கியது எனப் பொலிஸ் அதிகாரி அன்ரனி லண்டாட்டோ தெரிவித்துள்ளார்

## இரட்டைக் கோபுர தாக்குதல் வழக்கு ஆரம்பம்

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐந்து பேர் தொடர்பான இராணுவ நீதிமன்ற விசாரணை முதல்முதலாக குவான்டனாமோ குடா நீதிமன்றில் ஆரம்பமாகியுள்ளது.

2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களைத் திட்டமிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கலிட் ஷேக் மொஹமட் உள்ளிட்ட ஐவருக்கு எதிரான விசாரணைகளே ஆரம்பமாகின.

ஏழு மணித்தியாலங்கள் இடம்பெற்ற முதல் நாள் விசாரணையின் போது, ஒரு சந்தேக நபர் ''இந்த விசாரணைகள் நிறைவடைவதற்கு முன்னர் அமெரிக்கர்கள் தம்மைக் கொலை செய்து விடுவார்கள்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகயில் ஐந்து சந்தேக நபர்களும் தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள கொலை மற்றும் பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளை முற்றாக மறுத்துள்ளனர்.

இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள 2 ஆயிரத்து 976 உயிர்களைக் காவு கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சந்தேக நபர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு தமக்கு எதிரான வழக்கு, அமெரிக்க சிவில் நீதிமன்றில் விசாரிக்கப்பட வேண்டும் என்று மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காத பட்சத்தில், தற்போது இந்த இராணுவ நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நியூயோர்க், வொஷிங்டன் மற்றும் பென்சில்வேனியா ஆகிய இடங்களில் இருந்து விமானங்களை ஒரே நேரத்தில் கடத்திச் செல்வதற்கான திட்டத்தை இவர்களே தீட்டினார்கள் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## கனடாவிலும் மாணவர்களின் போராட்டம்

கனடாவில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எனவே உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்ற நிலை அரசுக்கு உருவாகி உள்ளது.

இதுதொடர்பாக கியூபெக் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளையும், CEGEP நிர்வாகிகளையும் முதல்வர் ஜீன் சாரேஸ்ட் மற்றும் கல்வி அமைச்சர் லைன் பயுசம்ப் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் போது, அரசுக் கல்விக் கட்டணங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு வழங்கவிருக்கும் சலுகைகள் குறித்துப் பேசியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இருப்பினும் இதுகுறித்து முழுமையான தகவல்கள் வெளியிட முதல்வர் அலுவலக வட்டாரங்கள் மறுத்து வருகின்றன.

பல்கலைக்கழகங்களில் தேர்வுகள் நடந்து வரும் இந்த வேளையில், ஆர்ப்பாட்டங்களை நிறுத்திக் கொண்டு தேர்வு முடிந்த பின் அரசுடன் பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும் என முதல்வர் இந்தச் சந்திப்பின் போது கேட்டுக் கொண்டனர் எனவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதுகுறித்து கல்வி அமைச்சர் லைன் பயுசம்ப்'' ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டு பேச்சுக்கு முன்வரும் மாணவர் அமைப்பின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பேசி சுமுக நிலையை எட்டவே அரசு விரும்புகிறது ''என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பலாகியது புனர்வாழ்வு நிலையம்

## 14 பேர் பரிதாபச் சாவு



லிமா,மே8

பெரு தலைநகர் லிமாவில் போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.


குறித்த நகரில் இந்த ஆண்டில் ஏற்பட்ட இரண்டாவது தீ விபத்து இதுவென அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த நிலையத்தின் கதவுகள் மூடியிருந்த மையால் உள்ளிருந்த நபர்கள் தப்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை கடந்த ஜனவரி மாதம் லிமா நகரில் உள்ள மற்றுமொரு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 29 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீ விபத்து சதி முயற்சிகள் காரணமாக இடம்பெற்றிருக்கலாமா என்ற ரீதியில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பரப்புரையைத் தொடங்கினார் ஒபாமா



கொலம்பஸ், மே 8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் பராக் ஒபாமா, முறைப்படி தனது தேர்தல் பரப்புரையை நேற்று முன்தினம் தொடங்கினார்.

அமெரிக்காவில் கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு அதிபரானார் ஒபாமா. இவரது பதவிக் காலம் முடிவதை அடுத்து எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். எதிர்க்கட்சி வேட்பாளராக மிட் ரோம்னி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் தீவிரமாகப் பரப்புரை செய்து வருகிறார். இந்த நிலையில், தனது தேர்தல் பிரசாரத்தை ஒபாமா நேற்று முன்தினம் முறைப்படி தொடங்கினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது, 'நம்மால் முடியும்' என்ற கோசத்தின் அடிப்படையில் பரப்புரை செய்து இளைஞர்களைக் கவர்ந்தவர் ஒபாமா. ஆனால், இப்போது அமெரிக்கா கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. வேலைவாய்ப்புகள் இல்லாமல் இளைஞர்கள் தவிக்கின்றனர். இதனால் ஒபாமாவின் செல்வாக்கு சரிந்துள்ளது என்று அரசியல் வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில்,'முன்னேறு' என்ற கோசத்துடன் ஒகியோவில் பரப்புரையைத் தொடங்கினார் ஒபாமா. அப்போது அவர் பேசுகையில்,'' கடும் பொருளாதாரச் சிக்கலில் அமெரிக்கா இருந்தபோது நான் ஜனாதிபதி பதவி ஏற்றேன். பல பிரச்சினைகள் எழுந்தாலும் எங்கும் நான் ஓடிவிடவில்லை. எதிர்க்கட்சி வேட்பாளர் ரோம்னி, தவறான யோசனைகளைக் கூறி பரப்புரை செய்கிறார். நடுத்தர வர்க்கத்தினரைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. பணக்காரர்களுக்குச் சாதகமான திட்டங்களைக் கூறி பரப்புரை செய்கிறார்.

அவற்றை நம்பாதீர்கள். அமெரிக்காவுக்கு இது வெறும் தேர்தல் அல்ல. நாட்டின் பொருளாதாரம், மக்களின் முன்னேற்றம் பற்றிய விடயம். எனவே, ரோம்னிக்கு வாய்ப்புக் கொடுத்து விடாதீர்கள்''- என்றார். ஒபாமாவின் மனைவி மிச்செல்லும் பரப்புரை செய்தார். அதன் போது அவர் ''சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர் ஒபாமா. அவருக்குக் குடும்ப கஷ்டம் தெரியும். அவர் யார் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு மீண்டும் வாய்ப்புக் கொடுங்கள்''- என்றார்.

# ஒலிம்பிக் அரங்கை திறந்து வைத்தார் சிறுமி

பார்வையாளராகச் சென்ற,நியாம்ச் கிளார்க் வில்லியஸ் என்ற 9 வயதுச் சிறுமிக்கு லண்டன் ஒலிம்பிக் அரங்கைத் திறந்து வைக்கும் உன்னத வாய்ப்பு கிட்டியது. 2012 ஆம் ஆண்டைக் குறிக்கும் வகையில், ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கச் சரியாக 2012 மணி நேரம் இருந்தபோது, பலூன்கள் பறக்கவிடப்பட்டு ஒலிம்பிக் அரங்கம் திறக்கப்பட்டது.

கிழக்கு லண்டனைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி நியாம்ச் கிளார்க் வில்லியஸ் லண்டன் ஒலிம்பிக் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் செபஸ்ரின் கோய் உடன் இணைந்து ஒலிம்பிக் அரங்கத்தைத் திறந்து வைத்தார். மின்னொளியில் நடைபெற்ற இந்த விழாவில், சுமார் 40 ஆயிரம் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். இதைத்தொடர்ந்து, 100 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் தடைதாண்டுதல்,ஈட்டியெறிதல் உள்ளிட்ட பிரிவுகளில் பயிற்சிப்போட்டிகள் நடைபெற்றன.

பயிற்சிப் போட்டிகளுக்காகவும், சர்வதேச ஒலிம்பிக் ஆணையகத்திடம் இருந்து அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் ஒலிம்பிக் அரங்கம் திறக்கப்பட்டுள்ளது.

உலகமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி தொடங்கவுள்ளன.


## காணி விற்பனைக்கு

**பின்வரும் காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு**

1. வரணி இயற்றாலையில் பருத்தித்துறை வீதியில், (எருவன் நுணாவடிச் சந்திக்கு அருகில்) புற்றுக்கோயிலுக்கு அருகிலுள்ள காணி
2. வரணி இயற்றாலையில் பருத்தித்துறை வீதியில், மேற்குப் புறமாக (எருவன்) பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ 100 m தூரத்திலுள்ள வெறும் காணி

வாரநாள்களில் தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு : 077 9452036


# எகிப்தில் 300 பேர் கைது

கெய்ரோ, மே 8

எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கடந்த வாரம் இடம்பெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது, 300 பேர்வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பல ஊடகவியலாளர்களும் உள்ளடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்; நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 15 நாள்களுக்குத் தடுப்பில் வைக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் ஊடகவியலாளர்கள் தொடர்பாகத் தனித்தனியாக விசாரணைகள் இடம்பெறும் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பாதிப்படைந்த பிரதேசங்களில் தொடர்ச்சியாக இரண்டு நாள்களாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தது.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
08★ 11★ 1938

இறப்பு
08★ 05★ 2009

திருமதி
**ஆதிபுவனேஸ்வரி செல்வராசா**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மூன்று நாள்கள் கூடப் பிரியாத நீ – இன்றுடன்
மூன்று ஆண்டுகள் பிரிந்து விட்டாயே
மரணமும் நல்ல நாள் பார்த்துத்தான் வந்திடுமோ?
அதனாலேதான்
சித்திரைப் பூரணையில் வெள்ளிக்கிழமை – அதுவும்
நீ பிறந்த எட்டாந் திகதி
காலன் உன்னைக் கவர்ந்தானோ?
உங்களது ஆத்மா சாந்தியடைய
மலர் தூவி அஞ்சலிக்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (17441) (2-6-9) – குடும்பத்தினர்.

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
16★ 05★ 1950

உதிர்வு
21★ 04★ 2000

திருமதி
**தர்மராஜா சண்முகமலர்**
(இணுவில் மேற்கு)
திதி:- 08.05.2012

பேசும் தெய்வமாய் உறவாடி மகிழ்ந்து
வீசும் தென்றலாய் அரவணைத்து முத்தமிட்டு
பாசமழை பொழிந்து
வசத அருள் கமிழ்ந்த எங்கள் தெய்வமே - அம்மா!
அயர்வின்றி நாளும் எங்கள்
உயர்வுக்காய் உருகினாய் அம்மா!
எண்ணங்கள் யாவையும்
எண்ணியாங்கு நிறைவாக்கினாய் அம்மா!
கருவியாய் நின்று எம்மை எல்லாம்
உருவம் தீட்டிய சிற்பியே அம்மா!
என்றென்றும் எம் மனங்களிலே நிலைத்து வாழ்ந்து
பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்ததுவே இன்று.

வே.தர்மராஜா,
இணுவில் மேற்கு. (17783) (2-6-9) – குடும்பத்தினர்.

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

தலைமை : திரு.வி. உமாபதி (சிரேஷ்ட எந்திரி)
காலம் : 20.05.2012 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மு.ப. 9.00 மணி
இடம் : சிவபாதசுந்தரம் மாநாட்டு மண்டபம், விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

பிரதம விருந்தினர்
வைத்தியகலாநிதி இ. சுரேந்திரகுமாரன் ( MBBS, MD )
தலைவர், சமுதாய மருத்துவத்துறை
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

நிகழ்ச்சி நிரல்:
1.இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. பிரதம விருந்தினர் உரை
6. [illegible]
7. புதிய நிர்வாகசபை தெரிவு
8. நன்றியுரை
9. கல்லூரி கீதம்

அனைத்து பழைய மாணவர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்
புதிய அங்கத்தவர்களை இணைந்து
கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(11)

### சந்தேக நிழலைப் படிய விடலாமா?

*' தன் மீதே தனக்குள்ள அவநம்பிக்கை சந்தேகம்.*
*' அதை என்னால் செய்து முடிக்க இயலுமா?*
*' நான் அந்தப் பதவிக்கு தகுதியானவன் தானா?*

போன்ற கேள்விகள் தன்னுடைய தகுதியிலும், திறமையிலும் தனக்குள்ள சந்தேகத்தையே வெளிக்காட்டும்.

கீழ்மைப் பணியாளர் நேர்மையாக நடந்து கொள்ளமாட்டார் என்கிற சந்தேகம் உயரதிகாரிக்கு இருக்கும். முக்கிய வேலையை அவரிடம் ஒப்படைக்கத் தயங்குவார்.

வீட்டில் நகை தொலைந்தால் வேலைக்காரி மீது சந்தேகம்.

பெட்டியில் பணம் குறைந்தால் பிள்ளை மீது சந்தேகம்.

சிலருக்குத் தங்கள் வாழ்க்கைத் துணையிடம் சந்தேகம். சமயத்தில் கண்காணிக்க ஆள் போடுவதும் உண்டு.

தன்னுடைய திறமையில் நம்பிக்கையில்லாதவர் ஒரு போதும் வெற்றிக் கனியைப் பறிப்பதில்லை.

கீழ்மைப் பணியாளரின் திறமைகளைச் சரிவரக் கணித்துக் கொண்டால் சந்தேகம் ஏன் வரப்போகிறது?

ஒருவரிடம் எளிதில் நம்பிக்கை வைக்கக் கூடாது. நம்பிக்கை வைத்துவிட்டாலோ சந்தேகப்படக் கூடாது. இது வேலைக்காரர்களுக்குப் பொருந்தும்.

பிள்ளைகளிடம் பெற்றோருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்றால் அது பெற்றோரின் வளர்ப்பு முறையில் உள்ள தவறு.

சரியாகத் திட்டமிட்டுக் கொண்டு செயலில் இறங்கினால் வெற்றி குறித்துச் சந்தேகப்பட வேண்டியிருக்காது.

சந்தேகம் கவலையைத் தோற்றுவிக்கும். சந்தேகம் உள்ள வரைக் கவலையும் தொடரும். சம்பந்தப்பட்டவர் நிம்மதியை இழக்க நேரிடும்.

நெப்போலியனுடைய காதல் வாழ்க்கை சந்தேகத்துக்குள்ளாகி அவனை நிம்மதியிழக்கச் செய்தது. அவர் மனைவியான ஜோசஃபின் அவனுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை.

சந்தேகம் எத்தனையோ தம்பதிகளின் வாழ்க்கையை நரகமாக்கியிருக்கிறது. சருகுக் குவியலின் மீது தீக்குச்சியை உரசப் போடுவது போல் சந்தேகம் எளிதாய் வந்துவிடும். ஆனால் அதைத் தீர்ப்பது காட்டுத் தீயை அணைப்பது போல் கடினமானது.

### உங்களை வாட்டும் குற்ற உணர்வு

குற்ற உணர்வு கொண்டவர்கள் எடுத்ததற்கெல்லாம் அஞ்சி நடுங்குவார்கள். தெரிந்தோ தெரியாமலோ தாங்கள் செய்து விட்ட ஒரு தவறுக்காக ஆழ்ந்த வருத்தம் கொண்டு விடுவார்கள்.

குற்ற உணர்வு தன்னைத் தானே வதைபடச் செய்யும். சொந்த நிழலைக் கண்டே அஞ்சுகிற நிலை ஏற்படும்.

குறை கூறும் மனிதர்கள் நடுவே பணிபுரிபவர்கள் குற்ற உணர்வோடு இருப்பார்கள். உண்மையில் எந்தவொரு தவறையும் செய்யாதபோதும் தங்கள் முதலாளி அல்லது மேலதிகாரி எந்த நிமிடத்திலும் தன் வேலையில் குறை கண்டு, தன்னைத் தண்டித்து விடுவார் என்கிற பயம் இருக்கும். அதுவே அவர்களை அஞ்சி நடுங்க வைக்கும்.

குற்ற உணர்வு உடலையும் மனதையும் ஒருங்கே பாதித்து விடும். சம்பந்தப்பட்டவரின் எண்ணமும், செயலும் பாதிக்கப்படும்.

தங்கள் குற்றத்தை நியாயப்படுத்தத் தெரியாதவர் தாம் குற்ற உணர்வுக்குள்ளாகுவர். விதிமுறைகளுக்குட்பட்டு தவறு செய்யக் கற்றவர்களும், சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து விளையாடுகிறவர்களும் குற்ற உணர்வு கொள்வதேயில்லை.

குற்ற உணர்வு கவலையைத் தரும். 90 சதவீதம் நரம்புக் கோளாறுகளுக்கு அதுவே காரணம். மனச்சாட்சியின் குரலான குற்ற உணர்வு எது சரி, எது தவறு என்பதை உணர்த்திக் காட்டும். ஆனாலும் அந்தக் குரல் எப்போதுமே ஒலித்துக் கொண்டிருந்தால் பிரச்சினைதான்.

குற்ற உணர்வு கொண்டவரால் இயல்பாகச் செயற்பட முடியாது. நீங்கள் நேர்மையும் துணிவும் கொண்டு வாழும் பட்சத்தில் எது பற்றியும் கவலைப்பட மாட்டீர்கள்.

### அச்சத்தை விடுங்கள்

மருத்துவத்துறையில் அரும்பணியாற்றிய நோபல் பரிசு பெற்ற டாக்டர் அலக்ஸிஸ்காரல் கூறுவார், 'கவலையை எதிர்த்துப் போரிடத் தெரியாத தொழிலதிபர்களும், வியாபாரிகளும் தங்கள் இளம் வயதிலேயே இறந்து விடுகிறார்கள்'. இல்லத்தரசிகளும் கூட கவலைக்கெதிராய் எப்படிப் போரிடுவது என்று தெரியாமல் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

'உங்களால் அச்சத்தையும் கவலையையும் வெல்ல முடியும் என்றால் நீங்கள் மருத்துவமனைக்குச் செல்கிற அவசியம் இருக்காது' என்கிறார் மருத்துவ அதிகாரி ஒருவர். இதன்பொருள் உங்களுடைய நோய்கள் நீங்கள் கற்பனையாக வருவித்துக் கொண்டவையே என்பதாகும்.

ஆனால் அசீரணம், வயிற்றுப்புண், இருதய உபாதை உறக்கமில்லாத நிலை (insomnia) சிலவகை தலைவலிகள், சிலவகை முடக்குவாதங்கள் இவற்றுக்கு அச்சம் அல்லது கவலைதான் காரணம் என்பதும் உண்மை.

-சி.எஸ்.தேவநாதன் *(தொடரும்)*

# வள்ளுவர் காட்டிய சிந்தனைகள் எமது வாழ்வை நல்வழிப்படுத்தும்

## விரிவுரையாளர் லலீசன் தெரிவிப்பு

**போருக்குப் பின்னரான வாழ்வு என இன்றைய சூழலை அழைக்கின்றோம். இந்த வாழ்வியல் உள ரீதியான அமைதியை எம்மவரிடையே ஏற்படுத்தவில்லை. தமிழுணர்வுடன் வாழ்வதற்கான அத்திபாரத்தை வழங்கவில்லை.**

யாழ்ப்பாணம், மே 8

வள்ளுவர் காட்டிய சிந்தனைகளை இன்றைய காலத்துடன் பொருத்திப் பார்ப்பது வாழ்வியலின் நல்வழிப்படுத்தலுக்கு உறுதுணை புரியும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்ட செய்திகள் இக்காலத்துக்கேற்ற மொழிநடையில் வழங்கப்படல் வேண்டும் என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித்தார்.

மூதறிஞர் மட்டுவில் நா.நல்லதம்பி எழுதிய திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள் என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் அ.கயிலாய பிள்ளைதலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூலுக்கான ஆய்வுரையை நிகழ்த்துகையிலேயே லலீசன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாயக்க மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழுக்கு ஏற்பட்ட சோதனைகளுக்கு ஒப்பான நிலைமைகள் இன்றும் உள்ளன.

அந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த புலவர்கள் மொழியையும் பண்பாட்டையும் காப்பதன் பொருட்டு பழைமை பேணும் பண்பை வெளிக்காட்டினர். இதன் மூலம் தமிழ் மொழி மற்றும் தமிழ் வாழ்வு பற்றிய உணர்வுகளை ஊட்டினர்.

போருக்குப் பின்னரான வாழ்வு என இன்றைய சூழலை அழைக்கின்றோம். இந்த வாழ்வியல் உள ரீதியான அமைதியை எம்மவரிடையே ஏற்படுத்தவில்லை. தமிழுணர்வுடன் வாழ்வதற்கான அத்திபாரத்தை வழங்கவில்லை.

இந்த நிலையில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அறிவு தமிழ் மீதான பற்றுதலை அதிகரிப்பதற்கு உதவி செய்யும்.

தமிழின் கதி எனக் கம்பராமாயணத்தையும் திருக்குறளையுமே குறிப்பிடுவர்.

திருக்குறளில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு கம்பராமாயணம் போன்ற நூல்கள் எவ்வாறு இலக்கியமாகின்றன என நூலாசிரியர் விளக்கியுள்ளார். இது ஒரு வகையில் ரசனை முறையில் அமைந்த திறனாய்வுப் பாங்கிலேயே உள்ளது.

மட்டுவில் தந்த மூதறிஞர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் வழியில் அவரிடம் கல்வி கற்ற நா.நல்லதம்பியும் குறட்பாக்களுக்கு ரசனை முறையில் விளக்கமளித்துள்ளார் - என்றார். (எ)

# சிறுகதை, சித்திரப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 8

உலக புத்தகதினத்தை முன்னிட்டு இணுவில் மேற்கு நூலக விழிப்புணர்வு நிறுவனத்தினால் நடத்தப்படும் கவிதை,கட்டுரை, சிறுகதை, சித்திரம் ஆகிய போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.


பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு என நடத்தப்படும் இந்தப் போட்டியில் பாலர் பிரிவு தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்கள் நூலகம், வாசிப்பு தொடர்பாக விரும்பிய ஆக்கங்கள் அனுப்பலாம்.

கீழ்ப் பிரிவில் தரம் 6,7,8 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் 'நல்ல புத்தகங்களே நல்ல எண்ணங்களை வளர்க்கும்' எனும் தலைப்பில் கட்டுரையையும்,''உயிர்ப்பூட்டும் உன்னத நூல்கள்'' எனும் தலைப்பில் சித்திரமும் ''மேன்மையான வாழ்வுக்கு வாசிப்பே உந்துசக்தி'' எனும் தலைப்பில் சிறுகதையும், ''சிறுவர்களின் மகிழ்வகம்'' எனும் தலைப்பில் கவிதையும் அமைந்திருத்தல் வேண்டும்.

மத்திய பிரிவில் தரம் 9,10,11 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றிக்கரமான வாழ்க்கைக்கு வாசிப்பின் அவசியம் எனும் தலைப்பில் கட்டுரையையும்,''வாசிப்பினால் ஒன்று சேர்வோம்'' எனும் தலைப்பில் சித்திரமும்'', ''ஒரு நூல் நிலையம் திறக்கப்படும் போது 100 சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன'' எனும் தலைப்பில் சிறுகதையும். ''அறிவுத் தீபம்'' எனும் தலைப்பில் கவிதையும் அமைந்திருத்தல் வேண்டும்.

மேல் பிரிவில் தரம் 12,13 ஆகிய தரங்களைச் சேர்ந்த மாணவர்களும், திறந்த போட்டியாளர்களும், ''மனிதன் புனிதனாக இருக்க புத்தகங்கள் வாசித்தல் வேண்டும்'' எனும் தலைப்பில் சித்திரமும் ''அறிவுலகின் நுழைவாயில் வாசிப்பும் சமூக மேம்பாடும் வாசிப்புத் திறன் வளர'' எனும் தலைப்பில் கட்டுரையும் ''புத்தகம் வாசித்தால் நீ புனிதனாவாய் இல்லையேல் மனிதனாய் இருப்பாய்'' எனும் தலைப்பில் கட்டுரையும், ''அறிவாலயம்'' எனும் தலைப்பில் கவிதையும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஆர்வம் உடையவர்கள் தமது ஆக்கங்களைத் தயார் செய்து தலைவர், நூலக விழிப்புணர்வு நிறுவகம், வட்டுவினி அம்மன் கோயிலடி இணுவில் தெற்கு எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். (எ-14)



நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு விழாவில் பழம்பெரும் நடிகர், கவிஞர், கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதத்திற்கு நிலையத் தலைவர் இ.செல்வமாணிக்கராசா பாமாலை வழங்கிக் கௌரவித்தபோது.

# முல்லைத்தீவு கல்விவலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

**பிரிவு 2 - பேச்சு**

முதலாமிடம் சி.கதீசனா - வற்றாப்பளை ம.வி., இரண்டாமிடம் தே.ஜொனி - அளம்பில் றோ.க. வித்தி., மூன்றாமிடம் உ.டினோஜ்குமார்- குமுழமுனை ம.வி.

**பிரிவு 5 - பேச்சு**

முதலாமிடம் இ.எழில்மதி - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இரண்டாமிடம் பா.சாயிபவானி - குமுழமுனை ம.வி.

**பிரிவு 1 - ஆக்கத்திறன் வெளிப்பாடு**

முதலாமிடம் கி.தர்சனா- சிறீசுப்பிரமணிய வித்தி., இரண்டாமிடம் ஜெ.ஜெயதீபன்- விக்கினேஸ்வரா வித்தி., மூன்றாமிடம் அ.விதூசன் - வள்ளிபுனம் க.வித்தி.

**பிரிவு 2 - நடனம் தனி**

முதலாமிடம் கு.ஆனந்தி - தேராவில் த.வி., இரண்டா மிடம் ர.கவிப்பிரியா - கலைமகள் வித்தி., மூன்றாமிடம் இ.றஜிபிரியா - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**பிரிவு 3 - பாவோதல்**

முதலாமிடம் சிறீ.அக்சயா - செம்மலை ம.வி., இரண்டாமிடம் ர.ஜமுனா - உடையார்கட்டு ம.வி., மூன்றாமிடம் அ.வதனராணி - முல்லைத்தீவு ம.வி.

**பிரிவு 2 - வாசிப்பு**

முதலாமிடம் சி.ஜிந்துசன்- வெட்டுவாய்க்கால் அ.த.க.பா., இரண்டாமிடம் இ.துஷானா - கலைமகள் வித்தி., மூன்றாமிடம் செ.டிலக்ஷிகா- அளம்பில் றோ.க. வித்தி.

**தி.போ. - முஸ்லிம் நிகழ்ச்சி**

முதலாமிடம் முல்.-18 - தண்ணீரூற்று முஸ்லிம் வித்தி., இரண்டாமிடம் முல். -15-வித்தியானந்த கல்லூரி.

**பிரிவு 5 - பாவோதல்**

முதலாமிடம் கி. கீர்த்திகா - வித்தியானந்த கல்லூரி.

**பிரிவு 5 - இசை தனி**

முதலாமிடம் சூ.நிலோஜா - முல்லைத்தீவு ம.வி., இரண்டாமிடம் த.சுதர்சினி - வற்றாப்பளை ம.வி., மூன்றாமிடம் ம.டர்சன் - குமுழமுனை ம.வி.

**தி.போ. - வில்லுப்பாட்டு**

முதலாமிடம் முல்.-11-கலைமகள் வித்தி., இரண்டாமிடம் முல்.-1- பாரதி வித்தி., மூன்றாமிடம் முல்.-14-வற்றாப்பளை ம.வி.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தண்டிக்கப்படாத குற்றங்கள் மீண்டும் ஒருமுறை

தம்புள்ள விகாரை அமைந்துள்ள புனிதப் பிரதேசத்தில் இருந்து பள்ளிவாசலை அகற்றும்படி. கோரும் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று அந்த விகாரையின் தலைமைப் பிக்கு இனாமலுவே சுமங்கல தேரர் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

அவரது கருத்துப்படி, கிறிஸ்தவர்களை அதிகம் கொண்ட வத்திக்கான் கிறிஸ்தவநாடு என்று சொல்லப்படுவதைப் போலவும் முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட நாடு முஸ்லிம் நாடுகள் என்று சொல்லப்படுவதைப் போலவும் பௌத்தர்களை அதிகமாகக் கொண்ட நாடான இலங்கை பௌத்த நாடாகவே இருக்கவேண்டும்; அங்கு பௌத்தத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

பகிரங்கமாக இந்த மதவாதக் கருத்தை அவர் ஊடகங்களிடம் உமிழ்ந்திருக்கிறார். அதற்கான துணிவை அவருக்குக் கொடுத்திருப்பது இலங்கை அரசின் ''தண்டிக்கப்படாத குற்றங்களை'' அனுமதிக்கும் போக்கே.

**50 வருடங்களாக தம்புள்ளயில் இருந்துவரும் பள்ளிவாசலை உடைத்து அகற்றவேண்டும் என்று ஊர்வலம் புறப்படுவதைத் தடுக்கத்தவறிய இந்த அரசும் அதன் ஜனாதிபதியும், பள்ளிவாசலை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கிச் சேதப்படுத்திய பின்னரும் அதில் ஈடுபட்டவர்களையும் அதற்குத் தலைமைதாங்கிய பிக்குவையும் கைது செய்து இலங்கையின் பல்லின பல மத சுதந்திரத்தைப் பேணுவதற்கு அரசு தவறியதே மதவாதக் கருத்துக்களை பிக்குகள் இன்னும் பேசிக் கொண்டிருப்பதற்குக் காரணம்.**

இந்த இடத்தில்தான் தமிழகத்தில் சங்கராச்சாரியார் மீதான குற்றச்சாட்டுக்கள் மீது ஜெயலலிதா நடவடிக்கை எடுத்தமையும் இப்போது மதுரையின் இளைய ஆதீனமாக – பாலியல் குற்றஞ்சாட்டப்பட்டவரான – நித்தியானந்தா நியமிக்கப்பட்டதை அடுத்து மதுரை ஆதீனம் மீதே சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளமையும் நினைவுக்கு வருகிறது.

ஜெயலலிதா ஒரு பிராமண வம்சாவழியைச் சேர்ந்தவர் என்றும் பிராமண மேலாதிக்க சிந்தனைகளைக் கொண்டவர் என்றும் கடுமையான விமர்சனங்கள் உள்ளபோதும், இந்து மதத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அவர் தயங்கியதே இல்லை என்பதையே அவரது செயல்கள் காண்பிக்கின்றன.

மதத்தைத் தாண்டி, மதம் கைகோர்த்துள்ள அரசியலைத் தாண்டி நீதியை நிலைநாட்ட வேண்டிய தனது கடமையை தமிழக அரசும் அதன் முதல்வரும் செய்வதாக உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அரசமைப்பைப் பாதுகாக்கவும் மக்கள் மத்தியில் மத, இன வாதங்கள் மேலெழும்பி முரண்பாடுகள் வளராமலும் இருப்பதற்கு எந்தவொரு நாட்டிலும் இத்தகைய நடவடிக்கைகள் அவசியமானவையே.

இலங்கையில் மட்டுமே அவை மருந்துக்கும் இல்லை. மத ஆக்கிரமிப்புக்களுக்கும் பௌத்த மதவாதத்துக்கும் இடமளிக்கும் போக்கையும் பௌத்த மதத்தால் ஏனைய சிறுபான்மை மதங்கள் நசுக்கப்படும் போக்கையும் கண்டுகொள்ளாமல் அதனை இன்னும் ஊதி வளர்க்கும் அரசுகளே ஆண்டாண்டு காலமாக இலங்கையை ஆளுகின்றன.

இந்த நாட்டின் சாபக்கேட்டுக்கு இதுவே காரணம். மதங்கள் கூறும் நீதியையும் சகிப்புத் தன்மையையும் கைவிட்டு மதத் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கே மஹிந்த அரசும் இப்போது வித்திட்டு வருகிறது. இதன் விளைவாக எதிர் மத தீவிரவாதம் வளருமேயன்றி வேறொன்றாகவும் இருக்காது.

# 13 + என்றால் என்ன?

■ *தமிழில்: வீயெஸ்ரி*

இன்று இலங்கை அரசியல் அரங்கில் பேசுபொருளாகியிருக்கும் முக்கிய விடயம், 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் வகையிலான தீர்வு மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் என்பதாகும். குறிப்பாக இந்திய உயர் மட்ட அரசியல் தலைவர்களோ, அதிகாரிகளோ இலங்கைக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ளும் வேளைகளில் இந்த விடயம் பிரபல்யம் பெறுகிறது. நாட்டின் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு அத்தகைய அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை வழங்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளார், என்று இலங்கையில் வைத்துக் கருத்துக் கூறும் இந்தியக் குழு, பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் அத்தகைய தீர்வொன்றை வழங்க அரசு தயாரில்லை எனக் கூறி முன்னைய செய்தியை மறுப்பதும் வழக்கமாகிவிட்டது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் விதத்திலான தீர்வு முயற்சி என்பதுதான் என்ன என்பது இதுவரை தெளிவற்றதொரு விடயமாகவே இருந்து வருகிறது.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்தவேளையில் இந்தியப் பிரதமராயிருந்த ராஜீவ் காந்திக்கும், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்குமிடையில் அந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்த நாட்டின் மாகாண சபைகள் நடைமுறையை ஏற்படுத்த உருவாக்கப்பட்டதே 13ஆவதுதிருத்தமாகும். 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது என்பதன் அர்த்தம், அந்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கும் மேலதிகமான அதிகாரங்களை வழங்கி அந்த நடைமுறையைப் பலப்படுத்துவது என்பதாகும்.

**13 ஆவது திருத்தத்துக்கு அமைய குறிப்பிட்ட சில அம்சங்களில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பிரித்தொதுக்கப்பட்டுள்ளன. அதேசமயம் மத்திய அரசின் வசம் இருக்க வேண்டிய அதிகாரங்கள் எனவும், மாகாண சபைகளிடம் இருக்க வேண்டிய அதிகாரங்கள் எனவும், மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுக்குரிய இணைந்த அதிகாரங்கள் எனவும், அதிகாரங்கள் மூன்று முக்கிய பிரிவுகளாக வகுத்தொதுக்கப்பட்டன.**

இந்த விதம் மூன்று பிரிவுகளாக அதிகாரங்கள் வகுத்தொதுக்கப்பட்ட மாகாண சபைகள் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த நிலையிலும், இந்த அதிகாரப்பகிர்வு நடைமுறை உரிய வகையில் பூரணமாக இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள் இந்த நடைமுறையை ஏற்றுச் செயற்பட்ட போதிலும், விடுதலைப் புலிகள் அமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளாது. விடுதலைப் புலிகள் அமைப்பு அரசுடன்போரில் இறங்கியமையே அதனை நடைமுறைப்படுத்த இயலாமற்போனமைக்கான காரணமாக முன்வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கையில் இறங்கி இந்திய அமைதி காக்கும் படை அவர்களுடன் போரில் ஈடுபட்டு வந்தவேளையில், ஜே.ஆருக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற ஆர்.பிரேமதாச, இந்திய அமைதி காக்கும் படையை நாட்டை விட்டு வெளியேற்றினார். அதன் பின்னர் இரு தசாப்தங்கள் வரையான காலம் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே தொடர்ந்த போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது.

போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் முடிவடையும் இந்தவேளையில், இந்த மூன்றாண்டு கால இடைவெளியிலும் கூட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த இலங்கை அரசு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. இந்த நிலையில் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வொன்றை வழங்க இந்த அரசால் எவ்வாறு இயலும்? முதலில் 13 ஆவது திருத்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே அதற்கு மேற்சென்று வேறு அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்கி அந்த நடைமுறையைப் பலப்படுத்த இயலும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற் சென்று அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள அரசு இதய சுத்தியாகச் செயற்பட எண்ணினால் முதலில் 13 ஆவது திருத்தத்தினூடாக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கியாக வேண்டும். அது நாட்டின் நடைமுறையிலுள்ள அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் அதனை நடைமுறைப்படுத்த அரசுக்குச் சிரமம் ஏற்படப் போவதில்லை.

மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் விடயத்தில் அரசு அவற்றுக்கென மத்திய அரசில் அமைச்சர்களை நியமித்து செயற்பாடுகளை நிர்வாகித்து வருகிறது. உதாரணமாகக் கூட்டுறவுத்துறை நிர்வாகம் அந்தந்த மாகாண சபைகளுக்கே உரித்தான போதிலும் அரசு அதற்கென அமைச்சரொருவரை நியமித்து நிர்வகித்து வருகின்றது. இதைப்போன்ற வேறு துறைகளில் நிர்வாக அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு அந்தத் துறைகளை நிர்வகிப்பதற்கான நிதியும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவேண்டியுள்ளது.

**காணி, மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் 13 ஆவது திருத்தத்துக்கமைய மாகாண சபைகளுக்கு உரியதாகும். ஆனால் அவை மாகாண சபைகளிடம் கையளிக்கப்படவில்லை. காணி, பொலிஸ் மற்றும் கல்வித் துறை தொடர்பான அதிகாரங்கள் மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுக்கிடையே எவ்விதம் பிரித்து நிர்வகிக்கப்பட வேண்டுமென 13 ஆவது திருத்தத்தில் தனியான மூன்று உப பிரிவுகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.**

அதன்படி மாகாண மட்டத்தில் அமைதியைப் நிலைநாட்டவும், குறிப்பிட்ட மாகாணத்துக்குள் இடம்பெறும் குற்றங்கள் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் தொடர்பாக மத்திய அரசுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களைத் தேசிய பொலிஸ்துறை கையாளும். ஒட்டு மொத்த பொலிஸ் துறையின் தலைவராகப் பொலிஸ் மா அதிபர் செயற்படுவதுடன், பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையில் ஒவ்வொரு மாகாணப் பொலிஸ் நிர்வாகமும் முன்னெடுக்கப்படும் என முதலாவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது உப பிரிவின் 1:3 பிரிவின் பிரகாரம், ஒரு மாகாணத்தினுள் உள்ள அரச காணியொன்றினை நாட்டின் பிரஜையொருவருக்கோ, அல்லது ஒரு அமைப்புக்கோ கையளிப்பதோ அல்லது அன்பளிப்புச் செய்வதோ குறிப்பிட்ட மாகாணசபையின் ஆலோசனையின் பேரில் அந்த விடயத்துக்கான சட்டவிதிகளுக்கு உள்பட்டு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட இயலுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மாகாணமொன்றை ஊடறுத்துச் செல்லும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான காணி தொடர்பில் குறிப்பிட்ட அதிகாரங்கள் மத்திய அரசுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதற்கு முன்னர் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிட்டுள்ள மத்திய அரசுக்கான மேற்குறித்த அதிகாரங்களை மாகாண சபைகளுக்குக் கையளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆயினும் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களில் சிலர் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட இயலாது எனத் தெரிவித்து வருகின்றனர்.

ஆயினும் தற்போது மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசு ஆகிய இரு தரப்புக்களுக்குமென இணைந்த விதத்தில் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கென மட்டுமே வழங்கும் விதத்தில் மாற்றியமைப்பதே 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலான அதிகாரப் பகிர்வென விளக்கமளிக்கப்படுகிறது. திட்டமிடல், உயர் கல்வி, தேசிய வீடமைப்பு, சமூக சேவை, கமத்தொழில், சுகாதாரம், பிறப்பு, இறப்பு திருமணப் பதிவு, கடற்றொழில், கால்நடை வளர்ப்பு எனப் பல பிரிவுகள் இந்த இணைந்த அதிகார அலகில் அடங்கின்றன. இந்தப் பிரிவுகளின் நிர்வாக அதிகாரத்தை மாகாணசபைகளுக்கு வழங்குவதால் பயனேதுமில்லை என மத்திய அரசின் அமைச்சர்கள் மட்டத்தில் கருத்து முன்வைக்கப்படுகின்றபோதிலும், அவற்றில் குறிப்பிட்ட சில பிரிவுகளுக்கான அதிகாரத்தையேனும் மாகாண சபைகளுக்கு வழங்கியே ஆக வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை ஆழமாக ஆராயின், மத்திய அரசுக்கான சில நிர்வாக அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கியாக வேண்டும். அல்லது இரு தரப்புக்களுக்குமான இணைந்த அதிகாரங்கள் பட்டியலிலாவது உள்ளடக்கப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

நாட்டின் பொதுமக்கள் போக்குவரத்துத்துறையின் நிலையும் இத்தகையதே. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லல் என்பதன் மூலம் அரச தரப்பால் முன்வைக் கப்படும் முக்கிய விளக்கம் செனெற் சபையொன்றை நிறுவுதலாகும். ஆயினும் இந்தயோசனை பயன்தரக் கூடிய தொன்றுதானா என்ற சந்தேகம்- குறிப்பாக சிறுபான்மையின மக்கள் மத்தியில்நிலவுகிறது என்பதையும் குறிப்பிட்டுத் தானாக வேண்டியுள்ளது.

மொத்தத்தில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு முயற்சியொன்றை மேற்கொள்வது அரசுக்கு அத்தனை சிரமமான காரியமொன்றல்ல. மாகாண சபைகள் நடைமுறை தற்போதும் நடைமுறையில் உள்ளதால் அது மிக இலேசானதொன்றாகும். கடந்த 25 ஆண்டுகள் கால அனுபவம் இந்த முயற்சியில் கைகொடுக்கும்.

ஆயினும், இத்தகைய அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பக் கூடும். அரசுக்கு வெளியேயிருந்து ஏற்படும் எதிர்ப்பு ஒரு பக்கம், அதே சமயம் பாரதூரமான அளவிலான எதிர்ப்பு அரச தரப்பினுள்ளிருந்தே வெளியாகக் கூடும். குறிப்பாக அமைச்சரவை மட்டத்திலிருந்தே அத்தகைய கடும் எதிர்ப்பு உருவாகக்கூடும். ஏனெனில் மாகாணசபைகளுக்காக வழங்கப்படும் அத்தகைய மேலதிக அதிகாரங்களைத் தற்போது அனுபவித்து வருபவர்கள் அரசின் அமைச்சர்களே.

அதேவேளை அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் சகல அதிகாரங்களையும் தன்வசம் எடுத்திருந்த அரசு அந்த அதிகாரங்களை மாகாணசபைகளுக்கும் பகிர்ந்தளிக்க விரும்புமா என்பதும் கேள்விக்கு உரியதொன்றே.

இவை யாவற்றுக்குமான பதில் அரசினுள்ளேயே உண்டு என்பதே உண்மை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலையைத் தூக்கிலிடுங்கள்

■ மு.வீரையன்

> "கிராமங்கள் முதல் நகரங்கள் வரை இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை ஆண்-பெண் வேறுபாடு இல்லாமல் பலர் தற்கொலை என்ற அவசர முடிவை எடுக்கின்றனர். அந்த முடிவை அவர்கள் எடுப்பதற்கு முன்னர் ஒரு கணம், ஒரேஒரு கணம் தங்களை நம்பியிருக்கும் குடும்பத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை எமது நீதி நூல்கள் எடுத்துக்கூறியபோதும் அதைப் புரிந்துகொள்ளும் போக்கும் அதை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் போக்கும் குறைந்து வருகிறது. இதற்கு அறிவியலின் வளர்ச்சியும் ஆன்மிகத்தின் தளர்ச்சியும் காரணமாகக் கூறப்படுகிறது. உலகமயமாக்கலின் நுகர்வுக் கலாசாரமும் இளைய தலைமுறையைச் சீரழிக்கிறது.

அண்மைக் காலமாகத் தற்கொலை செய்துகொள்வோர் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. காதல் தோல்வி, பரீட்சையில் தோல்வி, குடும்பத்தில் தோல்வி, தொழிலில் தோல்வி என்பவற்றால் விரிந்து பரந்து வளர்ந்து கொண்டே போகின்றன தற்கொலைகள்.

ஆசிரியர் திட்டியதால் மாணவி தற்கொலை, காதல் தோல்வியால் நடிகை தற்கொலை, கணவன்-மனைவி சச்சரவால் குடும்பமே தற்கொலை, மனைவியைக் கொன்றுவிட்டு கணவன் தற்கொலை, கடன் தொல்லை தாங்காமல் விவசாயி தற்கொலை, சகாவைச் சுட்டு விட்டு சிப்பாய் தற்கொலை எனத் தினமும் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

பள்ளிப்படிப்பை முடிக்காதவர்கள் முதல் பட்டத்துக்கு மேல் பட்டம் படித்தவர்கள் வரை, கிராமங்கள் முதல் நகரங்கள் வரை இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை ஆண்-பெண் வேறுபாடு இல்லாமல் பலர் தற்கொலை என்ற அவசர முடிவை எடுக்கின்றனர்.

அந்த முடிவை அவர்கள் எடுப்பதற்கு முன்னர் ஒரு கணம், ஒரேஒரு கணம் தங்களை நம்பியிருக்கும் குடும்பத்தைப் பற்றியோ, சமுதாயத்தைப் பற்றியோ நாட்டைப் பற்றியோ யோசிப்பதில்லை.

இது அறியாமையின் செயலா? அசைத்தின்செயலா? விரக்தியின் செயலா? வீம்பின் செயலா? எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இழந்து போவதன் வெளிப்பாடா? மனநோயின் மறுபக்கமா? எல்லாமும் தானா?

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி கடந்த மாதம் தற்கொலை செய்து கொண்ட செய்தி அனைவரையும் அதிர்ச்சி அடையச் செய்தது.

இத்தனைக் காலமாகப் படித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய புரிந்துணர்வு இல்லாமல் போனது எப்படி? இது ஒரு கோழைத்தனமான முடிவு என்பது கூடத் தெரியாதா? இந்தக் கல்வி அவர்களுக்குச் சொல்லித் தந்த பாடம்தான் என்ன?

கடன் தொல்லை தாளாமல் மற்றொரு இளம் பெண்ணும் தன்னை மாய்த்துக் கொண்டார் என்பது வேதனையைப் பல்மடங்காக்கியது.

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்தது. வெற்றியும் தோல்வியும் நிறைந்தது. உயர்வும் தாழ்வும் சேர்ந்தது. இனிப்பும் கசப்பும் இல்லாமல் மருந்து ஏது? மேடும் பள்ளமும் இல்லாமல் பூமி ஏது? கல்விக்கூடங்கள் இந்த வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொடுக்க மறந்தது ஏனோ?

வெளிநாடுகளிலும் இது போன்ற மாணவர்களின் தற்கொலைகள் நடைபெறுகின்றன. ஆனால், அவற்றைத் தடுக்க அந்த நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இலங்கையில் அதுவும் தமிழ்ப் பகுதிகளில் அதற்கான எந்த கட்டமைக்கப்பட்ட முயற்சிகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை.

"முதலில் ஒரு மாணவரின் வழக்கத்துக்கு மாறான நடவடிக்கைகள் பற்றி, சக மாணவர்கள் உடனடியாக ஆசிரியரிடமோ அல்லது காப்பாளரிடமோ தெரிவிக்க வேண்டும். இதுதான் தற்கொலைகளைத் தடுக்க வாய்ப்பாக அமையும்'' என்று இந்தியாவில் மாணவர்கள் தற்கொலை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் ஆனந்தகிருஷ்ணன் அண்மையில் கூறியுள்ளார்.

"வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்து கொள்வதெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் ஏற்படும் தடுமாற்றமாகும்'' என்றே உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

அந்தக் கணத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு விடுமானால், "தாங்கள் எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்தோம்'' என்று நினைத்து வெட்கப்படுவார்கள்.

காதல் தோல்வியினால் தற்கொலை செய்து கொள்வதைவிட மிகப்பெரிய பைத்தியக்காரத்தனம் வேறு எதுவும் இல்லை; காதல் என்பதே வாழ்வதற்கான வடிவம்; இதில் சாவுக்கு வேலை என்ன?

காதல் என்பது வெற்றியினால் மட்டுமல்ல, தோல்வியினாலும் வாழ்வாங்கு வாழ்கிறது. "காதல் போயின் சாதல்'' என்பது அக்கால மொழி; "காதல் போயின் காதல்'' என்பதுதானே இக்கால மொழி.

ஓர் இதயத்தை மட்டும் காதலிப்பதைவிட மானிடப் பரப்பையே காதலிப்பது சுகமல்லவா! "ஆதலினால் காதல் செய்வீர்!'' என்று பாரதி பாடியதும் மானுடத்தின் மீது கொண்ட அளப்பரிய அன்பினால்தானே.

வாழ்க்கை என்பது நாம் மட்டும் வாழ்வதற்கானது அல்ல; நம்மைச் சுற்றியிருக்கும் சமுதாயத்துக்காகவும்தான். மனித இனத்துக்கு நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டால் தற்கொலை செய்து கொள்ளத் துணிவார்களா?

வியட்நாம் நாட்டில் அமெரிக்கப் போரை எதிர்த்து புத்த பிக்குகள் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டனர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரை நிறுத்துவதற்காக தமிழகத்தில் முத்துக்குமார் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

தமிழுக்காகவே தாளமுத்துவும், நடராசனும் உயிரை விட்டனர்; தாய்நாட்டின் விடுதலைக்காக பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் தங்கள் உயிர்களையே தியாகம் செய்தனர். அவ்வாறே பல நூறு கரும்புலிகளும் தம் உயிர்களை தாம் சார்ந்த மக்களுக்காக ஈகம் செய்தனர்.

இவற்றையெல்லாம் இந்தத் தற்கொலைப் பட்டியலில் சேர்த்துவிடக்கூடாது. இவை தியாகமாக மதிக்கப்பட்டாலும், இந்த விலை மதிப்பற்ற உயிர்கள் தேசத்துக்குத் தேவைப்படுகிறது.

அறிவியல் அசுர வளர்ச்சியை அடைந்துவிட்ட போதும், ஓர் உயிரை உருவாக்க முடியாத மனிதன் தன் உயிரை மாய்த்துக் கொள்ளவும் உரிமை இல்லை. இது வடித்தெடுத்த கோழைத்தனம் மட்டுமல்ல, சுயநலத்தின் மொத்த செயல்வடிவம்; இது மனிதர்கள் வெறுக்கத்தக்க செயல்பாடு.

"தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்றார் வான் புகழ் வள்ளுவர். இந்த உலகில் புகழோடு வாழ முடியாதவர்கள் தங்களை நொந்து கொள்ளாமல் இகழ்பவர்களை நொந்து கொள்ளுவதால் என்ன பயன்? என்றும் கேட்டார். தற்கொலை செய்து கொள்வதற்கு முன் இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"வாழ்க்கையை முடிந்தால் அழகுபடுத்து; இல்லாவிட்டால் அசிங்கப்படுத்தாமலாவது இரு'' - எழுத்தாளர் அகிலன் இவ்வாறு கூறினார். தற்கொலை செய்து கொள்பவர்கள் தங்கள் வாழ்க்கையை அசிங்கப்படுத்திக் கொள்கிறார்கள். இது தாமதமின்றித் தடுக்கப்படவேண்டும்.

---

■ நித்தியா

# உறவுகளைப் பேணுங்கள்

உறவுகள் ஒரு தொடர்கதை என்பர். ஆனால் அது இன்று அருகி விட்டது. உறவையே விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு எம்மவர்கள் பழகி விட்டனர். உறவு என்பது இன்று மரியாதை அற்ற ஒன்றாக மாறிவிட்டது.

அன்று ஒரு காலத்தில் யாரையும் உறவு முறை சொல்லியே அழைப்பர். ஆனால் தற்போது 'ஹாய்' சொல்லியும் 'ஹலோ' சொல்லியும் அழைக்கின்றனர். காசுக்காக உறவு கொண்டாடுவது இன்றைய நாகரிகமாகி விட்டது. முன்னோர்கள் தாயின் சகோதரியை பெரியம்மா, சித்தி எனப் பல முறைகள் சொல்லியும் தந்தையின் உறவுகளை பெரியப்பா, சித்தப்பா, ஆசையப்பா, மாமி என்றெல்லாம் அழைப்பர். இன்று அவ்வாறு பிள்ளைகளுக்குப் பெற்றோர் உறவுமுறைகளைச் சொல்லிக் கொடுப்பதில்லை. பெற்றோரே உறவுகளை அலட்சியப்படுத்தினால் பிள்ளைகள் அவற்றை எவ்வாறு விளங்கிக் கொள்வர். இதனால் தான் பிள்ளைகள் நெருங்கிய உறவுகளைக் கூட அங்கிள், ஆன்ரி என அழைக்கிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம்? என்று புரியவில்லை. உறவு முறைகளைச் சொல்வதில் வெட்கம் என்ன இருக்கிறது. அன்றைய காலத்துக்கு தம்பதிகள் தமக்குள் மரியாதையுடனேயே நடந்து கொள்வர். இன்றோ அவர்களின் பெயரை குறிப்பிட்டே அழைத்துக் கொள்கின்றனர். இதனால் உறவுகளுக்குள்ளும் நெருக்கம் குறைவடைந்தே வருகிறது.

அன்றைய காலங்களில் விசேட தினங்களான புத்தாண்டு, தைப்பொங்கல் போன்ற பண்டிகைகள் என்றால் ஒரு மாதத்துக்கு முன்னரே அதற்குரிய ஆயத்தங்கள் செய்யப்படுவதும் இனிப்புப் பலகாரங்கள் செய்து பண்டிகை நாள்களில் பொங்கல் பொங்கிப் படைத்து உறவினர்களுடன் உண்டு மகிழ்வதும், உறவினர் வீடுகளுக்குச் சென்று உறவுகளை மகிழ்விப்பதும் புத்தாடை அணிந்து மற்றவர்களுக்குப் புத்தாடை வழங்குவதும் வழக்கம்.

இன்று இந்த நிலைமைகளைக் காண்பதரிது. இதைவிட பண்டிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பது அன்றைய காலங்களில் கடிதம் மூலமும் நேரில் சென்றும் வாழ்த்துவர். இன்று தலைகீழாக மாறி எஸ்.எம்.எஸ். அளவுக்குச் சுருங்கிவிட்டது.

மரியாதை, அன்பு, அக்கறை உறவுகளுக்குக் கொடுப்பது அருகிவிட்டது. இன்று இவ்வாறான தினங்களில் ஆண்கள் 'பார்ட்டி' என்று சொல்லி மது அருந்துவது அல்லது தியேட்டர் போவதை வழக்கமாக்கிக் கொள்கின்றனர். இல்லாவிட்டால் ஊர்சுற்றுவது, கடற்கரைக்குச் செல்வது என நிறைய வகையில் அன்றைய பொழுதைக் கழிக்கின்றனர்.

பெண்கள் சீரியல் பார்த்து அன்றைய நல்ல நாளில் கண்ணீர் துடைத்துப் பொழுதைக் கழித்துவிடுவார்கள். இது பற்றிப் பெற்றோர்தான் அக்கறை காட்டவேண்டும். இவ்வாறான நாள்களில் பிள்ளைகளை உறவினர் வீடுகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்படி என்றால்தான் [illegible] [illegible] உறவு [illegible]கள் தெரியும். அதைவிட காலம் காலமாக நம் உறவுகள் தொடர வாய்ப்பாக அமையும்.

இவ்வாறான விசேட தினங்களில் குடும்பத்தில் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக மனம்விட்டு மகிழ்வாகப் பேச வேண்டும். இதனால் குடும்பத்தில் அன்பு வலுப்பெறும். பிடித்தமானவைகளை அன்பளிப்பாக வழங்குவது என்பன சின்னச் சின்ன சந்தோஷங்கள். இவை வாழ்வில் மறக்க முடியாத இனிய நினைவுகளாகக் கூட மனதில் பதியும். எப்போதும் உறவுகள் ஒரே மாதிரி இருப்பதில்லை. கொஞ்ச நேரமாவது ஒவ்வொருவருக்காகவும் விட்டுக்கொடுத்து நடவுங்கள். மற்றவர்களைப் புரிந்து கொள்ளுங்கள். மற்றவர்களது சுதந்திரத்துக்குத் தடையாக இருக்காதீர்கள். இயல்பாக விட்டுக்கொடுத்து நடந்து பாருங்கள். அதில் ஒரு மகிழ்ச்சி உள்ளது என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

இன்று அன்பு, பாசம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு என்பன [illegible]க்குறியா[illegible] உள்ளது. இதனாலேயே எத்தனை குடும்பங்களில் உறவுச் சிக்கல்கள் பெற்றோர்- பிள்ளைகள், கணவர்- மனைவி மற்றும் உறவுகளுக்குள் நிறையப் பிரச்சினைகள் உருவாகுகின்றன. இதனைப் பேசித் தீர்க்கக் கூட யாருக்கும் நேரமில்லாத நிலை. யாரும் தம்மை விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற பிடிவாதக் குணம் அதிகமுள்ளதால்குடும்பப்பிணைப்பு என்பது அருகிவிட்டது.

மேலைத்தேய நாடுகளைப் போல எமது நாட்டிலும் காசிருந்தால்தான் வாழ்க்கை என்றாகிவிட்டது. திருமணமான பிள்ளைகளைக் கூட பெற்றோர், மாமன், மாமி தரம் பார்ப்பார்கள். வசதி இருந்தால் உறவு கொண்டாடி மகிழ்வர். ஏழையாக இருந்தால் கண்டும் காணாதது போல நடந்துகொள்வர்.

ஒரு குழந்தை பிறந்து பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்து வாழ்ந்து இன்னொருவருக்கு திருமணம் செய்து கொடுக்கும் போது பெண்களை சீதனத்துக்காக ஏலம் போடுகிறார்கள். தற்போது மாமன் மகள் என்ற உறவு காசுக்காக யாரையும் செய்யலாம் என மாப்பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்தாலும் ஆணின் பெற்றோர், சகோதரர்கள் பிடிவாதம் பிடித்துக் கொடுமை செய்வதும், இதனால் பெண்கள் கணவனுடன் சேர்ந்து வாழ முடியவில்லை என்று ஏங்குவதும் வழமையாகி விட்டது. இதனால் எத்தனை குடும்பப் பிளவுகள் ஏற்படுகின்றன என்பதை அறிவாரோ.

குடும்பத்தில் புரிந்துணர்வு என்பது பூச்சியமாகவே உள்ளது. புரிந்துணர்வு இருந்தால் எந்த சவால்களுக்கு முகங்கொடுக்க முடியும். இன்று எத்தனை குடும்பங்கள் தமக்குச் சின்ன பிரச்சினைகள், வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும் உளவியல் துணையாளரை நாடி அறிவுரை பெற்றுக் கொள்கின்றனர். விவாகரத்து என்றால் கூட குடும்ப உளவளத்துணை வழங்கியே விவாகரத்து முடிவுக்கு வர நீதிமன்றம் உத்தரவிடும்.

ஆனால் இவை எதுவும் இன்றில்லை. யாரிடத்திலும் புரிந்துணர்வு பரஸ்பர உதவி போன்றன இருப்பதாகத் தெரியவில்லை. தான் வாழ்ந்தால் போதுமென்ற மனநிலையால் குடும்ப உறவுகள் சீரழிவைச் சந்தித்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடன் பெற்ற சந்நியாசம்

புத்தர் வாழ்ந்த காலத்தில் கொலைகாரன் ஒருவன் இருந்தான். அவன் 'கொலை, கொள்ளை' என்று ஏராளமான பாவங்களைச் செய்து வந்தான். அவனுக்குத் திடீரென்று ஒரு நாள் ஓர் ஆசை தோன்றியது. 'புத்தரைப் பார்க்க வேண்டும்' -இது தான் அவனுடைய ஆசை. இருந்தாலும் அவரை எப்படிப் பார்ப்பது என்று யோசித்தான்.

இவனைப் பற்றி ஊரில் இருப்பவர்கள் எல்லோருக்கும் தெரியும். அதனால் நேரடியாகச் சென்று புத்தரைப் பார்க்க யாரும் அனுமதிக்க மாட்டார்கள். ஆகவே அவன் 'எப்படிச் சென்று புத்தரைப் பார்ப்பது? என்று பலமாக யோசனை செய்தான். உடனே அவன் யாருக்கும் தெரியா மல் சுவர் மீது ஏறிக் குதித்து மடத்துக்குள் செல்லலாம் என்று முடிவு செய்து அதன்படியே செய்தான்.

புத்தர் வெளியே சென்றிருந்த நேரம் அது. மடத்துக்குள் யாரும் கண்ணில் தென்படவில்லை. புத்தரை மடம் முழுவதும் அவன் தேடிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் மடத்தின் சீடர் ஒருவரிடம் அவன் மாட்டிக் கொண்டான். அவர் அவனிடம், ''நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று விசாரித்தார்.

அதற்கு அவன், ''ஐயா, நான் இங்கு திருடவரவில்லை. புத்தரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் தான் வந்தேன். மடத்து வாசல் வழியாக உள்ளே வரலாம் என்றால், என்னை யாரும் உள்ளே விடமாட்டார்கள். அதனால்தான் நான் சுவரேறிக் குதித்து வந்தேன். என்னைத் தயவு செய்து தவறாக நினைக்க வேண்டாம். எனக்கு வேறு எதுவும் இங்கு வேண்டாம். புத்தரை மட்டும் நான் பார்த்தால் போதும்'' என்று கூறினான். உடனே அந்தச் சீடர் அவனை சாரிபுத்ரன் என்பவரிடம் அழைத்துக் கொண்டு போனார்.

அவருக்கு இந்தத் திருடனைப் பார்த்ததும் மிகவும் ஆச்சரியம்.அவர் அவனிடம் விசாரித்தார். திருடனும் தான் வந்த விவரத்தைக் கூறினான். உடனே அவர், ''நீ எதற்காகப் புத்தரைப் பார்க்க வேண்டும்?'' என்று வினவினார். அவன், ''எனக்கு இந்த உலகில் எல்லாம் வெறுத்துப் போய் விட்டது. என்னுடைய பாவங்களிலிருந்து நான் விடுபடவேண்டும். அதற்குப் பரிகாரமாக சந்நியாசி ஆகி, மக்களுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட விரும்புகிறேன்'' என்றான்.

'கொலை, கொள்ளைகள் செய்து நிறைய பாவங்கள் சம்பாதித்து வைத்திருக்கிறான். இவன் சந்நியாசி ஆவதற்கு என்ன தகுதி இருக் கிறது? என்று அங்கிருந்தவர்கள் வியந்தார்கள்.

ஜோதிடம் மூலமாக இவன் முன் எந்தப் பிறவியிலாவது சிறிது புண்ணியம் செய்திருந்தால்கூட போதும். என்று நினைத்து சாரிபுத்திரன் அவனது ஜாதகத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.

அப்படிப் பார்த்த பின்னர்தான் தெரிந்தது, இவன் எல்லாப் பிறவி களிலும் இதைவிட கொடிய பாவச்செயல்களைச் செய்து வந்திருக் கிறான். இவன் ஒரு சிறிதும் நல்லது செய்ததில்லை. அதனால் எந்தப் பிறவியிலும் விமோசனம் கிடையாது என்ற முடிவுக்கு வந்தார்கள். மட்டுமில்லாமல், ''இவன் இனிமேல் இங்கு இருக்கக் கூடாது. இவனை உடனே வெளியில் துரத்துங்கள்'' என்று அங்கு கூடியிருந்தவர்கள் கூறினார்கள்.

இதனால் அவனுக்குக் கோபம் வரவில்லை.மாறாக, 'புத்தரை நெருங்கக் கூடத் தகுதியில்லாத போது, நாம் எதற்கு இந்த உலகில் வாழ வேண்டும்? என்று அவன் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது.

உடனே அவன் மடத்தின் வெளி மதில் சுவரில் தலையை இடித்துக் கொண்டு இறப்பதற்கு முயற்சி செய்தான்.

அந்தச் சமயத்தில் வெளியே சென்றிருந்த புத்தர் உள்ளே வந்தார். மதில் சுவரில் இரத்தம் சொட்டச் சொட்டத் தலையை இடித்துக் கொண்டிருந்த அந்தத் திருடனைப் புத்தர் தடுத்து நிறுத்தினார்.

புத்தரைப் பார்த்ததும் அவனுக்கு உடனே மகிழ்ச்சி உண்டாகியது. புத்தரின் காலில் விழுந்து அழுது புலம்பினான்.

புத்தர் அவனிடம்,''என்ன நடந்தது மகனே?'' என்று வினவினார். அவனும் நடந்த விவரத்தைக் கூறினான். உடனே புத்தர் சீடர்களைப் பார்த்து, ''இவனை ஏன் துரத்தினீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்களும் நடந்த விவரங்களைக் கூறினார்கள்.

உடனே புத்தர் சீடர்களிடம், ''இவனை இன்னும் ஒரு வாரத்தில் சந்நியாசி ஆவதற்குத் தகுதி உடையவனாக ஆக்கிட முடியும்'' என்று கூறினார். புத்தர் கூறியதில் சீடர்களுக்கு நம்பிக்கையில்லை. புத்தர் அந்தத் திருடனைப் பார்த்து, ''நீ என்னுடனேயே இரு!'' என்று கூறினார்.

இதனால் திருடன் மிகவும் மகிழ்ந்தான். புத்தரின் கூட்டுறவால் அந்தத் திருடன், ஒரே வாரத்தில் அடக்கம், அமைதி, சாந்தம் ஆகியவை மேலோங்கி, நல்ல மனிதனாக மாறி, சந்நியாசி ஆவதற்குரிய தகுதியைப் பெற்றான்.

சீடர்களுக்கு ஒரே ஆச்சரியம்! சாரிபுத்திரன் புத்தரிடம், ''இவன் எப்படி ஒரே வாரத்தில் சந்நியாசி ஆவதற்குரிய தகுதியைப் பெற்றான்? இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?'' என்று கேட்டார்.

அதற்கு புத்தர், ''சாரிபுத்திரா! நீ மிகவும் நல்லவன். ஆனால் உனக்கு ஞானமில்லை. பாவங்களின் சுமை என்னவென்றும், அதன் தவிப்பு என்னவென்றும் உனக்குத் தெரியாது. உனக்கு அந்த அனுபவமும் இல்லை. அதோடு, நீ ஜோதிடத்தில் கடந்த காலத்தை மட்டும்தான் பார்க்கிறாய். கடந்த காலம் என்பது கடந்துபோன காலம். நாம் எப்போதும் எதிர்காலத்தைத்தான் நினைத்துப் பார்க்க வேண்டும்.

''தன்னுடைய பாவச் சுமையிலிருந்து விடுபட இவன் பட்ட பாடுதான் இவனுக்கு விடுதலையைத் தேடிக் கொடுத்தது'' என்று கூறினார்.




இந்தக் கதை கூறும் கருத்து இது தான்: நல்லவர்களைவிடக், கெட்டவர் களுக்குத்தான் மிக விரைவில் பக்குவ நிலையை அடைவதற்கான வாய்ப்பு கள் உண்டு. தம்மை நல்லவர்களாக நினைத்துக் கொண்டு இறுமாந்திருப் பவர்களுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் விமோசனமும், பரிபக்குவமும் கிடைப் பதில்லை. இதை நாம் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# சிறப்பான முருகன் தலத்தை உடைய வேலக்கை பிள்ளையார் ஆலயம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)



**சோபா**

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் பூசைகள், திருவிழாக்கள், குரு பூசைகள் குறிக்கப்பட்ட தினங்களில் ஆலய விதி முறைகளில் இடம் பெற்று வருவதால் ஆலய வழிபாட்டில் பெருமளவிலான மக்களும், சைவப் பெரியார்களும் இணைந்து கொண்டனர்.

1982 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து வழமையைப் போன்று திருவிழாக்களும் பூசைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆலயத்தினை மெருகூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டபோது 2001 ஆம் ஆண்டு ஆலயம் மீண்டும் புனருத்தானம் செய்யப்பட்டது.

வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தின் பூசை வழிபாடுகள் யாவற்றையும் ஆரம்ப காலம் முதல் குருக்கள்மாரே பூசகராக இருந்து வருகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும். ஆலயக் குருக்களைத் தவிர்த்து மகோற்சவ காலங்கள் மற்றும் பெரும் திருவிழாக்கள் ஆகியன இடம்பெறும் போது பிரசித்தம் பெற்ற குருக்கள் வேறு இடங்களில் இருந்து அழைத்துவரப்பட்டு விழாக்கள் சிறப்புற நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

காலாகாலமாக நிலைபெற்றுள்ள இந்த ஆலயத்தின் வரலாற்றுச் சம்பவங்களை பிரதேச மக்களும் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொண்ட குருக்கள்மாரும் மிகச்சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளனர்.

பிள்ளையார் எனும் பெயரில் இந்த ஆலயம் அமைந்திருந்தாலும் சிறப்புமிக்க முருகன் தலம் என்பது முக்கிய விடயமாகும்.

ஆலயத்தின் அமைவிடம் இயற்கை சூழலுக்கு அமைவாக இருப்பதுடன் நவாலி ஊரை மானிப்பாய் நகருடன் இணைக்கும் ஓர் இணைப்புப் பாலமாக அமைந்துள்ளது. இதனை விட வீதியால் போக்குவரத்து செய்வோருக்கு இலகுவானதாக நிழல் தரும் விருட்சமாக ஆலயச் சூழல் அமைந்துள்ளது.

அத்துடன் இந்த ஆலயத்தின் வடக்கு வீதியானது மானிப்பாய்க்குச் செல்லும் மிகவும் குறுகிய வீதி என்பதால் இந்த ஆலயத்தின் சூழலால் பயணிக்கும் மக்கள் அதிகமாக உள்ளனர்.

ஆலயத்தின் மேற்க்குக் பக்கத்தில் சிறுவர்களுக்கான கல்விச் சாலையும் கிழக்குப் பக்கமாக அன்னதான மடமும் அமைந்துள்ளமை சிறப்புக்குரிய விடயமாகும்.

இந்த ஆலயம் எளிமையும், கலை அம்சமும் பெற்று விளங்குவதால் ஆலய அமைவிடத்துக்கு ஏற்றால் போல் சிறப்பான தோற்றத்துடன் காட்சி அளித்து அதிகளவு பக்தர்களைக் கொண்டுள்ளது.

ஆலயத்தின் இயற்கை சூழலில் கிடைக்கும் கனிதரு மரங்களின் பழங்கள்,பச்சிலைகள், பல வர்ணப் பூக்கள் என்பவற்றைக் கொண்டே ஆலயத்தில் தினமும் பூசை வழிபாடுகளை ஆலயப் பூசகர் செய்து வருகின்றார்.

ஆலயத்தின் அமைவிடம் ஆரம்பத்திலேயே சிறப்பாக இருந்தமையால் ஆலயத்தின் கட்டடங்கள், ஏனைய மண்டபங்கள், மணிக்கூட்டுக் கோபுரம், கோபுரம், விமானம், மண்டபம், பரிவார மூர்த்திகளுக்கான கோயில்கள் என்பன சிறப்பாக அமையப் பெற்றுள்ளன.

வேலக்கைப் பிள்ளையாரின் தல விருட்சமாக ஆலயத்தின் தெற்குப் புறமாக அமைந்துள்ள குமிழமரம் திகழ்கின்றது.

இந்த ஆலயம் சிறு கோயிலாக இருந்து படிப்படியாக பெரியளவிலான வளர்ச்சியைக் கொண்டு இன்று சிறந்த கலை நுட்பத்தைக் கொண்ட ஓர் வீதி ஆலயம் எனும் சிறப்புடன் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தின் முன் மண்டபத்தில் மேல் உள்ள பகுதியில் ஆலயக் கோபுரம் அமைந்துள்ளது. இந்தக் கோபுரத்தின் புராண சிற்பங்களும் முருகனது திருவிளையாட்டுச் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன.

இதனைவிட ஆலயக் கருவறைக்கு மேல் உள்ள பகுதியில் விமானம் அமைந்துள்ளது. அத்துடன் தெற்கு வாசல், மேற்கு வாசல் போன்றவற்றில் யாழி, வியாழன், வட்டம், கூடு, கலசம் என்பவற்றுடன் கூடிய சிற்பங்கள் விமானத்தை அழகு படுத்துகின்றது.

ஆலய முக மண்டபத்திற்கு மகா மண்டபம் அமைந்துள்ளது. இதற்கு சற்று முன்னால் கருவறையுடன் கூடிய சிறு மண்டபமும் அமையப் பெற்றுள்ளது. ஆலயத்தின் தெற்கு வாசலின் தென் மேற்கு மூலையில் விநாகர் ஆலயமும் அதனைத் தொடர்ந்து முருகன், வள்ளி தெய்வானையுடன் இணைந்து காட்சி தரும் சிலைக்கு ஒரு கோயிலும், சண்டேஸ்வர ஆலயமும் அமைந்துள்ளது.

ஆலயத்தின் அமைவிடம்
ஆரம்பத்திலேயே
சிறப்பாக
இருந்தமையால்
ஆலயத்தின்
கட்டடங்கள், ஏனைய
மண்டபங்கள், மணிக்
கூட்டுக் கோபுரம்,
கோபுரம், விமானம்,
மண்டபம், பரிவார
மூர்த்திகளுக்கான
கோயில்கள் என்பன
சிறப்பாக அமையப்
பெற்றுள்ளன.

ஆலயத்தின் மேற்குப் பகுதியில் நிருத்த மண்டபத்தில் நடராஜர் கோயிலும், நவக்கிரகங்களுக்கான கோயிலும் இவற்றுக்கு முன்னால் பூமாதேவி ஆலயமும் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தின் விசாலமான மண்டபம் வசந்த மண்டபத்துக்கு உரியதாகும். இதன் திருவுருவம் ஐம்பொன்னால் செதுக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் அழகினை மெருகூட்ட சிறந்த சிற்பக் கலைஞர்கள் தம் கைவண்ணத்தை பயன்படுத்துவதற்கு ஆலயத்தில் குடிய மர்ந்திருக்கும் வழித்துணையாக இருந்துள்ளார் என்பது மிகையாகாது.

ஆலயத்தின் வசந்த மண்டபத்தை அடுத்து வைரவருக்கு எனதனி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தின் பரிவார மூர்த்திகள் எனும் சிறப்பை இங்கு தனித்தனியாக அமைக்கப் பட்டுள்ள சிறு ஆலயங்கள் எடுத்தியம்புகின்றன.

கடந்த 50 வருடங்களுக்கு முன்னரே ஆலயத்தின் கூரை வேலைப்பாடுகள் நேர்த்தியாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இறை வழிபாட்டின் நம்பிக்கை கொண்டோர் ஆலயத்தை நிர்வாகம் செய்து வருவதால் ஆலயத்தில் இடம்பெறும் சகல நிகழ்வுகளும் பொதுமக்கள் நன்மை அடைவதாக அமைந்துள்ளது.

ஆலயத்தில் இடம் பெறும் பூசை வழிபாடுகள் யாவும் இசை வாத்தியங்கள் ஒன்று சேர இசைக்கப்படும் போது நிகழ்த்தப்படுவது ஆலயத்துக்குரிய சிறப்பான விடயமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துக் கொள்வனவுக்கு நிதி

மட்டக்களப்பு,மே8

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழியங்கும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகளின் மருந்துக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது..

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் என்பவற்றால் நிர்வகிக்கப்பட்டுவரும் இலவச ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் மருந்துப் பொருள்களைக் கொள்வனவுசெய்ய வேண்டுமெனவும் உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று மற்றும் கல்முனை மாநகரசபைகள், திருகோணமலை நகர சபை, கந்தளாய், சேருவில, உப்புவெளி, பதவிசிரிபுற, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபைகள் என்பவற்றால் நிர்வகிக்கப்படும் 11 இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகளின் மருந்துக் கொள்வனவுக்கு 12 லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கிழக்கு மாகாண தேர்தலில் ஹக்கீம் களமிறங்குவதே சாலச் சிறந்தது

### இப்படிக் கூறுகிறார் மு.கா. இளைஞர் அணியின் அமைப்பாளர்

எருவில்,மே8

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் களமிறங்குவதுதான் சாலச்சிறந்தது. இது முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர் வாக அமைவதோடு, தற் போதைய அரசுடனான உறவை மேலும் வலுப்படுத்தவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும் ஓர் ஏணிப்படி யாக அமையும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அட்டாளைச்சேனை இளைஞர் காங்கிரஸ் அமைப் பாளர் இக்பால் பள்ளித்தம்பி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பொதுத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது தற்போதைய ஜனாதிபதி ஆட்சியிலிருக்கும்போதே ஐ.தே.கட்சியுடன் போட்டியிட்டு எதிர்க் கட்சியில் அமர்ந்திருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், அரசியல் உயர் பீட மற்றும் கட்சித் தொண்டர்களினதும் அழுத்தம் மேலோங்கியதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ், தற்போதைய அரசுடன் இணைந்து கொண்டது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி விரும்பியிருந்தாலும் அரசுடன் இணைந்துள்ள இதர முஸ்லிம் கட்சிகளின் அழுத்தம் காரணமாகவும், முஸ்லிம் காங்கிரஸ் தற்போதைய அரசுக்குத் தேர்தல் ரீதியாக எந்த விதத்திலும் ஆதரவு வழங்க வில்லை என்பதாலும் மு.காவுக்கும் அரசுக்குமிடையில் நீண்ட இடைவெளி இருக்கத்தான் செய்கின்றன.

இதன் விளைவாக கட்சித் தலைமைத்துவம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் எதிர்பார்க்கின்ற அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாத அசாதாரண சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அசாதாரண சூழ்நிலையை மாற்றி, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டுமாயின் தற்போதைய அரசுக்கு மு.காவானது தேர்தல் மூலம் தனது பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் தனது இருக்கையைப் பலப்படுத்தவேண்டுமாயின் ஜனாதிபதியின் உத்தரவை மதிக்கவேண்டும். இல்லாத பட்சத்தில், அரசை விட்டு வெளியேறவேண்டியிருக்கும். அவ்வாறு வெளியேறுகையில், அரசுடன் இணைந்துள்ள இதர முஸ்லிம் கட்சிகள் பலமடைவதற்கும், மு.கா. வீழ்ச்சியடைவதற்கும் ஏதுவாக அமைந்துவிடும்.

பிரச்சினைகள் வித்தியாசமாக இருந்தாலும், வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் மட்டுமன்றி, ஏனைய பிரதேச முஸ்லிம்களும் பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம்கொடுத்துக் கொண்டே வாழ்கின்றனர்.

கிழக்குக்கு வெளியே உள்ள ஒருவர் கிழக்கு மாகாணசபைக்கு முதலமைச்சராக வருவது கட்சியாப்புக்கு முரணான விடயமல்ல.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

## மருதமுனையில் கொங்கிறீட் வீதி

எருவில்,மே8

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சால் மருதமுனை பிரதேசத்தில் உள்ள வீதிகள் 100 மில்லியன் ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி வீதி ரூபா 30 மில்லியன் செலவிலும், அக்பர் வீதி ரூபா 22 மில்லியன் செலவிலும், ஹாஜியார் வீதி, கஸ்ஸாலி வீதி என்பன ரூபா 18 மில்லியன் செலவிலும், மற்றும் வடிகால் என்பனவும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

(ச-31)


## முன்னாள் போராளிகளின் வெசாக் பக்தி கீதம்

மட்டக்களப்பு,மே8

கந்தக்காடு மற்றும் சேனபுர புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்றுவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் வெசாக் பக்திகீத நிகழ்வு வாகரை பொது விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வாகரை 233ஆவது இராணுவ படைப்பிரிவு தலைமையகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் வாகரை 233 ஆவது படைப்பிரிவு கட்டளைத் தளபதி கேணல் குமார் ஜெயசுந்தர, கிழக்கு மாகாண புனர்வாழ்வுப் பணிப்பாளர் கேணல் சிறிசாந்த, புனர்வாழ்வு பெற்றுவரும் புலிகளின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ச)



கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் வெசாக் தினம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

கம்பளை,மே8

கம்பளை, சிங்ஹாபிட்டிய பகுதியில் முட்புதருக்குள் இருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கம்பளை நகரில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சிங்ஹாபிட்டிய, முதலாம் கட்டை இடத்தில் இருந்தே இந்தச் சடலம் கம்பளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் கம்பளை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரு வேளைகளிலும் திண்மக் கழிவகற்றல்

### கல்முனைமுதல்வர் சிராஸ் மீராசாஹிப் தெரிவிப்பு

கல்முனை,மே8

கல்முனை மாநகர சபையினால் முதல் தடவையாக காலை மற்றும் மாலை என திண்மக் கழிவகற்றல் செயற்பாடு இடம்பெறவுள்ளது என்று முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

இதன் மூலம் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டினை மேலும் துரிதப்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடு தொடர்பாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் சுகாதார பிரிவு ஊழியர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள் ளது. அத்துடன் கல்முனை மாநகர சபையால் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டை திறண்பட மேற்கொள்வதில் சுகாதாரப் பிரிவு ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு முதல்வரி னால் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. தினமும் காலை 7 மணிக்கு திண்மக் கழிவகற்றும் பணி ஆரம்பிக் கப்பட வேண்டும் என்று முதல்வர் சுகாதாரப் பிரிவு ஊழியர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

சுகாதாரப் பிரிவு ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனங் காணப்பட்டு முதல்வரினால் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப் பட்டன.



## அரச ஊழியருக்கு ஆளுமைப் பயிற்சி

திருகோணமலை,மே8

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல்வேறு அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான ஆளுமை அபிவிருத்திப் பயிற்சி விரைவில் நடைபெறவுள்ளது.

அரச அலுவலர்களின் திறமை, ஆளுமை என்பவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த வருடம் 16 பயிற்சி நெறிகள் திருகோணமலை மாவட்டச் செயலாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளன என்று திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். அருள்ராஜா தெரிவித்தார்.

கால ஒழுங்கு அடிப்படையில் திணைக்கள ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு கணக்கீடு, தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள் ஆகிய பல துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

# மங்களராமய விகாராதிபதியால் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தல்

### போரதீவுப்பற்று பிரதேச சபை தவிசாளர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மே8

மட்டக்களப்பு மாவட்டத் தின் போரதீவுப்பற்று பிரசேத்தின் எல்லைப் பகுதியான சின்னவத்தை பகுதிக்கு சென்று மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அங்குள்ள தமிழ் மக்களை அச்சுறுத்தி வருகின்றார் என்று போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் விநாயகமூர்த்தி சிறிதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரதீவுப்பற்றின் சின்னவத்தையில் அதிகளவான தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் சில சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்குக் காணியை விற்றுவிட்டு சென்றுவிட்டனர்.

இந்தநிலையில் அந்தப் பகுதிக்கு திடீரென வந்த மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுணமரத்ன தேரர், அப்பகுதி தமிழ் மக்களை மிட்டியுள்ளார்.

இது தொடர்பில் எனக்கு மக்கள் தெரிவித்ததை அடுத்து அப்பகுதிக்கு சென்றபோது விகாராதிபதியிடம் நிலைமையையெடுத்துக் கூறினேன்.

தமிழர்கள் சிங்களவர்களின் காணியை அபகரித்துவிட்டனர். இதனால் அவர்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கூறினார். ஆனால் தான் அவரை மிரட்டியதாக பல இடங்களிலும் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அப்பகுதியில் உள்ள இரு சமூகங்களும் மிகவும் அவதானமாகவே உள்ளன. எனினும் தம்மை தவிசாளர் கடத்தி மிரட்டியதாக வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** சில விமர்சனங்கள் ஏற்படும்; அதனை நீங்கள் மனதில் கொள்ளாமல் செயற்பட வேண்டியிருக்கும். தொழிலில் வருமானத்தைப் அதிகரிக்க முற்படுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும். பயணங்களால் பலன் காணலாம். மன நிம்மதியான சூழ்நிலை சந்தோஷத்தை அதிகரிக்கும்.

**இடபம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையில் அறிவுத்திறனுடன் செயற்படுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சீரான நிலைமை காணப்படும். இல்லறத்துணையின் தேவையற்ற சந்தேகங்களால், மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். வீடு மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட வகையில் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** அறிமுகமற்ற நபர் ஒருவரின் உதவி மிகுந்த பயன்தரும். எந்த ஒரு விடயத்திலும் வார்த்தைகளை அளவோடு வைத்துக் கொள்வீர்கள். முக்கியமான செய்தி உங்களை வந்தடையும். நீண்ட நாள் எண்ணம் பூர்த்தியாகும். மனைவி உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய நபர்களின் சந்திப்பில் எச்சரிக்கை தேவை. சிலருக்கு விடயங்களைப் புரியவைக்க கடுமையான முயற்சி மேற்கொள்வீர்கள். தொழில் ரீதியான நடவடிக்கைகளை துரிதப்படுத்துங்கள். நண்பர்கள் மத்தியில் குற்றம் காணும்போக்கை குறைத்துக் கொள்ளுங்கள்.

**சிங்கம்:** சிலருக்கு உதவிகள் செய்யப் பிரியப்படுவீர்கள். உதவி செய்தும் மகிழ்வீர்கள். நில, புலன்களால் நன்மையான பலன்களைக் காணலாம். குடும்ப பிரச்சினையில் நிதானம் காட்ட வேண்டும். பயணங்களில் எச்சரிக்கை அவசியம். அலுவலகப் பணிகளில் கவனம் இருக்கட்டும்.

**கன்னி:** எதிர்பாராத பண வரவுகள் உண்டு. உறவினர்கள் வழியிலும் உதவிகள் கிடைக்கும். எந்த ஒரு பணிக்காக அவசரப்பட்டு செயல்படுகிறீர்களோ அதற்கான பொருளை மறந்து விட்டுசெயற்படுவீர்கள். வியாபாரிகள் பணச் சிக்கல்களில் இருந்து விடுபடுவர்.

**நாளை**

சித்திரை 27 புதன்கிழமை 09.05.2012
திதி: சதுர்த்தி பி.இ 12.56வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ 12.40 வரை
சுபநேரம்: 04.24- 05.54 வரை
ராகு காலம்: 11.54- 01.24 வரை

**துலாம்:** பணிகளில் முழுக்கவனம் செலுத்திய போதும், தவறுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். இல்லறத்துணையின் விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு செலவுகள் ஏற்படும். பெண்கள் நினைத்த பொருளை வாங்கி மகிழ்வர். விட்டுப்போன உறவுகளை மீண்டும் புதுப்பிக்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** அவசரப்பட்ட செயற்பாடுகளால் ஆதாயங்களை விட விரயங்களே அதிகரிக்கும். சுயதேவைகள், ஆடம்பர விருப்பங்களை நிறைவேற்ற முற்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் தேவையற்றதொந்தரவுகளைச் சந்திக்க நேரிடும்.

**தனுசு:** பணிவான செயற்பாடு நல்லது. பண வரவு மூலம் எண்ணக் கனவுகள் நனவாகும். அலைச்சல் அதிகரிக்கும். செய் தொழிலில் சில சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை தேவை.

**மகரம்:** சிக்கலான காரியங்களைக் கூட வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். புதிய வேலை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. இல்லறத் துணையின் அரவணைப்பு காரியங்களை சிறப்பாகச் செய்து முடிக்க உதவும்.

**கும்பம்:** சிந்தித்துச் செயற்படுவீர்கள். செய் தொழிலில் அபிவிருத்தி காணப்படும். உறவினர்கள் உங்கள் சிக்கலைத் தீர்க்க உதவிக்கரம் நீட்ட முன்வருவர். தக்க சமயத்தில் இல்லறத் துணையின் யோசனை பயன் தரும். உடல் உபாதை குறையும்.

**மீனம்:** மற்றவர்கள் காரியங்களுக்காக அலைய நேரிடலாம். ஒரு சில அதிர்ஷ்ட வாய்ப்பு கை நழுவலாம். நம்பிய ஒருவர் உங்களை ஏமாற்றலாம். சில விடயங்களை இல்லறத்துணைக்கு புரியவைப்பதற்கு முன், போதும் போதும் என்றாகி விடும். பயணங்களில் பாதுகாப்பை கவனத்தில் கொள்க.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | 2 | | | | 9 |
| 8 | 4 | | | | 9 | 2 | | |
| 9 | | | 5 | | | | | 3 |
| | | | 4 | | 2 | 3 | 1 | 6 |
| 1 | | | | 7 | | | | 8 |
| 2 | 3 | 4 | 8 | | 6 | | | |
| 6 | | | | | 4 | | | 7 |
| | | 5 | 1 | | | | 9 | 4 |
| 4 | | | | 3 | 5 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 3 | 8 | 7 | 5 | 1 | 4 | 2 |
| 2 | 1 | 8 | 4 | 3 | 9 | 5 | 6 | 7 |
| 4 | 5 | 7 | 6 | 1 | 2 | 8 | 3 | 9 |
| 7 | 3 | 4 | 5 | 9 | 6 | 2 | 8 | 1 |
| 1 | 8 | 5 | 7 | 2 | 3 | 4 | 9 | 6 |
| 9 | 6 | 2 | 1 | 4 | 8 | 7 | 5 | 3 |
| 8 | 2 | 9 | 3 | 5 | 7 | 6 | 1 | 4 |
| 5 | 7 | 1 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 3 | 4 | 6 | 2 | 8 | 1 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





உங்கள் சேமிப்புக் கணக்கிற்கு

உயர் வட்டி* 8.75%

எந்தவொரு NDB கிளைக்கும் வந்து Savings Star Plus கணக்கொன்றை ஆரம்பியுங்கள். உயர் வட்டியினை அனுபவியுங்கள்.

அருகிலுள்ள NDB கிளைக்கு வாருங்கள் அல்லது அழையுங்கள் 011 2 448 888

*ஆகக்குறைந்த வைப்பு ரூ. 50,000/-

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி

NDB இல் சேமிக்கும் அனைவருக்கும் கை நிறைய - மனம் நிறைய

ஆறு மாதங்களுக்கு

ரூ. 7,500/- பெறுமதியான

NDB பொருட்கூடை



தினமும் ஒரு வெற்றியாளர்!

மேலும் தினமும் 10 பேருக்கு ரூ. 2,000/- வீதம் பொருட்கூடைகள்.

அழையுங்கள் 011 2 448 888

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2500

## படையினர் கைது

கொழும்பு,மே 8

கடந்த காலங்களில் இராணுவத்தைவிட்டு தப்பிச் சென்ற 2500 படையினர் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

சுமார் 65000 படையினர் இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். அவர்களில் 36,000 பேர் இது வரைகைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவர்கள் தொடர்பில்ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பின் சிலர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு, மேலும் சிலர் சட்ட ரீதியாக ஓய்வுபெற்றதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.



பௌத்த மத யாத்திரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பை அண்டிய ராஜகிரிய ஒபேசேகரபுர பகுதியில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிக்குகளுக்கு தானம் வழங்கப்படுகின்றது.

# ரயிலில் மோதுண்டு முதியவர் சாவு

கொழும்பு,மே 8

மருதானையில் இருந்து அளுத்கம நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் மோதுண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிறு இரவு 11.56 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ரஞ்சன் விஜேரத்னபுர பகுதியைச் சேர்ந்த குமார் சகோ (வயது-65) என்பவரே உயிரிழந்துள்ளார். சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தமிழருக்கு உரிமை வழங்க ஜனாதிபதி விரும்பியதில்லை

## நவசமசமாஜக் கட்சித் தலைவர் கூறுகிறார்



**நாளுக்கு நாள் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் அழுத் தங்கள் ஜனாதிபதி மஹிந்த மீது அதிகரித்து வருகின்றன.**

கொழும்பு,மே 8

தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்கி உரிமைகள் வழங்குவதை ஜனாதிபதி ஒரு போதும் விரும்பியதில்லை. இதற்கு எதிரான கொள்கையையே கொண்டுள்ளார். ஆனால் வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக உரிமைகளை வழங்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவோமென இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உறுதியளிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுபுறம் சிங்கள அமைப்புக்களைத் தூண்டிவிட்டு உரிமைகள் வழங்குவதை தடுக்கும் சதித் திட்டத்தையும் மேற்கொள்கிறார்.

இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே ஐ.தே.கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்த கூட்டு எதிர்க் கட்சிகளின் மே தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அரச தரப்பு, படைத் தரப்பு என யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நடத்துவதை தடுப்பதற்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. இவை அனைத்தையும் தகர்த்தெறிந்து மே தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இதன் பின்னணியில் இந்தியா இருந்திருக்கலாம். ஆனால் மக்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. இந்த மே தினத்தால் அரசின் மத்தியில் தற்போது அச்சம் குடிகொண்டுள்ளது.

இந்த நிலைமையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலுடன் உரிமைகளை வழங்க வேண்டுமென்ற இந்தியாவின் அழுத்தம் அதிகரித்துள்ளது. நாளுக்கு நாள் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் அழுத் தங்கள் ஜனாதிபதி மஹிந்த மீது அதிகரித்து வருகின்றன. இதனால் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு உருவாகியுள்ளது.

நாட்டிலுள்ள சிஹல உறுமய, ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி மற்றும் சிங்கள பேரினவாதிகளின் தேசாபிமான அமைப்புக்களை தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு எதிராக தூண்டிவிடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த எதிர்ப்பை பயன்படுத்தி தமிழ்மக்களை அடிமைகளாக வாழ வைப்பதே ஜனாதிபதியின் திட்டமாகும்.- என்றார். (ச)

# புலிக்கொடி பரப்புரை தோல்வி அடைந்தது

## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மே8

யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கட்சி நடத்திய கூட்டு மே தினத்தின் வெற்றியை திசை திருப்பி அரசு மேற்கொண்ட புலிக் கொடி பிரசாரம் தோல்வியடைந்துவிட்டது என்று ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மே தினத்தில் புகுந்து புலிக் கொடிகளைக் காட்சிப்படுத்தியவர்கள் யாரென்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த ஒளிப்பதிவு நாடாவை இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைத்து அந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வெளியிட்ட உண்மைகளை நாம் வெளியிடுவோம்.

ஐ.ரி.என். தொலைக்காட்சியிலேயே புலிக்கொடி காட்சிப்படுத்தப்பட்ட செய்தி ஒளிபரப்பப்பட்டது. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதென கட்சியின் செயலாளர் ஐ.ரி.என். தலைவர் ரொஸ்மண்ட் சேனாரத்னவுக்கு மனு அனுப்பியுள்ளார்.

ஆனால் ரவி கருணாநாயக்கவின் குற்றச்சாட்டை சுயாதீனத் தொலைக்காட்சி மறுத்துள்ளது. அத்துடன் இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கச் சொல்லி சவால் விடுத்துள்ளது.

இந்த ஒளிப்பதிவு நாடா பாதுகாப்பு அமைச்சுக்கு எம்மால் அனுப்பப்பட்டதே தவிர குறித்த அமைச்சு எமக்கு வழங்கவில்லை என்று சுயாதீனத் தொலைக்காட்சி ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளருக்கு மறுப்புத் தெரிவித்து மனு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கையின் பொருளாதாரக் கொள்கை மோசமானது

## ஐ.தே.க. பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,மே8

அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மிகவும் மோசமானவை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்வதா அல்லது ஆட்சி மாற்றம் நோக்கி செல்வதா என்பதை மக்கள் விரைவில் தீர்மானிக்க வேண்டும்.

வறிய மக்கள் தொடர்ச்சியாக வறுமையில் வாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே நாட்டில் காணப்படுகின்றது. அரசு பிரசாரம் செய்வதைப் போன்று நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருந்தால் நாட்டு மக்கள்வறுமையில் வாட வேண்டிய அவசியமில்லை.

இலங்கையில் வரி அறவீட்டு முறைமையில் வெளிப்படைத் தன்மை இல்லை.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் வாழ்வதைவிட சாவதே மேல் என எண்ணத் தொடங்கியுள்ளனர்- என்றார். (ச)

# வைத்தியரிடம் பணம் கொள்ளை 3 பொலிஸ் உத்தியோகத்தர் கைது

கொழும்பு,மே 8

வைத்தியர் ஒருவரிடம் பணம் கொள்ளையிட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் மிரிஹான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

காரில் வீடு நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த குறித்த வைத்தியரிடமிருந்து மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் 8000 ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர்.

குறித்த வைத்தியரையும் சக பயணியையும் கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தி பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர். (ச)

# சிகரெட்டை விட உரத்தின் விலை குறைவாம்

சிகரெட் பைக்கற்றை விட ஒரு மூடை உரத்தின் விலை குறைவானது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 7000 ரூபா பெறுமதியான ஒரு மூடை உரத்தை அரசு 350 ரூபா என்ற சலுகை விலையில் விவசாயிகளுக்கு வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெல் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்துள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் நாட்டில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். உலகில் பால் மா பயன்பாடு வீழ்ச்சியடைந்துள்ளது, திரவப் பாலின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சுவர் இடிந்து 15 பேர் காயம்

கண்டி, மஹியாவைப் பகுதியில் கொங்கிறீட் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

மஹியாவ மாரியம்மன் ஆலய தேர் திருவிழாவை கண்டு களிப்பதற்காக வருகை தந்த குழுவினர் மேல் மாடியில் கொங்கிறீட் மீது ஏறி நின்ற சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் சிறுவர்களும் மற்றும் பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மாகாண சபைகளைக் கலைக்கக் கோரிக்கை

கொழும்பு,மே8

மூன்று மாகாண சபைகளைக் கலைக்குமாறு முதலமைச்சர்கள் கோரிக்கை விடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சப்ரகமுவ, ஊவா மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் இவ்வாறு தங்களது மாகாணசபைகளை கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கோர உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

உத்தியோகபூர்வ காலம் முடிவடைதற்கு முன்னதாக மாகாணசபைகளை கலைக்குமாறு குறித்த முதலமைச்சர்கள் எழுத்து மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர். ஆளும் கட்சியின் மீதான மக்கள் நம்பிக்கை வலுவிழக்கவில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்கு வெளிக்காட்டும் நோக்கில் தேர்தல்களை நடத்த அரசு உத்தேசித்துள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணாசலம் பஸ் பயணிகளுக்கு ஓர் அறிவித்தல்

11.05.2012 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணம்/கொழும்பு வரும் அருணாசலம் பஸ் பயணிகள் தங்களது ஆசனங்களை Hotline தொலைபேசி மூலம் பதிவு செய்து கொள்ளலாம்

**தொடர்புகளுக்கு : 075 4666660**

# செஞ்சிலுவைத் தின பரப்புரைகள் பருத்தித்துறை பாடசாலைகளில்

## தோமையர் ஆலய அரங்கில் கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 8

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் செஞ்சிலுவை தினம் தொடர்பான பரப்புரைகளும், தொண்டர்களின் கலை நிகழ்ச்சிகளும் பருத்தித்துறைப் பிரதேசத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை சங்க இணையம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைப் பிரிவு ஆகியன இணைந்து நடத்தும் இந்த நிகழ்வுகளில் காலை நிகழ்வுகளாக செஞ்சிலுவை தினம் தொடர்பான பரப்புரைகள் பாடசாலைகளில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வாக தொண்டர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

செஞ்சிலுவைத் தினம் தொடர்பான பரப்புரைகள் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெறவுள்ளன. மாலை நிகழ்வில் இடம்பெறும் கலை நிகழ்வுகளும், உலக செஞ்சிலுவை தினம் தொடர்பான பொதுக் கூட்டமும் பருத்தித்துறை புனித தோமையர் ஆலய அரங்கில் நடைபெறும்.

வருடந்தோறும் நடத்தப்படும் இந்த நிகழ்வில் பொதுமக்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து பயன்பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம்,மே 8

சுதுமலை தெற்கு கிழுவையடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாக 11 நாள்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும். (வ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
06.09.1945

உதிர்வு
09.04.2012

திதி:- திருதியை

### அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(வித்யா.ரெக்ஸ் - சாவகச்சேரி)

*சுகமான வாழ்வைத் தந்த எம் அப்பாவே!*
*குணநலத்தின் நல்லோன் எம் அப்பாவே!*
*குன்றிடா உழைப்பின் வல்லோன் எம் அப்பவே!*
*என்றென்றும் எம் நெஞ்சில் உங்கள்*
*நினைவுகள் நீங்கிடாது அப்பா.....*

கடந்த 09.04.2012 இல் இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து அன்னாருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பங்களா றோட்,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

*உங்கள் பிரிவால் துயருறும்*
**குடும்பத்தினர்.**

(14710) (2.6.9)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம், தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி, தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை, தொ.பே : 077 8996085

## உழவு இயந்திர அனுமதிப்பத்திரம் தவறவிடப்பட்டுள்ளது

இ.சுந்தரலிங்கம், அணிஞ்சியன்குளம், மல்லாவி என்பவருடைய உழவு இயந்திர அனுமதிப் பத்திரங்கள்

1. இல.36 ஸ்ரீ 7569 பெட்டி இல.44 ஸ்ரீ 9667
2. இல.49-5634 பெட்டி இல.44 ஸ்ரீ 0615
3. மோட்டார் சைக்கிள் இல. NP.GN -1117

ஆகிய ஆவணங்கள் 04.5.2012 வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டானுக்கும், மாங்குளத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்புக்கு:- 0775131036

## அறிவித்தல்

### தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். மேலதிக விவரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம்

**BIT** சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.

Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

## மரண அறிவித்தல்

### சின்னையா பொன்னுத்துரை



வேலம்பிராயைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா - பொன்னுத்துரை (06.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சி தம்பதியரின் அன்புமகனும், செல்லம்மாவின் அன்புக்கணவரும், இந்திரனின் (சுவிஸ்) பாசமிகு தந்தையும், சரஸ்வதியின் அன்பு மாமனும், இந்துஜாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணாத்திப்பால இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

## Personal Class

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class ம் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கும் (No Age Limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு : பருத்தித்துறை வீதி, நல்லூர்
T.P : 077 8361521

## English &German, Tution Class

Spoken English with Grammar, Official & Private will be Teaching at Your Home.
Contact: **M.P.Mahendirarajah,**
Expert Teacher, T.P.0775926983

## காணி விற்பனைக்குண்டு

இணுவில் கிழக்கு தியேட்டர் வீதி, ரயில் பாதைக்குக் கிழக்காக அமைந்துள்ள "அங்கிளியப் புலம்" எனும் 5 பரப்பு 5.2 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவோ அல்லது முழுவதாகவோ விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: க.முருகையா (G.S.)
021 3216763

## ஐஸ்பாத் இயந்திரங்கள் விற்பனைக்கு

வவுனியாவில் நல்ல நிலையில் பாவனையில் உள்ள Bitzer கொம்பிறசர் + ஐஸ்பாத் 6 தட்டுகள் போடக்கூடியது (72 ஐஸ் கட்டிகள்) 3HP கொம்பிறசர் + ஐஸ்பாத் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 077 7114804

## 16 ஆம் நாள் நினைவுடன் (10.05.2012) அந்தியேட்டி அழைப்பு



மண்ணில்
08★ 10★ 1930

விண்ணில்
25★ 04★ 2012

### அமரர் தம்பையா தங்கராசா

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை (10.05..2012) காலை 7 மணியளவில் கீரிமலையில் நடைபெற்று வீட்டுக் கிருத்தியம் எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

சத்தியானந்தராசா (மகன்),
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.
0752423006

மனைவி, பிள்ளைகள்.
குடும்பத்தினர்.

(கி/1447) (2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# வெசாக் அலங்கரிப்பிலும் சீன நாட்டின் ஆக்கிரமிப்பு

## உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிப்பு

இலங்கையில் களை கட்டியுள்ள வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்களில் சீனத் தயாரிப்பு வெசாக் அலங்கார விளக்குகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

மூங்கிலினால் வடிவமைக்கப்பட்டு வண்ணமயமான மெல்லிய காகிதத் தாள்கள் சூற்றப்பட்டும் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பாரம்பரிய விளக்குகளுக்குப் பதிலாகத் தற்போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் வகை விளக்குகளே வீதிகள் மற்றும் அலங்காரத் திடல்கள் எங்கும் ஆக்கிரமித் துள்ளன.

200 ரூபா முதல் 1,000 ரூபா வரையான விலைகளில் சீன விளக்குகள் விற்கப்படுகின்றன.

**சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் வகை விளக்குகளே வீதிகள் , அலங்காரத் திடல்கள் எங்கும் ஆக்கிரமித்துள்ளன.**

பாதிப்புக்கு உள்ளாகியுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பீடு குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் அது பயனளிக்கவில்லை என்று இலங்கையின் பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவின் கருத்தை மேற்கோள் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன.

சீனத் தயாரிப்பு விளக்குகளுடன் போட்டி போட உள்நாட்டு உற்பத்தி விளக்குகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று ஒருசாரார் தெரிவித்துள்ளனர்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தங்களில் இருந்து உள்நாட்டுப் பாரம்பரியத் தொழில்கள் பாதிப்புக்கு உள்ளாவதன் அறிகுறியாகவே வெசாக் விளக்கு விவகாரத்தைக் கருத வேண்டுமென 'லங்கா பிஸ்னஸ்' இணையத்தளம் கருத்துத் தெரிவித்துள்ளது. (ந)

# ஜோர்தானில் நிர்க்கதியான 12 பேர் நாடு திரும்பினர்

தொழிலுக்காக ஜோர்தான் சென்று நிர்க்கதியான 29 இலங்கைப் பணிப் பெண்களில் இதுவரை 12 பேர் நாடு திரும்பியுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களில் ஐவரை நேற்றுமுன்தினம் நாட்டுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்ததாக ஜோர்தானுக்கான இலங்கைத் தூதுவர் காமினி ராஜபக்ஷ கூறினார்.

ஏனையவர்களையும் விரைவில் நாட்டுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை வேலை வாய்ப்புக்காகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்கான மேலும் 80 பெண்கள் தூதரகத்தின் பொறுப்பில் உள்ளனர் என்றும் ஜோர்தானுக்கான இலங்கைத் தூதுவர் காமினி ராஜபக்ஷ மேலும் கூறினார்.

தொழிலுக்காக ஜோர்தான் சென்று அம்மான் நகரில் நிர்க்கதியான 29 இலங்கைப் பணிப் பெண்கள் தொடர்பில் கடந்த மாதம் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

### காலநிலையில் மாற்றம்:

# இரண்டொரு தினங்களுக்கு மழை பெய்யும்

வானிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டிருப்பதால் தென்மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு காலை வேளையில் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலையாளர் சமிந்திர டி சில்வா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

வானிலையில் ஏற்பட்டிருக்கும் இந்தத் திடீர் மாற்றம் காரணமாகத் தென்கிழக்கு, வடக்கு மற்றும் மன்னார் குடாக் கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் அவர் கூறினார். அதேவேளை ஊவா, மத்தி, வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களில் பிற்பகலிலோ, மாலை வேளையிலோ இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும். இந்தச் சமயங்களில் திடீரெனக் காற்றின் வேகம் அதிகரிக்கும். அத்தோடு இடி, மின்னலும் கடுமையாகக் காணப்படும்.

இவ்வாறான சமயங்களில் இடி, மின்னல் பாதிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடிய கவனம் செலுத்துவது அவசியம் எனவும் வானிலையாளர் சமிந்திர டி சில்வா மேலும் தெரிவித்தார். (ந)

# ஆஸ்திரேலியாவிலும் மே 18 நினைவேந்தல் நிகழ்வுகள்

இலங்கையில் தமிழர் தாயகத்தில் நிகழ்ந்தேறிய கொடிய பேரழிவின் நினைவேந்தல் நாள் கவனயீர்ப்பு நிகழ்வுகள் தமிழர்கள் பரந்து வாழும் உலகின் அனைத்து நாடுகளிலும் மே மாதம் 18 ஆம் திகதி அன்று நடைபெறுகின்றன.

அந்த வகையில் மே மாதம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவிலும் மெல்பேர்ன் மற்றும் சிட்னி நகரங்களிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

மரணித்துப்போன எம் உறவுகளை நெஞ்சில் நிறுத்தி, இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்களை வெளிப்படுத்தி, உலகத் தமிழர்களைத் துக்கத்தில் ஆழ்த்திய மே மாதத்தின் நினைவேந்தல் நாளில் இணைந்து, குரலடங்கிப் போயுள்ள தாயக மக்களின் குரலாக ஆஸ்திரேலியத் தமிழ் அமைப்புக்கள் ஒலிக்கத் தயாராகி வருகின்றன. (ந)


## நீங்காத நினைவலைகள்

**3 ஆம் ஆண்டு**



**திருமதி ஜெயவதனி மகாதேவா (வதனா)**

(மு/உடையார்கட்டு மகாவித்தியாலய ஆசிரியை)

**அன்னை மடியில்: 13-04-1976**
**ஆண்டவன் அடியில்: 12.05.2009**

எங்கள் அன்புத் தெய்வமே
எம்மீது பாசம் கொண்ட அம்மாவே
எங்களைப் பிரிந்து எங்கம்மா சென்றீர்கள்
நாங்கள் என்ன பாவம் செய்தோம் - தாயே
தாய் அன்பு இல்லாது இவ்வுலகில் வாழ்வதற்கு
மறக்க முடியுமா உங்கள் புன்னகை முகம் அதனை
எத்திசையில் பார்த்தாலும் உங்கள் இனிய முகம் தோன்றுதம்மா
முள்ளிவாய்க்காலோடு முடிந்ததுவோ உங்கள் பேச்சு
ஆண்டு மூன்று போனதென்று நம்பவே முடியவில்லை
மீள வழியற்றவராய் வாழ்கின்றோம் - தவிக்கின்றோம்
காலம் உள்ளவரை உங்களைப் போற்றி வணங்கிடுவோம்

சாந்தி சாந்தி சாந்தி

உமை மறவாத கல்விச்சமூகம், மாணவச்செல்வங்கள், மகாதேவா, அபிசாந், அபிசாளினி, பெற்றோர், உறவுகள்.

**5 ஆம் ஆண்டு**



**அமரர் பொன்னுத்துரை பிரதீப்**

**அன்னை மடியில்: 25-01-1984**
**ஆண்டவன் அடியில்: 04.04.2007**

ஆண்டு ஐந்தானதே.
ஆறவில்லை எம் இதயம்
ஆறாக ஓடுகிறது கண்ணீர்
வற்றாத நதியாகி
ஆனந்தமாய் வாழ்ந்த - நம்
வாழ்வை கொடியவன் குறிவைத்தான்
எம் கூட்டைப் பிரித்துவிட்டான்
பிரிந்த உயிர் கிடைத்திடுமா
தவிக்கிறது எம் இதயம்

(177809(உ-8-9))

துயரில் வாடும்
மனைவி -
பிள்ளை -
மானிப்பாய்.



**தரம் 05 மாணவர்களுக்கு அமுதம்**
**பெற்றோர்களே அரிய வாய்ப்பு**

உங்கள் பிள்ளைகள் சித்தியடைய
அமுதம் பரீட்சை
பிரதி ஞாயிறு தோறும்
மாலை 2.00 - 4.30 வரை
அகில இலங்கையில் முதல் தர புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
(மட்டுநகர் வித்யா கீர்த்தி N.சந்திரகுமார் அவர்களது)
பரீட்சை மட்டும் எழுதலாம். அத்துடன் விரும்பின் இரவு நேர வகுப்பிலும் இணையலாம்.

மேலும் விவரமறிய : 077 9122918, 077 5581626



## ஆசிரியர் தேவை

06,07,08 - விஞ்ஞானம்
06 - 11 - ஆங்கிலம்

தொடர்புகளுக்கு:
மதுரம் இன்ஸ்ரிரியூட்,
கோப்பாய் தெற்கு.
T.P : 077 9122918



## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்துறையில் விற்பனை முகவராக இணைந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
(கூடிய வருமானம் பெற போதியளவு பயிற்சிகள் வழங்கப்படும்)
தகைமைகள்: Commerce / Arts - 3 Pass
Bio / maths - 2 Pass
விண்ணப்பங்களை 14- 05 - 2012 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
C/o, உதயன், வி.இல. 4356
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## இலங்கை மத்திய வங்கி






**பகிரங்க விரிவுரை** (தமிழ் மொழியில்)

"மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2011 இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை"

**பேச்சாளர்**

திரு. யோ. ஜயகாந்,
பொருளியலாளர்,
பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

காலம்: 2012 மே, 09 (புதன்கிழமை) பி.ப 03.00
இடம்: யாழ்·பொது நூலக கேட்போர் கூடம்

**அனுமதி இலவசம், அனைவரும் வருக!**

இவ் விரிவுரை க.பொ.த.உயர்தரம், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது அறிவை அதிகரித்துக்கொள்வதற்கு பயனுடையதாக இருக்கும்

வட மாகாண அலுவலகம், இலங்கை மத்திய வங்கி
இல. 105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0212221856 தொலைநகல்: 0212221857


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMW இன் விருது வழங்கும் விழா




இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான அசோசியேட் மோட்டர் வேஸ் (AMW) நிறுவனத்தின் மீள்நிரப்பும் டயர்கள் பிரிவின் விநியோகத்தர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு கந்தலம் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

Top 25 dealers convention எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடுபூராகவுமுள்ள நிறுவனத்தின் மீள்நிரப்பும் டயர்கள் பிரிவைச் சேர்ந்த 700 விநியோகத்தர்களினுள் சிறப்பாகச் செயலாற்றிய 25 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

விருதுகள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நிறுவனத்தின் தலைவர் திலக் டி சொய்சா, கடந்த காலப்பகுதியில் நாம் எய்திய பல சாதனைகளின் பக்கபலமாக எம்முடன் இருந்தவர்கள் எமது விநியோகத்தர்கள். இதன் காரணமாக வருடமொன்றில் ஒரு முறையாவது நாம் எமது சிறந்த விநியோகத்தர்களுடன் இது போன்ற சந்திப்பொன்றை மேற்கொள்ளகிடைப்பதையிட்டு பெரும் மகிழச்சியடைகிறேன். இவர்களின் குடும்பத்தாருடன் இணைந்து மகிழ்ச்சிகரமாக இரு தினங்களைக் களிப்பதை யிட்டு நாம் பெருமையடைகிறோம் என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவின் பணிப்பாளர் புஷ்பிக ஜனதீர கருத்துத் தெரிவிக்கையில், " கடந்த இரு ஆண்டு காலப்பகுதியில் எமது டயர் பிரிவு 25 சதவீத வளர்ச்சியை எய்த முடிந்திருந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இதற்காக விநியோகத்தர்களின் பங்களிப்புப் பிரதானமானதாக அமைந்திருந்தது. இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் ரயர் விநியோகத்தை மேற்கொள்வதற்காக மற்றுமொரு புதிய தொழிற்சாலையொன்றும் அமைக்கப்படுகின்றது ''என்றார்.

களுத்துறை மற்றும் அநுராதபுரம் போன்ற பகுதிகளில் தொழிற்சாலைகளை கொண்டமைந்த அசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனம், தர முகாமைத்துவத்துக்காக வழங்கப்படும் ISO 9001:2008 தரச் சான்றிதழையும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் ISO 14001: 2004 தரச்சான்றிதழையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

# மாருதியின் லாபம் 28 வீதம் சரிவு

கடந்த நிதி ஆண்டில் மாருதி சுசுகியின் நிகர லாபம் 28.55 சதவீதம் சரிந்துள்ளது.இந்தியாவின் மிகப் பெரிய கார் நிறுவனமான மாருதி சுசுகி கடந்த ஆண்டு பெற்ற நிகர லாபம் 1,635 கோடி ரூபாவாகும். கடந்த ஆண்டைக் காட்டிலும் இது 28 சதவீதம் குறைவாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இதுவே மிகக் குறைந்த இலாபம். கடந்த நிதி ஆண்டு ஓட்டோமொபைல் தொழிலுக்குச் சவால்கள் மிகுந்த வருடமாக இருந்தது. பண வீக்கம், பெற்ரோல் விலை உயர்வு ஆகியவை கார்களின் விற்பனையைப் பெரிதும் பாதித்தன. அதிலும் சிறு கார் ரகங்களின் விற்பனைதான் அதிகமாக பாதிப்புக்கு உள்ளானது. இந்த ரகக் கார்களை வாங்குவோர் விற்பனை விலையைப் பற்றி மிகவும் நுட்பமாக யோசிப்பவர்கள். வாடிக்கையாளர்கள் பெற்ரோல் கார்களைவிட்டு விலகி டீசல் கார்களை நாட ஆரம்பித்து விட்டார்கள். இந்த வகைக் கார்களை வேகமாகத் தர மாருதி நிறுவனம் தவ்றி விட்டது. (த)

# சூரிய சக்தியில் இயங்கும் மொபைல் போன்



மைக்ரோமேக்ஸ் இந்திய நிறுவனம் சூரிய சக்தியில் இயங்கும் மொபைல் போன்களைத் தயாரித்து வழங்கத திட்டமிட்டுள்ளது .விரைவில் இந்த போன்களை எதிர்பார்க்கலாம்.

இந்த போன்களில் சூரிய ஒளியைப் பெற்று மின்சக்தியை உருவாக்கும் சோலார் தகடுகள் பொருத்தப்படும்.

இதிலிருந்து கிடைக்கும் மின்சக்தி மூலம் போனில் உள்ள பற்றறி சார்ஜ் செய்யப்படும்.

மூன்று மணி நேரம் சார்ஜ் செய்தால் 90 நிமிடங்கள் வரை தொடர்ந்து பயன்படுத்த முடியும். (த)

# இலங்கையின் முதலாவது முப்பரிமாண சுவர் ஓடுகள் காட்சியறை அங்குரார்ப்பணம்

இலங்கையின் முதலாவது சுவர்த்தாறி (Wall Paper) மற்றும் முப்பரிமாண சுவர் ஓடுகள் (3D Wall Tile) காட்சியறை அண்மையில் கொழும்பு நாராஹேண்பிட்டி பகுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தது. இந்த காட்சியறையிலிருந்து இலங்கையர்களுக்கு தமக்கு தேவையான சுவர்த்தாறிகள் மற்றும் முப்பரிமாண சுவர் ஓடுகளை இலகுவாக தமது விருப்பத்துக்கு அமைய தெரிவு செய்து கொள்ள முடியும்.

வோல் ஆர்ட் பிரைவேற் லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிஷானி களுஆரச்சி கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் சர்வதேச புகழ்பெற்ற சுவர்த்தாறி நாமங்களின் ஏக விநியோகத்தர்களாக நாம் செயற்பட்டு வருகிறோம். நாம் 1000க்கும் அதிகமான சுவர்த்தாறி அலங்காரத் தெரிவுகளை ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இவை வாடிக்கையாளர்களின் தெரிவு, பண வசதி மற்றும் இரசனைக்கு அமைவாக அமைந்துள்ளன. மேலும், ஹோட்டல்கள், ரெஸ்டொரன்ட் வகைகள், மதுபான சாலைகள், சொப்பிங் மையங்க்ள், தொடர் மாடிகள் மற்றும் இல்லங்களுக்கு பொருத்தமான முப்பரிமாண சுவர் ஓடுகளையும் நாம் வழங்குகிறோம்'' என்றார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சுவர்த்தாறி துறையில் இலங்கை புதிய சந்தை வாய்ப்பாகவும், அதிகளவு விரும்பப்படும் நாடாகவும் திகழ்கிறது. சுவர்களுக்கு தேவையான அலங்கார பொருட்களை கொள்வனவு செய்வதில் அதிகளவு இலங்கையர்கள் தமது ஆர்வத்தை காண்பித்து வருகின்றமை எம்மால் அவதானிக்க முடிந்தது. எம்மிடமுள்ள தெரிவுகளிலிருந்து, வாடிக்கையாளர்கள் தமது இல்லங்களிலும், வேலைத்தளங்களிலும் மனதைக்கவரும் தோற்றத்தை ஏற்படுத்த முடியும். வாடிக்கையாளர்கள் தமது அறைகளை குறைந்த செலவில் நவீன மயப்படுத்துவதற்காக அக்சன்ட் ஓர் ஃபீச்சர் வோல்'' (Accent of Feature wall) இனையும் தெரிவு செய்து கொள்ள முடியும்'' என்றார்.

மேலைத்தேய நாடுகளில் இந்த சுவர்த்தாறிகள் அதிகளவு அலங்காரப் பொருளாக பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஆசிய நாடுகளில் பின் வரும் காரணிகளுக்காக அவை பெரிதும் தெரிவு செய்யப்படுகின்றன.

சூழல் பாதுகாப்பான இந்த சுவர்த்தாறிகள் ஏரோசோல்கள் அல்லது ஈயக் கசிவு அற்ற பதார்த்தங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டவை. வாயு குளிருட்டப்பட்ட அறைகளில் வோல் ஆர்ட்டின் வினைல் ரக சுவர்த்தாறிகள் பொருத்தப்படும் பொழுது, குளிர்ந்த வாயுவை வெளியே கசிவடைதலை தவிர்க்கும் ஆற்றல் கொண்டவை. இதன் மூலம் வாயு குளிரூட்டியை சிறிது நேரம் பாவனையின் பின்னர் அணைத்துவிடக் கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

# லேசர் பிறிண்டர்களுக்கான தீர்வுகள் அறிமுகம்




R&G கெப்பிட்டல் நிறுவனம் உயர்தரம் வாய்ந்த லேசர் பிரிண்டர்களானஏக, Lexmark, Samsung, Canon ஆகியவற்றின் toner தேவைகளுக்கு ஒரு சிறந்த Total Laser Care (TLC) தீர்வை முன்வைத்துள்ளது.

இதன்படி, R&G நிறுவனம் குறைந்த செலவிலான இரண்டு தீர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு முன்வைத்துள்ளது. ஒன்று, பற்றுறுதியை அடிப்படையாகக்கொண்ட ஒப்பந்தம். மற்றையது நீங்கள் அச்சுப்பிரதி செய்யும்போதே கட்டணம் செலுத்தும் வாய்ப்பு.

பற்றுறுதியை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் toner கார்ட்றிஜ்களை 30 வீதக் கழிவில் R&Gயிடம் பெற்றுக்கொள்ள முடியும். இதனைவிட உங்கள் வியாபார முயற்சிகள் எதுவித தடையுமின்றிச் செல்வதற்கு விற்பனைக்குப் பின்னரான பராமரிப்புச் சேவைகளையும் இந்நிறுவனம் வழங்குகின்றது.

பிரின்டர்களின் உத்தரவாத காலப் பகுதி நிறைவடைந்த பின்னரும் பிரின்டர் பழுதடையும் பட்சத்தில் அதனைத் திருத்த வேலைகளுக்காகப் பொறுப்பெடுக்கும் போது பதிலுக்கு இன்னொரு பிரின்டர் வழங்கவும் R&G ஏற்பாடுகளைச் செய்கிறது.

இரண்டாவது தெரிவின் பிரகாரம், வாடிக்கையாளர் தான் அச்சுப் பதிக்கும் தாள்களின் எண்ணிக்கையைப் பொறுத்து விலை செலுத்தமுடியும். உதாரணமாக 1,000 பக்கங்கள் மட்டும் அச்சுப் பதித்தால் அதற்குரிய கட்டணம் மட்டுமே செலுத்தவேண்டும்.

இதன்படி, பிரின்டர் மற்றும் லேசர் toner கார்ட்றிஜ்களை R&Gயிடமிருந்து பெற்றுக் கொள்ளும்போது அச்சுப் பதிக்கும் தாள்களுக்கான விலை மட்டும் செலுத்தினால் போதுமானது.

# மாணவிகளுக்கு மடிக் கணினி



சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் சிசு உதான கணக்கில் போதிய மீதியினைப்பேணி வந்த இரு மாணவிகளுக்கு மடிக்கணினிகள் பரிசாக் கிடைத்துள்ளன.

2010 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மக்கள் வங்கியினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சிசு உதான கணக்கு வைத்திருப்போர் இடையே போதிய மீதியினைப் பேணி வந்த மாணவ மாணவிகளுக்கு சிறு மடிக்கணினியைப் பரிசாக வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கு வைத்திருந்த செல்வி தவச் செல்வம் தவஜிகா, கந்தையா நிரோஜினி ஆகியோருக்கே சிறு மடிக்கணினி பரிசாக கிடைத்துள்ளது. இவர்களுக்கான சிறு மடிக்கணினிகள் அண்மையில் மக்கள் வங்கி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கத்தினால் கையளிக்கப்பட்டன. (த-9)

# 20 கோடி லட்சம் டொலர் வருமானத்தை இழந்தது பேஸ்புக்

உலகின் அதிக பிரபல்யம் வாய்ந்த சமூகவலைத்தனமான 'பேஸ்புக்' இணையத் தளம் இந்த வருடத்தின் காலாண்டில் 20 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர் வருமானத்தை இழந்துள்ளது.

ஆராய்ச்சி மற்றும் சந்தைப் படுத்தல் போன்ற பணிகளுக்கான செலவு இந்த வருடம் அதிகரித்தமையே மேற்படி இழப்புக்குக் காரணம் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மார்ச்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலாண்டில் சுமார் 100 கோடி அமெரிக்க டொலர்களை இலாபமாகப் பெற்றுள்ளதாகவும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் 90 கோடி 10 லட்சம் பேர் பேஸ்புக்கைப் பயன்படுத்தியுள்ளனர். கடந்தவருட காலாண்டைவிட இது 33 வீத அதிகரிப்பாகும்.

பிரேஸில், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளவர்களே பேஸ்புக்கை அதிகம் பாவித்து நிறுவனத்தை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்கின்றனர்.

தற்போது பேஸ்புக்குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் நாடுகளில் பாவனையை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

அதேபோல், பேஸ்புக் அதிகம் பயன்படுத்தப்படும் பிரேஸில், ஜேர்மனி, இந்தியா, ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளிலும் மேலும் பாவனையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# எயார் டெல் வாடிக்கையாளர் நால்வர் பிரிட்டனுக்கு

பிரிட்டனில் இடம்பெறும் 'மேன்செஸ்டர் யுனைட்டெட்' கழகத்தின் உதைபந்தாட்ட நிகழ்ச்சியைக் கண்டு கழிப்பதற்காக எயார்டெல் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் நான்குபேர் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

லக்மால் பெரேரா, எஸ்.சலாஹுதீன், நளின் குருகுலசூரியகே மற்றும் ஜூலிட் செப்பப்ராகஸம் ஆகிய நால்வருமே தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

எயார்டெல் நிறுவனம் பாவனையாளர்களைக் குலுக்கல் முறை மூலம் தெரிவுசெய்து மேற்படி உதைபந்தாட்ட நிகழ்ச்சியைக் கண்டுகழிப்பதற்கு அவர்களை பிரிட்டனுக்கு அனுப்பும் போட்டி நிகழ்ச்சியை இந்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பித்து வைத்தது. அந்தத் திட்டத்தின் கீழ் முதன்முதலாக மேற்படி நான்குபேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் போட்டியைக் கண்டுகழிப்பதற்காக இந்த மாதம் 4 ஆம் திகதி லண்டன் செல்கின்றனர். அவர்களின் பயணத்திற்கான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்துவிட்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக எயார்டெல் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் கடந்த வாரம் நாரேஹேன்பிட்டியில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து விளக்கமளித்தனர்.

எயார்டெல்லின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சுரேன் குணவர்தன, சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் சரண் ஷெட்டி, பிற்கொடுப்பனவு பிரிவின் தலைவர் சதீஸ் ரட்ணாயக்க மற்றும் முற்கொடுப்பனவுப் பிரிவின் தலைவர் பரீன் முகைதீன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு விளக்கமளித்ததோடு வெற்றியாளர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 360 மில்லியன் ரூபா செலவில் திருக்கேதீஸ்வரம் புனரமைப்பு

### இந்திய அரசின் உதவியுடன் விரைவில் பணிகள்

யாழ்ப்பாணம், மே 8

திருக்கேதீஸ்வர ஆலயப் புனரமைப்புப் பணிகள் மிகப் பெரியளவில் 360 மில்லியன் ரூபா செலவில் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

**புனருத்தாரணப் பணிகளை ஆலய திருப்பணிச்சபை, இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ளது.**

இந்தப் புனருத்தாரணப் பணிகளை ஆலயப் திருப்பணிச்சபை, இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ளது. இலங்கையின் இந்து சமய வரலாற்றில் இதுவே மிகப் பெரிய ஆலய திருப்பணியாக அமையும் என்று அகில இலங்கை இந்துமா மன்றத்தின் செயலாளர் க.நீலகண்டன் தெரிவித்தார்.

இந்தத் திருப்பணி வேலைகளுக்காக தமிழ் நாட்டின் மாமல்லபுரத்தில் இருந்து சிற்பத்தூண்கள் எடுத்து வரப்படவுள்ளன என்றும் இந்திய சிற்பக் கலைஞர்களும் வருகை தரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

# தனி ஈழம் உருவாவதில் உடன்பாடற்ற குழுதான் இலங்கைக்குச் சென்றது

### திருமா எம்.பி. பிரதமருக்குக் கடிதம்

ஈழத்தை பற்றி கவலைப்படாத தனி ஈழம் தருவதில் உடன்பாடு இல்லாத ஒரு குழுதான் இலங்கைக்குச் சென்று திரும்பியுள்ளது. அந்தக் குழு சட்டபூர்வமான அதிகாரம் இல்லாமல் தான் சென்று திரும்பியுள்ளது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதியுள்ளார்.




அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தை பற்றி கவலைப்படாத தனிஈழம் தருவதில் உடன்பாடு இல்லாத ஒரு குழுதான் இலங்கை சென்று திரும்பியுள்ளது. அந்தக் குழு சட்டபூர்வமான அதிகாரம் இல்லாமல் தான் சென்று திரும்பி யுள்ளது. இந்த பயணம் பயனில்லாத பயணமாக அமைந்து விட்டது.

இன்றைய சூழ்நிலையில் இந்திய அரசு இலங்கையில் கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்த வேண்டும். சிங்கள இராணுவத்தின் அத்துமீறல்களைத் தடுக்க வேண்டும். தமிழர் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

இந்திய அரசு உடனடியாக இந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு திருமாவளவன் கூறினார். (வ)

# கோண்டாவில் பொது நூலகத்தின் வலுவூட்டல் நிகழ்வு



யாழ்ப்பாணம்,மே 8

கோண்டாவில் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் நூலக வலுவூட்டல் நிகழ்வின் 12 ஆவது நிகழ்வாக நீரிழிவு நோயும், பாதப்பராமரிப்பும் தொடர்பான ஆலோசனை வழங்குதலும், இலவச இரத்தப்பரிசோதனை வழங்கும் நிகழ்வும் கடந்த 4 ஆம் திகதி கோண்டாவில் பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் டாக்டர் யதுநந்தனன் இலவச இரத்தப் பரிசோதனையை மேற்கொண்டதுடன் நீரிழிவு நோய் தொடர்பான ஆலோசனைகளும் பாதப்பராமரிப்பு தொடர்பான விளக்கவுரைகளும் படங்கள் ரீதியாகவும் விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து கோண்டாவில் ஆயுள் வேத மருத்துவமனை டாக்டர் கா.நடேசன் ஆயுள்வேத வைத்திய முறையும் சிறந்த ஆரோக்கியம் என்பது தொடர்பான கருத்துரைகளையும் வழங்கினார்.

கோண்டாவில் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-14)

## லயன்ஸ் கழகங்களின் வருடாந்த ஒன்றுகூடல் நீர்கொழும்பில்

வவுனியா, மே 8

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் லயன்ஸ் கழகங்களுக்கான வருடாந்த ஒன்று கூடலும் பதவியேற்பு நிகழ்வும் எதிர்வரும் 12, 13 ஆகிய திகதிகளில் நீர்கொழும்பு ஜெற்விங் ப்ளூ ஹோட்டலில் நடைபெறவுள்ளன.

306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்ணாண்டோ தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 2011/2012 நடப்பு வருடகாலத்தில் சிறந்த சேவைகளை வழங்கிய கழகங்கள், கழகப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்படும்.

மறுநாள் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வில் புதிய மாவட்ட ஆளுநராக யாழ்ப்பாணம் மானிப்பாய் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் எஸ்.தங்கராஜா பொறுப்பேற்கவுள்ளார்.

யாழ்மாவட்டத்தில் லயன்ஸ் கழகம் ஆரம்பித்து 35 வருடங்களாகியும் முதன் முறையாக மாவட்ட ஆளுநராக லயன் எஸ்.எஸ்.தங்கராஜா பொறுப்பேற்கவுள்ளதுகுறிப்பிடத்தக்கது.

முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக சர்வதேசப் பணிப்பாளர் சுனில் வட்டவல கலந்துகொள்வர். (வ-9)

# புங்குடுதீவு- குறிகாட்டுவான் வரை மின்னிணைப்பு வழங்கப்படவில்லை

### மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 8

புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தியில் இருந்து குறிகாட்டுவான் துறைமுகம் வரையான பகுதிக்கு இதுவரைக்கும் மின்சார இணைப்பு வழங்கப்படாதது குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரையான இந்தப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்காகக் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே மின்கம்பங்கள் அங்கே பறிக்கப்பட்டு தவம் கிடக்கின்றன.

ஆனால் இதுவரைக்கும் மின் இணைப்பு வழங்குவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

குறிகாட்டுவான் பிரதான வீதியில் அதுவும் துறைமுகம் வரையிலான பகுதியிலான குறுகிய பகுதிக்கு இவ்வாறு மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே இந்தப் பகுதிக்கான மின் இணைப்பை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

# இலங்கையர்களின் சடலங்களை நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை

தென்கொரியாவில் உயிரிழந்த மூன்று இலங்கையர்களினதும் சடலங்களை பிரேத பரிசோதனைகளின் பின்னர் நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரசார முகாமையாளர் கல்யாணப்பிரியராமநாயக்க தெரிவித்தார்.

**மொரவக்கயைச் சேர்ந்த கயான் சாமர அத்தநாயக்க, மஹியங்கனையைச் சேர்ந்த திலங்க ஷஷிக சம்பத் ஜயசூரிய மற்றும் கோனாபலயைச் சேர்ந்த ஜே.ஏ.கெமுனு ஜயகொடி ஆகிய மூவரே உயிரிழந்துள்ளனர்**

மொரவக்கயைச் சேர்ந்த கயான் சாமர அத்தநாயக்க, மஹியங்கனையைச் சேர்ந்த திலங்க ஷஷிக சம்பத் ஜயசூரிய மற்றும் கோனாபலயைச் சேர்ந்த ஜே.ஏ.கெமுனு ஜயகொடி ஆகிய மூவரே உயிரிழந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தென்கொரியாவின் பூஸான் நகரிலுள்ள களியாட்ட விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 25 பேர் காயமடைந்தனர்.

தீ பரவிய சந்தர்ப்பத்தில் அங்கிருந்தவர்கள் வெளியேற முற்பட்டபோது விஷ வாயுவை சுவாசித்ததன் காரணமாக குறித்த நபர்கள் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

ஆறு மாடிகளைக் கொண்ட களியாட்ட விடுதியில் 28 அறைகளைக் கொண்ட மூன்றாவது மாடியில் இந்த தீ விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இலங்கை இறப்பர் தொழிலில் சீரமைப்பு அவசியம் தேவை

### தோட்டத்துறை ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு,மே8

இறப்பர் தயாரிப்பில் உலகின் 9 பெரிய நாடுகளில் ஒன்றான இலங்கை, அந்தத் தொழிலில் கவனம் செலுத்த வேண்டிய அளவுக்குப் பிரச்சினைகள் வளர்ந்துள்ளன. அரசு இதில் தலையிட்டு உடனே சீரமைப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு மூத்த தோட்டத்துறை ஆலோசகர் டாக்டர் என். யோகரத்னம் தெரிவித்தார்.

1970-களில் 2 லட்சம் ஹெக்ரேயருக்கும் மேற்பட்ட நிலங்களில் இறப்பர் மரச் சாகுபடி நடந்தது. 2011இல் அது 1,01,720 ஹெக்ரேயராகச் சரிந்துள்ளது. 2009 இல் 3,600 ஹெக்ரேயரில்தான் இறப்பர் மறு உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த நிலையில் அரசு விரும்புவது போன்று 40,000 ஹெக்ரேயரில் உற்பத்தி [illegible] எட்டுவது சாத்தியமல்ல. இறப்பர் உற்பத்திப் பரப்பு குறைந்தாலும் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. 2004 இல் 947 லட்சம் கிலோவாக இருந்த இறப்பர் உற்பத்தி 2011இல் 1,579 லட்சம் கிலோவாகியிருக்கிறது. ஆனால் ஒரு ஹெக்ரேயரில் விளைச்சலோ இந்தியா, வியட்நாம் ஆகிய நாடுகளைவிடக் குறைவு. இந்தியாவில் ஒருஹெக்ரேயரில் 1,835 கிலோ இறப்பர் கிடைக்கிறது. வியட்நாமில் ஒரு ஹெக்ரேயரில் 1,733 கிலோ கிடைக்கிறது. இலங்கையிலோ அது 1,728 கிலோவாகவே இருக்கிறது.

இலங்கையில் சாத்தியமான உற்பத்தி அளவைவிட 50 வீதம் குறைவாகவே இறப்பர் உற்பத்தி இருக்கிறது. கார்ப்பரேட் நிறுவன இறப்பர் தோட்டங்களில் முழு உற்பத்திக் கொள்ளளவில் 40 வீதம்தான் எட்டப்படுகிறது. உயர் விளைச்சல் தரும் இறப்பர் ரகங்களை இலங்கை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தே தீர வேண்டும். இதை இலங்கை ஆய்வாளர்கள் செய்யாவிட்டால் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் மரபணுரீதியாக மாற்றப்பட்ட புதிய ரப்பர் மரக் கன்றுகளைத் தயாரித்து உற்பத்திக்குத் தருவார்கள். அதன் விலையும் அதிகமாக இருக்கும் .

இலங்கையில் இறப்பர் உற்பத்தியில் இருக்கும் நிலங்களில் பெரும்பான்மையானவை சிறு உற்பத்தியாளர்கள் வசம் உள்ளன. மொத்தமுள்ள 1,24,300 ஹெக்ரேயரில் 72,719 ஹெக்ரேயர் சிறு உற்பத்தியாளர்களிடமும் 51,581 ஹெக்ரேயர் பெரிய தோட்டத் தொழிலதிபர்கள் வசமும் உள்ளன.

சிறு நில உடமையாளர்களுக்குக் கல்வியறிவு குறைவு, அவர்கள் வறியவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு ஹெக்ரேயரில் குறைந்த பட்சம் 500 மரங்கள் இருக்க வேண்டும். ஆனால் சிறு உற்பத்தியாளர்களின் நிலங்களிலும் பெரிய தோட்டத் தொழிலதிபர்களின் நிலங்களிலும் இதற்கும் குறைவாகவே மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

இதற்கு வரட்சியும் சத்து குறைவான மரங்களுமே காரணம் என்றும் தெரியவருகிறது. இறப்பர் உற்பத்தியாளர்களிடம் அதிக அளவு நிலப்பரப்பு இருந்தால்தான் லாபகரமாக செய்யமுடியும். சிறு விவசாயிகளால் நிலங்களை வாங்கிச்சேர்க்க முடியாது.

இறப்பர் உற்பத்தியாளர்களுக்கான மானியங்களை விநியோகிப்பதில் அரசு ஏற்படுத்தும் தாமதம், இறப்பரை விற்பதில் உள்ள இடர்கள், இறப்பர் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி இல்லாமை ஆகிய காரணங்களால்இறப்பர் உற்பத்தியில் உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறது -என்றார் யோகரத்னம். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ராருக்கு சுலபமான வெற்றி

## சுருண்டது ஸ்கந்தா ஸ்ரார்

**மள மளவென ஜொலிஸ்ரார் அணியின் இலக்குகள் சரிந்தபோது துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்ததால் அந்த அணி இத்தகைய இமாலய இலக்கை அடைய முடிந்தது.**

வலி. வடக்கு, மே 8

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி இலக்காக நிர்ணயித்த இமாலய இலக்கை ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் எட்ட முடியாது போனதால் அந்த அணி சுலபமாக 139 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 28.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. மள மளவெள அந்த அணியின் இலக்குகள் சரிந்தபோது துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்ததால் அந்த அணி இத்தகைய இமாலய இலக்கை அடைய முடிந்தது.

ஜொலிஸ்ரார் அணி சார்பில் கார்த்திக் 58 ஓட்டங்களும், மதுசன் 55, ஓட்டங்களும் மணிவண்ணன் 33ஓட்டங்களும், கல்கோபன் 31ஓட்டங்களும், சைலேஸ்வரன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விஷ்ணுப்பிரகாஸ் 04 இலக்குகளையும், ஜனக்சன், கிருஷ்ணசந்திரா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சஞ்சஜயன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

249 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ராரின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 19.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

கிருஷ்ணசந்திரா 37 ஓட்டங்களையும், நிஷாகரன் 25 ஓட்டங்களையும் ஸ்கந்தா ஸ்ரார் அணி சார்பாகப் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் கிடைத்தன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மதுசாந் 4 இலக்குகளையும் ஜனார்த்தன் 3 இலக்குகளையும் சஞ்சித் 2 இலக்குகளையும் சைலேஸ்வரன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள். (ங-86)

# அதிரடியான ஆட்டத்தால் கலக்கியது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம் மே,8

அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையே நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி ஆட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுகழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளயாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்கினை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜன்சன் 69 ஓட்டங்களையும் ,யுவராஜ் ஆட்டம் இழக்காமல் 38 ஓட்டங்களையும்,சதீஸ் கண்ணா30 ஓட்டங்களையும் பிரசாந்தன் 26 ஓட்டங்களையும்,வைகுந்தன் 21 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிசார்பாக விதுஷன் ,லவேந்திரா ஆகியோர் 6 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும்,காண்டீபன் 6 ஓவர்கள் பந்துவீசி 44 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும்,அகிலன் 6 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

207 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 23 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்கினை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காண்டீபன் ஆட்டம் இழக்காமல் 41 ஓட்டங்களையும்,றஜிந்தன் 54 ஓட்டங்களையும் குமணன் ,கஜீபன் ஆகியோர் முறையே 34 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யூனியன் விளையாட்டுக்கழக அணி சார்பாக தட்சயன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்கினையும் வைகுந்தன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், யுவராஜ் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினர். (த-23-86)

# முல்லைத்தீவில் விளையாட்டு விழா

கொழும்புத்துறை,மே 8

முல்லைத்தீவு இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலய திருவிழாவை ஒட்டி இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும், பொது அமைப்புகளும் இணைந்து விளையாட்டு விழா,கலைநிகழ்வுகளை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு இடம்பெறும் திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து ஆண்களுக்கான 70 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான 30 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான 15 கிலோமீற்றர் மரதன் ஓட்டம் என்பன நடைபெறவுள்ளதாக சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அன்று மாலை மைதான விளையாட்டு நிகழ்வுகளும் இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இப்பகுதியில் ஏற்பட்ட இடப் பெயர்வுகளுக்கு பின்னர் இம்முறை பெரிய அளவில் திருவிழாவும், விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-135)

# முஸ்லிம் ம.வி. சம்பியன்

வவுனியா,மே 5

வவுனியா மாவட்ட பாடசாலை அணிகளுக்கானமாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் வென்று மாவட்டச் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் புதுக்குளம் மகாவித்தியாலயமும் முஸ்லிம் மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன. மிகவும் விறு விறுப்பாக இடம் பெற்ற ஆட்டத்தின் முதல் பாதியின் போது எந்த ஒரு அணியும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி சற்று நேரத்தில் முஸ்லிம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாபாஸ் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு அசத்தினார். அடுத்து அவ்வணியைச் சேர்ந்த றிம்சான் மேலும் ஒரு கோலைப் போட்டு தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் முஸ்லிம் மகாவித்தியால அணி 3:0 என்ற கோல் அடிப்படையில் வென்று கிண்ணத்தைத் தனதாக்கியது. (த-400)

**விளையாட்டுத்துறை செய்தியாளர்கள் தேவை**

'உதயனி'ல் விளையாட்டுத்துறைச் செய்தியாளராகப் பணிபுரிய ஆர்வமுடையவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

உங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல்:
editor@uthayan.com

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 8

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 15 வயது, 17 வயது, 19 வயது அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகள் விக்னேஸ்வராக் கல்லூரி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கான போட்டி திக்கம் மைதானம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கான போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானம், கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதே வேளை யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் 8ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் இமையாணன் அ.த.க பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ங-23)

* * *

யாழ்ப்பாணம், மே.8

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 19, வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ங-23-400)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் போட்டிகள்

முல்லைத்தீவு,மே 8

முல்லை மாவட்டத்தின் தேசிய இளைஞர் மன்றத்தினரால் இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளதாக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி கே.டி.சி காமினி தெரிவித்துள்ளார் இதன் படி பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட இடங்களில் போட்டிகள் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

8 ஆம் திகதி ஆண் பெண்களுக்கான குழுப் போட்டிகளான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

9 ஆம் திகதி ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டிகள் கரைத்துறைப்பற்று முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

10 ஆம் திகதி ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லேப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி என்பன புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

14 ஆம் திகதி கிரிக்கெட் போட்டி ஒட்டிசுட்டான் சமளங்குளம் 63 ஆவது இராணுவ பிரிவு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

17 ஆம் திகதி கரம் போட்டி மாங்குளம் ஏ 9 வீதியில் அமைந்துள்ள மாவட்ட செயலக காரியாலத்தில் இடம் பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15,19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (த-23- 400)

## பரபரப்பான பரிமாற்றம்...



யாழ்.மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், நாவாந்துறை றோ.க.த. வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் நாவாந்துறை றோ.க.த வித்தியாலயம் வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைக்கு பரபரப்பு வெற்றி



ஐ.பி.எல். பரபரப்பான லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி இரண்டு இலக்குகள் வித்தியாசத்தில்சென்னைஅணியை வெற்றி கொண்டது. மும்பையில் நேற்று நடந்த ஐந்தாவது ஐ.பி.எல். தொடரின் 49ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணித்தலைவர் ஹர்பஜன் முதலில் பந்துவீசத் தீர்மானித்தார்.

சென்னை அணி சார்பாக டுபிளசிஸ், முரளிவிஜய் ஆரம்ப இணையாகக் களமிறங்கி சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். எனினும் டு பிளசிஸ் (9) 'ரன் அவுட் ஆனார். எனினும் மீண்டும் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட முரளிவிஜய் அதிரடியாக ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கினார். இவருக்கு இணையாக ரெய்னா சிறப்பாக ஆடினார். தொடர்ந்து ஆர்.பி. சிங்கின் பந்துவீச்சில் முரளிவிஜய் (41) வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து களமிறங்கிய பிராவோ சிறப்பாக ஆட அணி 14.1 பந்துப் பரிமாற்றங்களில் 114 ஓட்டங்களைப் பெற்றவேளை சுரேஸ்ரெய்னா (36) ஆர்.பி. சிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார்.

பிராவோவுடன் இணைந்த டோனி தனது பங்கிற்கு ஓட்டங்களை சேகரிக்க 17.5 பந்துப் பரிமாற்றங்களில் அணி 158 ஓட்டங்களை எடுத்த வேளைசிறப்பாகஅதிரடிகாட்டிய பிராவோ மலிங்கவினால் வெளியேற்றப்பட்டார். இறுதி இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் மாத்திரம் 4 இலக்குகளை பறி கொடுத்தது சென்னை. இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 173 ஓட்டங்களை 8 இலக்குகளை இழந்து பெற்றது சென்னை.

கடினமான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு சென்னை பந்து வீச்சாளர்கள் ஆரம்பத்தில் சிறப்பாக பந்து வீசி பிராங்ளின் (1) வெளியேற்றினர். பின்னர் சச்சினுடன் இணைந்தார் ரோகித் சர்மா. இவர்கள் இருவரும் இணைந்து சென்னைப் பந்து வீச்சாளர்களின் பந்துகளைத் துவசம் செய்தனர். அணி 15.5 பந்துப் பரிமாற்றங்களில் 134 ஓட்டங்களை எடுத்த போது மிகவும் சிறப்பாகவிளையாடிஅரைச்சதம் கடந்த நிலையில் 75 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கி டு பிளஸிடம் பிடி கொடுத்து வெளியேறினார் சச்சின். இதனைத் தொடர்ந்து தினேஸ் கார்த்திக் (11) ராயுடு (0) வந்த வேகத்திலேயே பவிலியன்திரும்பினார். சிறப்பாக விளையாடிய ரோகித் சர்மா அணி 149 ஓட்டங்களைப் பெற்றபோது ஜடேயாவின் பந்து வீச்சில் 60 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். ரொபின் பிட்டர்சன், ஹர்பஜன்சிங், மலிங்க ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழக்க, மும்பை அணி 19.2 பந்துப் பரிமாற்றங்களில் 159 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் சென்னையின் பந்து வீச்சை துவசம்செய்தஸ்ரீபன்ஸ்மித்மும்பை அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். இறுதியில் மும்பை அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

**இறுதி 3 பந்துகளில் 16 ஓட்டங்களை விளாசிய ஸ்ரீபன் ஸ்மித் ஆட்ட நாயகனாகத் தெரிவானர்.**



# தொடரும் டெக்கானின் தோல்வி

ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் டீ வில்லியர்ஸ் 17 பந்துகளில் 47 ஓட்டங்கள் விளாச, பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. டெக்கான் அணி மீண்டும் ஒரு முறை பரிதாபமாக வீழ்ந்தது.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 50 ஆவது லீக் ஆட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. 'போர்ம்' இல்லாத வெற்றோரி தாமாகவே விலகிக் கொள்ள, பெங்களூர் அணியின் தலைமைப் பொறுப்பை விராத் ஹோக்லி ஏற்றார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹோக்லி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.


டெக்கான் அணிக்கு டானியல் ஹாரிஸ், ஷிகர் தவான் சேர்ந்து வலுவான அடித்தளம் அமைத்தனர். பெங்களூர் பந்துவீச்சை விளாசித் தள்ளிய இவர்கள், விரைவாக ஓட்டங்கள் சேர்த்தனர். சகிர் பந்தில் ஹாரிஸ் ஒரு இமாலய சிக்சர் அடித்தார். தொடர்ந்து டில்ஷானின் பந்துப் பரிமாற்றத்தில் 2 சிக்சர்கள், ஒரு பவுண்டரி அடித்தார். முதல் இலக்குக்கு 86 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஹாரிஸ் (47) 'ரன் அவுட்டானார்'. அடுத்து வந்த கம்ரான் வையிட் அதிரடியாக ஆடினார். அபிமன்யு மிதுன் பந்துப் பரிமாற்றத்தில் ஒரு சிக்சர், 2 பவுண்டரிகள் விளாசினார். மறுபக்கம் பரமேஸ்வரன் பந்துப் பரிமாற்றத்தில் தவான் ஒரு பவுண்டரி, சிக்சர் அடிக்க, ஓட்ட எண்ணிக்கை ஜோராக உயர்ந்தது. பரமேஸ்வரன் பந்தில் வையிட் (45) ஆட்டமிழந்தார். டெக்கான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 181 ஓட்டங்கள் எடுத்தது. தவான் 73 (52 பந்துகளில், 10 பவுண்டரிகள், 1 சிக்சர்), அணித்தலைவர் சங்ககரா (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடின இலக்கை துரத்திய பெங்களூர் அணிக்கு டில்ஷான், கெய்ல் இணைந்து சிறப்பான ஆரம்பத்தை அமைத்தனர். தவான் வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் டில்ஷான் 2 பவுண்டரிகள் அடித்தார். மறுபக்கம் அடக்கி வாசித்த கெய்ல், ஆனந்த் ராஜன் பந்தில் ஒரு இமாலய சிக்சர் விளாசினார். அடுத்த பந்தில் இவர் 26 ஓட்டங்களுக்கு 'போல்டானார்'. முதல் இலக்குக்கு கெய்ல்-டில்ஷான் ஜோடி 91 ஓட்டங்கள் குவித்தது.

இதற்குப் பின் வந்த துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர். அமித் மிஸ்ரா வீசிய ஆட்டத்தின் 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஹோக்லி (9), பதான் (4) ஆட்டமிழந்தனர். நன்கு விளையாடிக் கொண்டிருந்த டில்ஷான் (71), பிரதாப் சிங் பந்தில் 'போல்டாக', பெங்களூர் அணி 15.2 பந்துபரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 117 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. மயான்க் அகர்வால் (18) அதிக நேரம் நீடிக்கவில்லை.

கடைசிக் கட்டத்தில் டீ வில்லியர்ஸ் வாணவேடிக்கை காட்டினார். சக தென்னாபிரிக்க வீரரான ஸ்ரைன் வீசிய 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மொத்தம் 23 ஓட்டங்கள் (6, 2, 4, 6, 4, 1) விளாசினார். தொடர்ந்து ஆனந்த் ராஜன் பந்துப் பரிமாற்றத்தில் 2 பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடித்து, போட்டியை பெங்களூர் வசப் மீண்டும் கொண்டு வந்தார். அடுத்த பந்தை சயத் பவுண்டரிக்கு விரட்ட, பெங்களூர் அணி 18.5 பந்துபரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 185 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டீ வில்லியர்ஸ் 47 (17 பந்துகள், 5 பவுண்டரிகள், 3 சிக்சர்கள்), சயத் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை டீ வில்லியர்ஸ் வென்றார்.





**கெய்ல் 100 ''சிக்சர்கள்'**

**ஐ.பி.எல்., வரலாற்றில் 100 சிக்சர்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார் பெங்களூர் அணியின் கிறிஸ் கெய்ல். அமித் மிஸ்ரா பந்தை சிக்சருக்கு விரட்டிய போது, இந்த மைல்கல்லை எட்டினார். இவர் 38 போட்டியில் மொத்தம் 101 சிக்சர்கள் அடித்துள்ளார். அடுத்த இடத்தில் சென்னை அணியின் ரெய்னா (74 போட்டியில், 87 சிக்சர்கள்) உள்ளார்.**

**✱ இந்தத் தொடரில் அதிக சிக்சர் (10 போட்டியில், 31 சிக்சர்கள்) அடித்தவர்கள் பட்டியலில் கெய்ல் முதலிடத்தில் நீடிக்கிறார். அடுத்த இடத்தில் டில்லி அணியின் பீற்றசன் (8 போட்டியில், 20 சிக்சர்கள்) உள்ளார். (5)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எப்.ஏ.கிண்ணத்தைக் கைப்பற்றியது செல்ஷி

இங்கிலாந்தின் எப்.ஏ கிண்ணத்தை செல்ஷி கழகம் கைப்பற்றி 2012 ஆம் ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் வெம்ப்ளி மைதானத்தில் இடம்பெற்ற எப்.ஏ கிண்ண இறுதிப் போட்டியில் லிவர்பூல் உதைபந்தாட்டக் கழகத்தை செல்ஷி உதைபந்தாட்டக் கழகம் 2 - 1 என்ற அடிப்படையில் வெற்றிகொண்டே இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய செல்ஷி கழகம் 11 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை அடித்து ஆரம்பநிலை ஆதிக்கத்தைப் பெற்றது. அதன் பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்க முனைந்த போதிலும் முதற்பாதி வரை மேலதிக கோல் எதுவும் அடித்திருக்கப்படவில்லை. இதன் காரணமாக முதற்பாதியின் முடிவில் செல்ஷி கழகம் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாம் பாதி ஆரம்பித்ததுடன் செல்ஷி கழகம் மீண்டும் கோல் போடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டது. போட்டியின் 52 ஆவது நிமிடத்தில் செல்ஷியின் ட்ரோக்பா



கோலொன்றை அடிக்க செல்ஷி கழகம் 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

64 ஆவது நிமிடத்தில் லிவர்பூல் கழகம் சார்பாக கரொல் கோலொன்றைப் பெற்றுக் கொண்ட போதிலும் மேலதிக கோல்களைப் பெற்றுக்கொள்ள இரு அணிகளும் தவறின.

இறுதியில் செல்ஷி கழகம் 2 - 1 என்ற அடிப்படையில் போட்டியில் வெற்றி பெற்று சம்பியனானது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்று சம்பியனானதன் மூலம் கடந்த 6 வருடங்களில் செல்ஷி அணி 4 தடவைகள் எப்.ஏ கிண்ண சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. அத்தோடு இதுவரையில் 7 தடவைகள் அந்த அணி எப்.ஏ கிண்ணத்தில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. நடப்பு சம்பியன்களான மன்செஸ்டர் சிட்டி கழகம், தங்களது பரம எதிரிகளான மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தால் மூன்றாம் சுற்றில் தோற்கடிக்கப்பட்டனர்.

அத்தோடு இந்த ஆண்டு இடம்பெற்ற தொடரில் பொல்ட்டன் வன்டெரரர்ஸ் அணியின் மத்திய கள வீரர் பப்ரிஸ் முவாம்பே ஆறாம் சுற்றுப் போட்டியொன்றின் போட்டி நேரத்தின் போது மைதானத்தில் இருதய அடைப்பு காரணமாக மயங்கி வீழ்ந்தார்.

75 நிமிடங்களுக்கு மேலாக அவரது இதயம் தொழிற்படாத போதிலும், அவர் வைத்தியர்களின் சிகிச்சையின் காரணமாக காப்பாற்றப்பட்டதோடு இறுதிப் போட்டியையும் பார்வையிட்டிருந்தார். (5)


**பணிப் பெண் தேவை**

வயோதிபத் தம்பதியினரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 2987506
077 6622238


## இலங்கை கிரிக்கெட்டின் தேர்வாளர் இராஜினாமா அரசியல் அழுத்தம் காரணமா?

இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வாளர் பதவியிலிருந்து விலகுவதற்கான இராஜினாமாக் கடிதத்தை அமல் சில்வா விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் கையளித்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காகவே குறித்த பதவியிலிருந்து விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவி விலகுவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் கடுமையான அரசியல் அழுத்தம் காரணமாகவே அவர் அந்தப் பதவியை இராஜினாமா செய்ததாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

51 வயதான அமல் சில்வா, கடந்த ஜனவரி மாதத்தின் இறுதிப் பகுதியில் அசந்த டிமெல் தலைமையிலான புதிய தேர்வுக்குழு விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயால் நியமிக்கப்பட்டிருந்தார். புதிய தேர்வுக்குழு ஒரு வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டு 3 மாதங்களிலேயே அமல் சில்வா பதவி விலகியுள்ளார்.

தான் பதவி விலகியதை உறுதிப்படுத்திய அமல் சில்வா, விளையாட்டுத்துறை அமைச்சரிடம் இராஜினாமாக் கடிதத்தைக் கையளித்ததை உறுதிப்படுத்தினார்.

இதற்கு முன்னர் 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கு முன்னரான அரவிந்த டீ சில்வா தலைமையிலான தேர்வுக்குழுவிலும் அமல் சில்வா இடம்பெற்றிருந்தார்.

பதவி விலகியுள்ள அமல் சில்வாவிற்கு பதிலாக மாற்றுத் தேர்வுக்குழு உறுப்பினர் நியமிப்பது தொடர்பாகவோ அல்லது யாரை நியமிப்பது தொடர்பாகவோ விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதுவரை அறிவிக்கவில்லை. (5)


**A/L பொருளியல் வினா - விடை**

பரீட்சையில் எதிர்பார்க்கக் கூடிய முற்றிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட கட்டமைப்பு மற்றும் MCQ வினாக்கள் - விடைகளுடன் கூடிய நூல்.

விலை ரூபா 60/=

ஆசிரியர்:- வே. கருணாகரன்

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

**Join With Our Leading Team**

**VACANCIES**

To Invite well qualified and experinced personnel to fill the following posts immediately

- Branch Manager (Jaffna) (Male or Female)
- Marketing Execuive (Jaffna, Kilinochchi, Nelliyady) (Male or Female)
- Technician
- Net Cafe Maintains
- Office Boy
- Driver

Please forward you,re CV on or before 11-05-2012 to



The Managing Director,
MARSHA GROUP
74, Kannathiddy Road,
Jaffna.
E.Mail:- kmaran77@yahoo.com

**யாழ்ப்பாண பத்திரிகை வரலாற்றில் முதன்முறையாக "விசாஆலோசனை" துறையை சார்ந்த முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம் "திசைகாட்டி" பத்திரிகையாளர்களை எதிர்கொண்டது**

எமது நிறுவனம் பகிரங்கத்தனமான நிர்வாகத்தன்மையையும், கண்ணியமான வியாபார நடவடிக்கைகளையும் சமூக அக்கறையையும் எமது உறவுகளுக்கு எடுத்துச் சொல்வதற்காக 05.05.2012 அன்று பத்திரிகையாளர்கள் சந்திப்பினை TILKO HOTEL இல் நடத்தியது.





திசைகாட்டியின் ஸ்தாபகர் சட்டத்தரணி V.S நிறைஞ்சன் திசைகாட்டியின் இயக்குநர்சபை உறுப்பினர் திரு.S.செல்வராஜ் (பட்டயக்கணக்காளர்) கலந்துரையாடுகின்றனர்

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**

தலைமைக்காரியாலயம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0212219016



கிளைகள்

22A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443

115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி 0212285544

504B, Hampton Street Melborn, Australia 0061390437100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.